
www.padippakam.com

1-15 பிப். '93 ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்

## இந்து வெறியர்களின் ஆவேசத் தாக்குதல் பணியுது காங்.அரசு



படிப்பகம்

www.padippakam.com

*காஷ்மீர், பஞ்சாப்:*

# அரசு பயங்கரவாத ரத்தச் சுவடுகள்!

காஷ்மீர், பஞ்சாப் - மனிதக் கொலைகள் நாளும் மிகவும் சர்வ சாதாரண நிகழ்வாகிப் போனது. 'சட்டத்தின் ஆட்சி' என பெருமைபட கூறிக் கொள்வதெல்லாம், இன்று அம்மாநிலங்களில் நடைபெறும் 'துப்பாக்கி ஆட்சி''யின் முன்பு பழங்கதையாகிப் போனது. தீவிரவாதிகளின் இறப்புக்கு 'மோதல்', 'துப்பாக்கி பிரயோகம் நடந்தது' என்றவாறு காரணங்கள் சொல்லப்பட்டு வருகின்றன. அதுமட்டுமின்றி 'பிடித்துச் செல்லும் பொழுது விஷம் அருந்திவிட்டார்', 'குண்டுகள் துளைத்த சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன', 'போராளி குழுக்களிடையே நடந்த மோதலில் இறந்து போனார்', 'எல்லையைக் கடக்க முயன்றபொழுது கொல்லப்பட்டார்' என்றும் தலைமை போலீசு அதிகாரிகளால் செய்திகள் கொடுக்கப்படுகின்றன. சமீப காலங்களில், இறந்து போனவர்கள், தலைக்கு பரிசுத் தொகை அறிவிக்கப்பட்ட உயர்மட்ட தலைவர்கள் எனப் போலீசாரால் அடையாளம் காட்டப்படுவதுடன், அவர்கள் நூற்றுக்கணக்கான கொலைகளிலும், கொள்ளைகளிலும் பங்கெடுத்துக் கொண்டவர்கள் எனக் குற்றம் சாட்டப்படுகின்றனர்.

○ நவம்பர் 2-ல், 86 கொலைகள் புரிந்தவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டவர்களும், தங்களின் தலைகளுக்கு பல லட்சக் கணக்கான பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டவர்களுமான 5 சீக்கிய தீவிரவாதிகள் போலீசாருடன் நடந்த மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

○ நவம்பர் 3 அன்று சுட்டுக் கொல்லப்பட்ட 12 சீக்கிய தீவிரவாதிகளில், 50 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட்டுள்ள இராணா பிரதாப் சிங்கும் ஒருவர். இவர், பம்பாயில் இறந்து போயுள்ளார்.

○ நவம்பர் 4 அன்று இறந்து போன 10 காஷ்மீர் தீவிரவாதிகளில், ஒருவர் சைக்கிளில் எடுத்துச் சென்ற வெடிகுண்டு வெடித்ததில் இறந்து போனதாகவும், ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகவும், முஷ்டாக் அகமது, அப்துல் ரஷீது - இருவரின் உடல்களும் குண்டு துளைத்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

○ 2.5 லட்சம் பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட்டுள்ள, காலிஸ்தான் விடுதலைப் படையைச் சேர்ந்த பரம்ஜித் சிங் நவம்பர் 6-ல் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

○ '100 ரயில் பிரயாணிகளைச் சுட்டுக் கொன்றவன்'' எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவரும், 10 லட்சம் ரூபாய் தனது தலைக்கு பரிசுத் தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளவருமான கரஜ் சிங் நவம்பர் 8-ல் மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

○ நவம்பர் 24-ல் 5 தீவிரவாதிகள் காஷ்மீரில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இது தவிர, அடையாளம் தெரியாத ஒருவர் எல்லைப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

○ டிசம்பர் 6 அன்று கொல்லப்பட்ட 6 தீவிரவாதிகளில் ஹர்மீத்சிங்கும் ஒருவர். இவர் தனது மனைவியுடனும், தனது மகனுடனும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

○ டிசம்பர் 8-ல் காஷ்மீரில் இறந்து போன 4 தீவிரவாதிகளில் ஒருவர் துப்பாக்கி பிரயோகத்தின் போதும், ஒருவர் குழுக்களிடையே நடந்த மோதிலிலும் கொல்லப்பட்டுள்ளனர்.

○ டிசம்பர் 28 அன்று இறந்து போன ஆறு தீவிரவாதிகளில், இருவர் மருத்துவ பரிசோதனைக்காக போலீசாரால் அழைத்துச் செல்லப்படும் பொழுது, போலீசாரை நோக்கி சுட முயன்ற பொழுதும் கை எறிகுண்டை வீச முயன்றபொழுதும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

○ ''பாப்பர் கால்ஸா'' எனும் சீக்கிய தீவிரவாத அமைப்பின் சர்வதேச தலைவர் தரம் சிங் கஸ்திவாலின் இருப்பிடத்தை போலீசார் சுற்றி வளைத்த பொழுது, தற்கொலை செய்து கொண்டதாக டிசம்பர் 29 பத்திரிக்கை செய்திகள் கூறுகின்றன.

— இவையன்றி, கடந்த நவம்பரிலும், டிசம்பரிலும் காஷ்மீரிலும் பஞ்சாபிலும் இறந்து போன மொத்த தீவிரவாதிகளின் எண்ணிக்கை முறையே 112-ம், 207-மாகும். இவற்றுள் கொடிய தீவிரவாதிகள் என வகைப்படுத்தப்பட்டோர் முறையே 21-ம், 31-மாகும்.

இவைபோன்ற மோதல்களில், இந்த இரண்டு மாதங்களில் இறந்து போன அப்பாவி பொதுமக்களின் எண்ணிக்கை காஷ்மீரில் 63; பஞ்சாபில் 22 ஆக உள்ளது.

இந்த இரண்டு மாதங்களில் மட்டும், கொடிய தீவிரவாதிகளைக் களையெடுத்ததன் விளைவாக போலீசாருக்கு கிடைக்கக் கூடிய பரிசுத் தொகை 1 கோடி ரூபாய்க்கும் மேல்.

இம்மாநிலங்களில் நடைபெறும் போலீசாரின், இராணுவத்தினரின் அத்துமீறல்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிடும் வண்ணம் அரசியல் மாற்றங்கள் நடைபெறுவது மக்களின் கவனத்தை திசை திருப்ப ஆட்சியாளர்களுக்கு சாதகமாகி விடுகின்றன. அம்பலப்படுத்தும் மனித உரிமை இயக்கத்தினர், ஜனநாயகவாதிகள் போன்றோரும் அரசின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். ஆனால், 'பஞ்சாபில் உள்ளூர் ஜனநாயக அமைப்புகள் இயங்கும் அளவில் நிலைமை முன்னேறியுள்ளது', 'காஷ்மீர் கட்டுப்பாட்டுக்குள் வந்து கொண்டிருக்கிறது' என மாநில நிர்வாகங்கள் புளுகுகின்றன. ●

பம்பாய் போலீசாரால் 'தீவிரவாதி' என்ற பெயரில் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரு சீக்கியர்; அரசின் ரத்த வெறிக்கு சாட்சி!



## கொலைப் படை!

கடந்த புதனன்று, போராளிகள் இரு எல்லை பாதுகாப்பு படை வீரர்களைத் தாக்கி காயப்படுத்தியதைக் காரணமாகக் கொண்டு, அப்படை வீரர்கள், காஷ்மீர் பள்ளத்தாக்கின் வட மேற்கிலுள்ள சோபூர் எனும் சிற்றூரை கொலைக்களமாக மாற்றியுள்ளனர். பகுதி மக்கள் மீது தாறுமாறாகச் சுட்டும், கடைகளுக்கும் வீடுகளுக்கும் தீ வைத்தும் தனது இரத்தப் பசியை மற்றுமொரு முறை தீர்த்துக் கொண்டுள்ளது இத்துணை ராணுவப் படை. திட்டமிட்டே, தீயணைப்பு படையினருக்கு இரண்டு மணி நேரம் கழித்து தகவல் கொடுத்து, அம்மக்களின் பத்து லட்சக்கணக்கான மதிப்புள்ள சொத்துக்களை நாசப்படுத்தி, நூற்றுக்கும் அதிகமான மக்களைப் படுகொலை செய்துள்ளது. முதலில், போராளிகளுக்கும், ராணுவ வீரர்களுக்கும் துப்பாக்கி சண்டை நடந்ததன் விளைவாக பொது மக்கள் 50 பேர் இறந்து போனதாகவும், ஒரு வீட்டில் போராளிகள் பதுக்கி வைத்திருந்த வெடிமருந்துகள் வெடித்ததால் தீ விபத்து ஏற்பட்டதாகவும் அரசு தனது வழக்கமான புளுகு மூட்டையை அவிழ்த்தது; நிலைமை கைமீறவே, உண்மையை ஒத்துக் கொண்டு, 'துரதிருஷ்ட வசமாக நடந்துவிட்டது', 'விசாரணை நடத்தப்படும்' என நீலிக் கண்ணீர் வடிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

5 - 6

ஜன. 16 '92 — பிப். 15 '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# காவி அங்கி நீதிபதிகள்!

அயோத்தி பாபரி மசூதியை இடித்துத் தகர்த்துவிட்டு அந்த இடத்தில் கிரிமினல் முறையில் திடீரென்று கட்டப்பட்ட ராமன் கோவிலில் வழிபாடு நடத்தும் உரிமைகோரி அலகாபாத் உயர்நீதி மன்றத்தின் லக்னோ கிளையில் ''விசுவ இந்து பரிஷத் ஆதிவக்தா சங்கம்'' தொடுத்த வழக்கில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு இந்த நாட்டின் நீதித்துறை எவ்வளவு தூரம் இந்து மதவெறிச் சகதியில் அமிழ்ந்து போயுள்ளது என்பதற்குச் சான்றாக உள்ளது.

பக்தர்களுக்கு வழிபாட்டு அனுமதி வழங்குவதோடு நீதிமன்றத் தீர்ப்பு நின்றுவிடவில்லை. இந்து மதவெறி பாசிஸ்டுகளின் குரலாகவே மாறி ஒலித்திருக்கிறது. ''ராமர் கோவில் சிலைகளுக்குப் பாதுகாப்பான முறையிலும், பக்தர்கள், யாத்திரிகர்களின் பார்வைக்கு வசதியாகவும் போதிய தூரத்தில் நின்று வழிபட அனுமதிக்க வேண்டும். அங்குள்ள பொருட்கள், சொத்துக்கள் சிலைகளின் பாதுகாப்புக்கும், தகுந்த பாதுகாப்பு செய்ய வேண்டும். அதற்குப் போடப்பட்டுள்ள துணிக் கூடாரத்தைப் பாதுகாக்கவும், பனி, வெயில், மழைக் காலங்களில் பூசாரிகள் அங்கு தங்கி பூசைகள் நடத்தப் போதுமானவைதானா என்பதைப் பார்த்துத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தகர்க்கப்பட்ட கட்டிடத்தில் இருந்தும், அந்தப் பகுதியில் இருந்தும் கண்டெடுக்கப்பட்ட வரலாற்று, அகழ்வாய்வு முக்கியத்துவமுடைய பொருட்கள் பாதுகாக்கப்பட வேண்டும்'' என்றும் கட்டளையிட்டது.

''ராமன் கோவிலை'' நிரந்தரமாக்வும், சட்டபூர்வமாகவும் இடிபாடுகளில் இருந்து, கண்டுபிடிக்கப்பட்டதாக புளுகிக் கள்ளத்தனமாகக் கொண்டுவந்து வைக்கப்பட்ட ஆதாரப் பொருட்களையும் உண்மையானவையாகவும் அங்கீகரிக்கும் ஏற்பாடுதான் இந்தத் தீர்ப்பு. இத்தீர்ப்பு வழங்கிய இரண்டு பார்ப்பன நீதிபதிகளில் ஒருவரான 'தில்ஹரி' என்பவர் ஏற்கனவே, ''பாபரி மசூதி - ராமஜன்மபூமி'' வழக்கில் இந்துமத வெறியர்களுக்காக வழக்காடிய வக்கீல்தான் என்பதும்; அவர் இந்த வழக்கை விசாரிகக் கூடாது என்று இசுலாமியர்களின் மனுவும் நிராகரிக்கப்பட்டதை இங்கு அவசியம் குறிப்பிட வேண்டும்.

இதோடு நின்றுவிடவில்லை; தமது இந்துமத வெறித் தீர்ப்புக்கு நியாயம் கற்பிக்கும் வகையில் - உலக நீதித்துறை வரலாற்றிலேயே முதன்முறையாக - ஒரு கேலிக் கூத்தையும் லக்னோ நீதி மன்றம் செய்துள்ளது. இதற்கு ஆதாரமாக இந்திய அரசியல் நிர்ணயச் சட்டத்தின் மூலப் புத்தகத்தின் 22 பக்கங்களில் வரையப்பட்டுள்ள படங்களைக் காட்டியுள்ளது.

''பகவான் ராமன் ஒரு கற்பனைக் கட்டுக்கதை அல்ல; இந்த நாட்டின் தேசிய கலாச்சாரத்திலும் கட்டுமானத்திலும் இடம்பெற்றுள்ள ஒரு யாதார்த்தம்; அரசியல் நிர்ணய சட்டத்தின் ஒரு அங்கம் என்று 1949, நவம்பர் 26-ந் தேதி அரசியல் நிர்ணய சபை நிறைவேற்றிய மூலப் பிரதியின் பக்கங்களில் உள்ள சித்திரங்கள் காட்டுகின்றன. ராமன், கிருஷ்ணன், சிவன், குருகோவிந்த் சிங் போன்றவர்கள் தேசிய சின்னங்களாகவும்; தேசியக் கலாச்சாரம், பாரம்பரியம், மற்றும் போற்றுதல் - வணங்குதலுக்குரியவர்கள் என்று அரசியல் நிர்ணய சபை ஏற்றுக் கொண்டுள்ளது. மூல நூலில் வரையப்பட்டுள்ள சித்திரங்கள் இந்திய தேசியத்தையும், நமது தேசிய வாழ்வு நமது பாரம்பரியம் நமது கலாச்சாரம், மதச் சார்பின்மைக் கண்ணோட்டத்துக்கு மாறானது. இந்தியக் கண்ணோட்டம். கடவுள் புண்ணியத்தினால் எங்களில் ஒருவர் அரசியல் நிர்ணய சபை நிறைவேற்றிய மூல நூலின் பிரதியை பெறும் சிறப்புப் பெற்றோம். வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த ஆவணம் இந்த வழக்கிற்கான மதச்சார்பின்மை கலாச்சாரப் பாரம்பரியம் பற்றிய கண்ணோட்டம் தந்தது. ''ஆகவே, நமது அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களால் இந்த நாட்டின், இதன் அடிப்படைக் கலாச்சாரத்தின் ஒரு மாபெரும் தேசியச் சின்னமாகக் கருதப்பட்டவரைக் கடவுளாக எண்ணி அச்சிலையைத் தரிசிக்கவும், பூஜிக்கவும் ராம பக்தர்களாகிய இந்துக்கள் கோரும் போது சில நடைமுறை சிக்கல்களைக் கூறி மறுக்க முடியாது'' என்று கூறித் தீர்ப்பு வழங்கினர்.

இந்தத் தீர்ப்பை வழங்கியதன் மூலம் கோல்வால்கர் முதல் அத்வானி வரையிலான ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தவாதிகளின் வரிசையில் லக்னோ ''நீதிபதி''களும் இடம் பெற்றுவிட்டனர். ''மொகஞ்சதாரோ, வேத காலத்தில் இருந்து இந்திய சுதந்திர இயக்கம் வரையிலான இந்திய வரலாறு இடம் பெற வேண்டும்'' என்கிற நேருவின் யோசனைப்படி வங்காள ஓவியர் நந்தலால் போஸ் வரைந்த 22 சித்திரங்கள் அரசியல் நிர்ணயச் சட்ட நூல் வடிவில் இடம் பெற்றுள்ளன. ராமன், கிருஷ்ணன், அர்ஜுனன் முதலிய இந்துமத அவதாரங்கள் மட்டுமல்லாது, குருகோவிந்த் சிங், புத்தர், மகாவீரர், அக்பர், திப்பு சுல்தான் போன்ற மாற்று மத நாயகர்களும்தான் அவற்றில் உள்ளன. அந்த அடிப்படையில் அவர்களுக்கும் வழிபாட்டு உரிமையைப் பாதுகாத்திருக்க வேண்டும் அல்லவா? அப்படிச் செய்யவில்லை.

மொகஞ்சதரோவின் திராவிட நாகரிகத்தையும் வேதகால ஆரிய, குருகுலவாசத்தையும், புத்தர், மகாவீரர், அசோகர், குருகோவிந்த் சிங், அக்பர், திப்பு சுல்தான், காந்தி, சுபாஷ் சந்திரபோஸ் முதலிய வரலாற்றில் கண்ட மதனிர்களையும் ராமன், கிருஷ்ணன், அர்ச்சுனன் ஆகிய கற்பனை அவதாரங்களையும் ஒன்றாக்கிப் பாரம்பரியச் சின்னமாக்கியுள்ளனர். இதன் மூலம் நேரு - காங்கிரசின் பித்தலாட்டமும், இவற்றை இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்றதன் மூலம் அம்பேத்கார் போன்றவரின் சமரசமும் கூட இதனால் அம்பலமாகிறது.

லக்னோ உயர்நீதி மன்றம் மட்டுமல்ல; நாட்டிலுள்ள பல்வேறு நீதிமன்றங்களும் இந்து மதவெறி அமைப்புகளுக்கு விதித்துள்ள தடை, அவற்றின் அமைப்புகளுக்கு ''சீல்'' வைக்கப்பட்டுள்ளது ஆகியவற்றை செல்லாது என்று தீர்ப்பு வழங்கியுள்ளன. கைது செய்யப்பட்ட அந்த அமைப்புகளின் தலைவர்கள், குண்டர்களை விடுதலை செய்துள்ளன. பாபரி மசூதி இடிக்கப்படும் ஆபத்துள்ளது, தடுத்து நிறுத்துங்கள் என்று திரும்பத் திரும்பக் கோரியும் அதை ஏற்க மறுத்து இந்துமத வெறியர்களின் நாசவேலைக்குத் துணை போனதன் மூலம் உச்சநீதி மன்றமே காவிச் சாயம் பூசிக் கொண்டதுதானே?! ●

படிப்பகம்

www.padippakam.com

# இந்து வெறியர்களின் ஆவேசத் தாக்குதல்! அடிபணியுது காங்.அரசு!

மனித ரத்தத்தைச் சுவைத்துவிட்ட இந்து மதவெறி ஓநாய்கள் இன்னும் அதிக இரைதேடி அலையத் துவங்கி விட்டன. அயோத்தி பாபரி மசூதியைத் தகர்த்து, நாடு முழுவதும் மதவெறிப் படுகொலைகளை நடத்திய இந்து மதவெறி பாசிஸ்டுகள் ஒரு மாதமாகியும் ஓய்ந்துவிடவில்லை. பம்பாய், அகமதாபாத், சூரத், கான்பூர், அதிலபாத் போன்ற இடங்களில் ஊரடங்கும், அதையும் மீறி மதவெறிப் படுகொலைகளும் நீடிக்கின்றன.

மசூதி இடிக்கப்பட்ட ஓரிரு நாட்கள், நாடு முழுவதும் எழுந்த கண்டனக் குரல் காரணமாக, எதிர்பாராது நடந்துவிட்டது; துரதிருஷ்டவசமானது என்று இந்து மதவெறி பாசிஸ்டுகள் ஒப்புக்குப் பேசினர். நாடாளுமன்றத்தில் மாற்றுக் கட்சிகள் சாடியபோதும் ஒன்றுமறியா அப்பாவிகள் போல அமைதியாகவே வீற்றிருந்தனர்.

ஆனால், அரசியல் பாமரர்கள் கருதியதைப் போல இந்து மதவெறிச் சதிகாரர்கள் தற்காப்பு நிலைக்குப் போய்விடவில்லை. மத்திய அரசு மேற்கொண்ட கைது, ஆட்சிக் கலைப்பு, தடை நடவடிக்கைகளைச்' சாக்குவைத்து, முன்னிலும் அதிக மூர்க்கத்தோடு மதவெறித் தாக்குதலை உடனடியாகவே துவங்கிவிட்டனர்.

பாபரி மசூதி தகர்க்கப்பட்டதைக் கண்டித்து பாரதீய ஜனதா அல்லாத எல்லாக் கட்சிகளும் நாடு தழுவிய ''பந்த்'' நடத்தின; இதற்குப் பதிலடி கொடுப்பதாக, இந்து மதவெறி பாசிசத் தலைவர்களின் கைதைக் கண்டித்து பாரதீய ஜனதாவும் நாடு தழுவிய ''பந்த்'' நடத்தியது. பாரதீய ஜனதா ஆண்ட மாநில ஆட்சிகள் கலைக்கப்பட்டதைக் கண்டித்து ஆங்காங்கே மாநில ''பந்த்'’கள் நடத்தியது. பிறகு இந்து மதவெறி பாசிச அமைப்புகள் தடை செய்யப்பட்டதைக் கண்டித்து கருப்புச் சின்னம் அணிந்து கண்டன நாள் கடைப்பிடித்தது.

நாடாளுமன்ற ரௌடித்தனத்தை அரங்கேற்றி ஒருவாரத்துக்கு மேல் நாடாளுமன்றத்தை, முடக்கி வைத்தது; தமக்கு எதிரான அடக்குமுறைகளைக் கண்டிப்பதாகக் கூறி மதக் கலவரங்களினூடே தடை உத்திரவுகளை மீறி பேரணிகள் நடத்தியது. இதை அனுமதிக்க மறுத்து போலீசு மேற்கொண்ட கைது நடவடிக்கைகளைக் கண்டித்து இப்போது மிதவாதி வேடம் பூண்டுள்ள வாஜ்பாய் உண்ணாவிரதம் இருந்தார். இந்த அனுதாப நாடகத்தைக் கண்டஞ்சிய நரசிம்மராவ் அரசு வாஜ்பாயினுடைய எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்றது. அதாவது பாரதீய ஜனதா எவ்வித தடையும் இல்லாது இயங்க அனுமதித்தது.

மாற்றுக் கட்சிகள் கூறுவதைப் போல, நரசிம்மராவ் அரசின் கையாலாகாத் தனம் அல்ல, அதன் முழு ஒத்துழைப்பும் தனக்கு உண்டு என்பதைப் புரிந்து வைத்துக் கொண்டுள்ளார்கள், இந்து மதவெறி பாசிஸ்டுகள். எனவேதான் தம்மீது சுமத்தப்படும் கிரிமினல் குற்றச்சாட்டுக்களைக் கண்டும் அஞ்சாது எதிர்த் தாக்குதலுக்குத் துணிந்தனர்.

முதல் தாக்குதலில் நன்கு திட்டமிட்ட, பயிற்சிபெற்ற பாசிசக் குண்டர்களைப் பிரதானமாகப் பயன்படுத்தியவர்கள், இந்த எதிர்த் தாக்குதலுக்கு சாமியார்கள், சாதுக்கள், பெண்கள், குழந்தைகளை முன்னிறுத்தினார்கள். ராமஜென்ம பூமி அறக்கட்டளைத் தலைவர்களை நிருத்திய கோபால் தாஸ் மற்றும் ராமசந்திர பரம்ஹம்ஸ் ஆகிய சாதுக்களைக் கைது செய்யப் போன போலீசை முற்றுகையிட்டு விரட்டியடிப்பதில் சாதுக்கள், சந்நியாசிகள் வெற்றி பெற்றது இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கு மேலும் துணிச்சலையும், நம்பிக்கையையும் தந்தது.

இடிக்கப்பட்ட இடத்திலேயே மீண்டும் மசூதியைக் கட்ட போவதாக நரசிம்மராவ் கொடுத்த வாக்குறுதியைப் பொய்ப்பிக்கவும், கிரிமினல் முறையில் கட்டப்பட்ட திடீர் ராமன் கோவிலுக்கு அங்கீகாரம் பெறவும் அங்கு வழிபாட்டு உரிமைகோரிப் போராட்டத்தைத் தொடுத்தனர், இந்து மதவெறி பாசிஸ்டுகள். இதற்காக அவர்களது முதுகெலும்பான வியாபாரிகள் சங்கத்தின் மூலம் உள்ளூரில் மறியல், பேரணி கடையடைப்பு நடத்தினர்; தடையை மீறி வழிபடுவதற்காக சந்நியாசிகள், சாதுக்கள், பெண்கள் அடங்கிய கும்பலை ஏவினர். இது கண்டு பீதியுற்றதாக நடித்த உள்ளூர் அரசு அதிகாரிகளை முன்னிறுத்தி வழிபாட்டுக்கு அனுமதியளித்தது, நரசிம்மராவ் அரசு. அதேசமயம் அங்கு தொழுகை நடத்தப் பேரணியாகத் திரண்டுபோன இசுலாமியர்கள் மீது கண்ணீர்புகை, தடியடி நடத்திக் கலைத்தது.

இந்து - இசுலாமியர் ஆகிய இரு தரப்புக்கும் நல்ல பிள்ளையாக நாடகமாடிய நரசிம்மராவ் நிர்வாகம், முதல் நாள் மட்டுமே வழிபாட்டுக்கு அனுமதித்து, மறுநாள் அதற்குத் தடைபோடவே சாதுக்களும் சந்நியாசிகளும் சாகும்வரை உண்ணாவிரதம் துவங்கி மிரட்டினர். ஆனால், ஓரிரு நாட்களிலேயே இந்துக்களின் வழிபாட்டுரிமையை ஏற்றும், இசுலாமியர்களின் தொழுகை உரிமையை மறுத்தும் இரண்டு வழக்குகளில் லட்சுமணபுரி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இது இந்து மதவாதிகளுக்கு மேலும் தெம்பும் வெறியும் ஊட்டியது.

இந்து மதவெறி பாசிஸ்டுகளின் உண்மையான அரசியல் நோக்கத்தைப் பகிரங்கமாக அறிவிக்கும் வகையில் அகில இந்திய சாதுக்கள் - சந்நியாசிகள் பஞ்சாயத்து என்னும் அமைப்பை, பிரயாகை(அலகாபாத்)யில் கூட்டித் தீர்மானம் நிறைவேற்றினர். வாமதேவ் மற்றும் முக்தானந்த் ஆகிய இரு சாமியார்கள் அக்கூட்டத் தீர்மானத்தை விளக்கிப் பின்வருமாறு கூறினர்:

''இந்திய அரசியல் சட்டம் இந்துக்களுக்கு எதிரானது. அதைத் தூக்கியெறிந்துவிட்டு இந்து மதக் கோட்பாடு அடிப்படையிலான புதிய அரசியல் சட்டம் வகுக்கப்பட வேண்டும். சனாதன வருணாசிரம தர்ம சாதி அடிப்படையிலான அரசியல், சமூக, பொருளாதார அமைப்பை ஏற்படுத்த வேண்டும். தீண்டத்தகாதவர்களை அர்ச்சகர்களாக நியமிக்கும் பீகார் அரசின் முயற்சிகளைக் கடுமையாக எதிர்ப்போம். அயோத்தி பாபரி மசூதிக்கு நேர்ந்ததைப் போல மீண்டும் நடக்காமல் இருக்க வேண்டுமானால் காசி விசுவநாதன் கோவில் கட்டுவதற்காக ''கியான்பி'' மசூதியையும், மதுரா கிருஷ்ண ஜன்மபூமி கோவில் கட்டுவதற்காக ''ஈத்கா'' தொழுகை இடத்தையும் மட்டுமல்ல, டில்லி செங்கோட்டை - ஜும்மா மசூதியையும் இசுலாமியர்கள் தாமே ஒப்படைத்துவிட வேண்டும். இல்லையானால் ஏற்கனவே உள்ள 3,000 மசூதிகளை இடிப்பதோடு அவற்றின் எண்ணிக்கையையும் கூட்டிக் கொண்டே போவோம்'' என்று அவர்கள் எச்சரித்தனர்.

டில்லி ஜும்மா மசூதி உள்ள இடத்தில் ஒரு வைணவக் கோவில் இருந்தது என்று ஒரு புதிய கண்டு பிடிப்பையும் செய்தனர். இன்னும் பிற இந்து மதவெறியர்கள் தாஜ்மகால், குதுப்மினார் ஆகியவற்றின் பூர்வீகத்தையும் ஆய்வு செய்ய வேண்டும் என்று புதுக் கரடி விட்டனர்.

தடை செய்யப்பட்ட இந்து மதவெறி அமைப்புகளைவிட மிதவாத அமைப்பு, ''தெரியாமல்'' தீவிரவாதிகளிடம் சிக்கிக் கொண்டுவிட்டது என்று பத்திரிகைகால் நற்சான்றிதழ் தரப்படும் பாரதீய ஜனதா கட்சி மேற்கண்ட திமிரான - உளரல்களை மறுத்து

> அரசியல் பாமரர்கள் கருதியதைப் போல இந்து மதவெறிச் சதிகாரர்கள் தற்காப்பு நிலைக்குப் போய்விடவில்லை. மத்திய அரசு மேற்கொண்ட கைது, ஆட்சிக் கலைப்பு, தடை நடவடிக்கைகளைச் சாக்கு வைத்து முன்னிலும் அதிக மூர்க்கத்தோடு மதவெறித் தாக்குதலை உடனடியாகவே தொடங்கிவிட்டனர்.

படிப்பகம்

www.padippakam.com

ரைக்கவில்லை. ''காசி, மதுரா விவகாரங்கள் இப்போதைய எங்கள் நிகழ்ச்சி நிரலில் இல்லை'' என்றும், ''சாதுக்கள் - சந்நியாசிகள் கருத்துக்களை நாங்கள் எதிர்க்க முடியாது, அவர்களை நாங்கள் மதிக்கிறோம்'' என்றும் கூறி மழுப்பினார்கள்.

அதாவது காசி, மதுரா, டில்லி ஜும்மா மசூதி போன்றவற்றை இடித்துத் தள்ளுவது இப்போது பாரதீய ஜனதாவின் நிகழ்ச்சி நிரலில் இல்லைதான். பின்னொரு சமயத்தில் எடுத்துக் கொள்வோம்; நாங்களாக இல்லை, சாதுக்கள் - சந்நியாசிகள் விரும்பினால் அதை மதித்து அப்படியே செய்வோம் என்பதுதான் அவர்கள் வாதம். அயோத்தி பாபரி மசூதி இடிப்பைக் கூட இப்படித்தான் ''மக்கள் விருப்பம், மக்கள் ஆணை; அதை நிறைவேற்றுகிறோம்'' என்று வாதிட்டனர்.

ஆனால், காசியிலும், மதுராவிலும் அயோத்திபாணி கடப்பாரை சேவையை நிறைவேற்றுவதற்கான தயாரிப்பில் இறங்கிவிட்டனர். அயோத்தி நாசவேலையைத் தொடர்ந்து இசுலாமியர் தமது ஒற்றுமையைப் பறைசாற்றும் வகையில் காசி ''கியான்பி'' மசூதியில் ஆயிரக்கணக்கானோர் வாராந்திரத் தொழுகைக்குக் குழுமினர். இடம் இல்லாததால் மசூதிக்கு வெளியிலேயே - தெருவில் தொழுகை நடத்த முயன்றனர். இதை இந்து மத வெறியர்கள் கடுமையாக எதிர்க்கவே இசுலாமியர்கள் தொழுகை நடத்த அனுமதியாது போலீசாரால் விரட்டப்பட்டனர். ஆனால், இதைத் தொடர்ந்து காசி விசுவநாதன் கோவில் பூசைக்கு லட்சக்கணக்கானோர் திரட்டப்பட்டு தெருவிலேயே வழிபாடு நடத்தப்படுகிறது. இது போன்று தெருப்பிள்ளையாருக்குக்கூட ஆயிரக் கணக்கில் திரண்டு ''மகாபூசை''கள் நடத்தி பம்பாயில் மத, இனவெறிப் படுகொலைகள் புரிகின்றனர்.

தாக்குதல் அரசியல்தான் விரைவான, சாதகமான பலனளிக்கும் என்பதை உறுதி செய்து கொண்டபின் துணிந்து மதவெறிப் பாதையில் இந்துமத பாசிஸ்டுகள் முன்னேறுகின்றனர். தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்கு ஈடாக மாற்றுப் பெயர்களில் இயங்குகின்றனர்; நரசிம்மராவ் அரசின் ஒத்துழைப்புடன் அந்த அமைப்புகளின் முக்கியத் தலைவர்கள் கைதாகாமல் பாதுகாப்பாகவும் பகிரங்கமாகவும் இயங்குகின்றனர். ஒப்புக்குக் கைதாகும் முக்கியப் பிரமுகர்கள் நீதி மன்றங்களால் விடுதலை செய்யப்பட்டு வெளிவந்து தெம்புடன் வேலை செய்கிறார்கள். கிட்டத்தட்ட நாள்தோறும், எல்லா ஏடுகளிலும் அவர்களுடைய பேட்டிகள், அறிக்கைகள் வெளிவருகின்றன.

தமது தாக்குதல் அரசியல் நடவடிக்கைகளால் நரசிம்மராவ் அரசை அடிபணிய வைத்துவிட முடியும் என்கிற நம்பிக்கையோடு இந்துமத பாசிஸ்டுகள் செயல்படுகின்றனர்; அதில், வெற்றிபெற்றும் வருகின்றனர். வாஜ்பாய் உண்ணாவிரதத்துக்குப் பயந்து அவரது எல்லா கோரிக்கைகளையும் ஏற்றது. கிரிமினல் - திடீர் ராமன் கோவில் வழிபாட்டுக்கு அனுமதித்தது; அயோத்தி பாபரி மசூதி இடத்தை மத்திய



திடீர் ராமன் கோயில் தரிசன அனுமதி கோரி அயோத்தியில் உண்ணாவிரதம் இருக்கும் சாமியார் கும்பல்.

அரசு கையகப்படுத்தினாலும் அங்குள்ள கிரிமினல் - திடீர் ராமன் கோவிலை அகற்றாதவாறு அவசரச் சட்டம் பிறப்பித்தது. அதே இடத்தில் மசூதியைக் கட்டித் தருவதாக முன்புகூறிய, வாக்குறுதியைக் கைவிட்டது; வகுப்புவாத எதிர்ப்பு முன்னணி அமைத்து எதிர்ப் பிரச்சாரம் செய்வதாக அறிவித்த திட்டத்தைக் கருச்சிதைவு செய்து கொண்டது, ''இந்துத்துவத்''தைத் தானும் ஏற்பதாக முடிவெடுத்தது, இவ்வளவு கலவரங்களுக்குப் பின்னும் சிவசேனா போன்ற பாசிச ரௌடிப் படையைத் தடை செய்து ஒடுக்க அஞ்சுவது — இப்படிப் பல வகையிலும் நரசிம்மராவ் அரசு அடிபணிந்து போகும்படி நிர்பந்திக்கப்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்ட திமிரோடு இந்து மத பாசிஸ்டுகள் பேசித் திரிகின்றனர். விடுதலையான விசுவ இந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால், ''1947 ஆகஸ்டு 15-ஐப் போலவே அயோத்தி மசூதி தகர்க்கப்பட்ட நாள் (1992 டிசம்பர் 6-ந் தேதி) மதச் சுதந்திரத்துக்கு அடித்தளம் நாட்டிய நாள் ஆகும். 1947-ஐப் போலன்றி 1993 இன் இந்துக்கள் வெல்லப்பட முடியாதவர்கள். மசூதியை இடித்தது அதிவீரச் செயல் ஆகும். காற்று எந்தத் திசையில் அடிக்கிறது என்பதை அரசு புரிந்து கொண்டு காசி, மதுரா மசூதிகளையும் விட்டுத்தர வேண்டும். அயோத்தி ராமர் கோவிலுக்கு அருகே மசூதி கட்டப்படுவதை ஒருபோதும் சகித்துக்கொள்ள மாட்டோம்'' என்று எச்சரித்தும் மிரட்டியும் பேசிவருகிறார்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வாணி, ''அயோத்தி சம்பவங்களுக்காக நாங்கள் வெட்கப்படவில்லை. எப்படிப் பார்த்தாலும் பாபரி மசூதியை அப்புறப்படுத்துவதாகத்தான் இருந்தோம்; ஆனால், சிலர் அவசரப்பட்டுவிட்டார்கள். மகாராஷ்டிரத்திலும், குஜராத்திலும் நடக்கும் சம்பவங்கள் காங்கிரசு ஆளத் தகுதியற்றுப் போனதைக் காட்டுகின்றன; உடனே தேர்தல்கள் நடத்த வேண்டும்'' என்று இந்துமத பாசிஸ்டுகளின் திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

மதவெறிக் கலவரங்களில் ஈடுபட்டும், அயோத்தி பாபரி மசூதி இடிப்பிலும் மாண்டுபோன இந்துக்கள், [illegible]'' என்று ஆர்.எஸ்.எஸ். பொதுச் செயலாளர் சேசாத்திரி புகழ்ந்துள்ளார். நாடு முழுவதும் மத வெறிக் கலவரங்கள் தொடர்கின்றன. அதற்கு எதிராகக் குரல்கொடுக்க மறுக்கும் இந்து மத பாசிசத் தலைவர்கள் கலவரப் பகுதிகளுக்குப் போய் மேலும் தூண்டிவிட முடிவு செய்துள்ளனர். அதோடு வெளிநாடுகளில் துவங்கியுள்ள இந்து மதவெறி அமைப்புகளுக்குப் போய் ஆதரவும் நிதியும் திரட்டத் தீர்மானித்துள்ளனர். இதற்காக பிழைப்புவாதியும் துரோகியுமான சிகந்தர் பக்த்தை அனுப்பவுள்ளனர்.

''நம்மை எதிர்க்கும் துணிவு எவருக்கும் இல்லை; நாடு முழுவதும் 'இந்துத்துவ' அலை வீசுகிறது'' என்கிற திமிரோடு இந்து மத பாசிஸ்டுகள் செயல்படத் துணிந்திருப்பதையே இவை காட்டுகின்றன. இவர்களுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்துள்ள காங்கிரசோ, மதச் சார்பற்றவர்கள் என்று பறைசாற்றித் திரியும் ''இடதுசாரி'', தேசிய முன்னணிக் கட்சிகளோ இந்துமதவெறி பாசிஸ்டுகளை எதிர்த்து முறியடிக்கத் துணிய மாட்டார்கள் என்கிற கணிப்பு முற்றிலும் சரி என்பது அயோத்திக்குப் பிந்திய காலச் செயல்பாடுகள் நிரூபித்துவிட்டன. குறிப்பாக ''இடதுசாரி'' தேசிய முன்னணிக் கட்சிகள் புதிய பொருளாதாரக் கொள்கை எதிர்ப்பு மற்றும் மண்டல் ஆதரவு இயக்கங்களை முன்னிறுத்தி வகுப்புவாத எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிட்டு பக்கவாட்டில் ஒதுங்கிப் போகின்றனர்.

இந்துமத வெறி பாசிஸ்டுகளின் தாக்குதல் இலக்கு இசுலாமியர்கள் மட்டுமல்ல; தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சூத்திர சாதியினரும், ஏழை எளிய மக்களும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களும் அடங்குவர் என்பதை சனாதன வருணாசிரம சாதியைப் புதுப்பிக்கும் கோரிக்கை மற்றும் பம்பாய்ப் படுகொலைகள் மூலம் நிரூபித்து விட்டார்கள். ஆகவே, இசுலாமியர்களைப் போலவே சாதாரண மக்கள் அனைவரின் வாழும் உரிமையே இந்துமத வெறி பாசிஸ்டுகளால் பறிக்கப்படுகிறது என்கிற உண்மையை உணர்ந்து துணிவும், தியாகமும் மிக்க மதச் சார்பற்ற ஜனநாயக சக்திகள் ஒன்று திரண்டு அவர்களை முறியடிக்க வேண்டும்.

● ஆர்.கே.

படிப்பகம்

www.padippakam.com

# மசூதி இடிப்புக்குப் பிறகு... நாடெங்கும் நடந்த நரவேட்டை

*அயோத்தியில் இந்துவெறியர்கள் பாபர் மசூதியை இடித்து அட்டூழியம் புரிந்த அடுத்த சில நாட்களில் நாடு முழுவதும் வன்முறை வெறியாட்டங்கள். 11 மாநிலங்களில் இராணுவம் குவிப்பு. 80 நகரங்களில் ஒருவார காலத்திற்கு ஊரடங்கு உத்திரவு. வடமாநில பெரு நகரங்களில் தலைவிரித்தாடிய பயங்கரம் — சூறையாடல், நாசகாரித்தனம், தீவைப்பு, உயிருடன் எரிப்பு, கொலை, கொள்ளை, கற்பழிப்புக் கொடூரங்கள். அங்கே மனிதநேயமும், சகோதரத்துவமும் அங்கம் அங்கமாக வெட்டிச் சிதைக்கப்பட்டது. அரசும் நிர்வாகமும் செயலிழந்து போனது 'தேசிய ஒருமைப்பாடு' கிழிந்து கந்தலாகித் தொங்கியது. இந்து வெறியர்களுடன் கிரிமினல்களும் மா:பியா குண்டர்களும் சேர்ந்து நகரங்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு அட்டூழியம் புரிந்தனர். அவர்களோடு சேர்ந்து கொண்டு போலீசார் முஸ்லீம்களை நரவேட்டையாடினர். ஒருவார காலத்திற்குள் நாடெங்கும் 2,000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் உயிருடன் எரிக்கப்பட்டனர். மருத்துவமனைகளில் மலைபோல் பிணங்கள் குவிந்தன. மதவெறித் தீயில் பிணவாடை வீசியது.*

இந்திய வரலாற்றில் இதுவரை காணாத மிகக் கொடூரமான — மிகப் பயங்கரமான வாரம் அது. அயோத்தியில் டிசம்பர் 6-ம் நாள் பாபர் மசூதி இடிக்கப்பட்டதும். அடுத்த ஒருவார காலத்திற்கு நாடே மதவெறிக் கலவரங்களால் பற்றி எரிந்தது. பாபர் மசூதி இடிக்கப்பட்டதும். இந்து ராஷ்டிரம் பிறந்துவிட்ட மகிழ்ச்சியும். வெறியும். வக்கிரமும் சேர்ந்து கொள்ள இந்து வெறியர்கள் கோரத் தாண்டவமாடத் தொடங்கினார்கள். பள்ளிவாசல்களும் முஸ்லீம் குடியிருப்புகளும், கடைகளும். தொழில் நிலையங்களும் அவர்களின் தாக்குதல் இலக்காகியது. இந்து தர்மப்படி. கடவுள் இராமனுக்கு மனித இரத்த வேள்வி நடத்துவதுதான் தகுதியான வழிபாடு என்றே அவர்கள் கருதிச் செயல்பட்டார்கள். சோகமும் துயரமும் நிறைந்த. இரத்தத்தை உறைய வைக்கும் கோரச் சம்பவங்கள் வட மாநிலமெங்கும் ஒருவார காலத்திற்கும் மேலாக தலைவிரித்தாடின.

இந்தியாவின் மிகப்பெரிய நகரங்களில் முதன்மையானது பம்பாய். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மக்களும் கூடிவாழும் கலவையான கூட்டுத்துவ கலாச்சாரத்தைக் கொண்டது. அந்தப் பெருமையும் நம்பிக்கையும் டிசம்பர் 7-ந் தேதியிலிருந்து சிதைந்து போனது. பம்பாய் நகரமே அங்கம் அங்கமாக வெட்டிச் சிதைக்கப்பட்டது.

டிசம்பர் 6-ந் தேதி நள்ளிரவில் சிவசேனா — பாரதீய ஜனதா குண்டர்கள் முஸ்லீம் குடியிருப்புப் பகுதிகளுக்கும் கடைகளுக்கும் தீ வைத்தனர். திட்டமிட்டு 22 மசூதிகள் உடைக்கப்பட்டன. மத்திய பம்பாயிலுள்ள மஹிம் பகுதியில் மக்தூம் நகரில் 310 முஸ்லீம் குடிசைகள் பட்ட பகலில் பெட்ரோல் குண்டு வீசி எரிக்கப்பட்டது.

டிசம்பர் 7-ம் நாளன்று ஒரு போலீஸ்காரர் கத்தியால் குத்தப்பட்டு தெருவில் வீசியெறியப்பட்டதைப் பார்த்ததும் மாநிலப் போலீசுத்துறையே ஆத்திரமடைந்தது. இக்கொலைக்கு முஸ்லீம்களே காரணம் என்று கருதிய போலீசு. முஸ்லீம்களை எதிரியாகக் கருதி கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தத் தொடங்கியது. அக்ரிபடா. முகம்மது அலிரோடு. நாக்பதா ஆகிய தென்மத்திய பம்பாயிலும், வடபகுதியான கோர்வாடியிலும் புறநகர் பகுதியான ஜோகேஸ்வரி, வகோலாவிலும் போலீசார் முஸ்லீம்களுக்கு எதிரான யுத்தத்தையே நடத்தினர்.

தியோனார் பகுதியில் மட்டும் 55 பேர் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். 155 பேர் படுகாயமடைந்தனர். ஆசியாவின் மிகப் பெரிய சேரிப் பகுதியான தராவியில் மட்டும் 28 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் கலவரத்தில் ஈடுபட்டதாக போலீசு கதை கட்டியது. ஆனால் கலவரப் பகுதிகளில் தடியடி, கண்ணீர் புகை வீச்சோ நடைபெறவில்லை. முழங்காலுக்குக் கீழாக துப்பாக்கிச் சூடும் நடைபெறவில்லை. போலீசாரின் துப்பாக்கிக் குண்டுகள் அனைத்தும் முஸ்லீம் நெஞ்சுகளையே துளைத்தன. மருத்துவமனைகளின் 'பிரேத ·பரிசோதனை'' அறிக்கைகளின்படி சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் 99% பேர் முஸ்லீம்கள்.

ரத்தவாடை வீசும் பம்பாய்: கலவரத்தில் பாதிக்கப்பட்ட இளைஞர்



பம்பாய் போலீசார் இந்துக்களுக்கு ஆதரவாக மட்டுமல்ல; இந்து வெறியர்களாகவே மாறினார்கள்.

பம்பாயின் வடகிழக்குப் பகுதியான கோவாந்தியில் 25 வயதான ஹிம்மத் அலி எனும் நடைபாதை காய்கறிக் கடைக்காரரை அவரது குடிசையிலிருந்து 5 போலீசார் இழுத்துப் போட்டு மிருகத்தனமாக அடித்து ''ஜீப்''பில் ஏற்றிச் சென்றனர். நகரின் ஒதுக்குப் புறமான பகுதிக்கு கொண்டு சென்று அவரது உள்ளாடைகளை அவிழ்த்து அவர் ''சுன்னத்'' செய்துள்ளாரா. அவர் இந்துவா, முஸ்லீமா என்று பார்த்தனர். ''நான் முஸ்லீம் என்று தெரிந்ததும் வெறிபிடித்தவர்களைப் போல என்னைத் தாக்கினார்கள். நான் நிலைகுலைந்து விழுந்து மீண்டும் எழுந்தபோது. எனது கீழ் வயிற்றுப் பகுதியில் மூன்று முறை சுட்டார்கள்; நான் துடிதுடித்து மயங்கி கீழே விழுந்தேன். நான் பேச்சுமூச்சின்றிக் கிடந்ததும். இறந்துவிட்டதாகக் கருதி என்னை மருத்துவமனைப் பிணவறைப் பகுதியில் கொண்டு போய் தள்ளினார்கள். நல்ல வேளையாக. மருத்துவர்கள் நான் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவசர சிகிச்சை அளித்து என்னைக் காப்பாற்றினார்கள்'' என்கிறார் ஹிம்மத் அலி.

குர்லாவில் இந்துவெறியர்கள் வீடுகளைத் தீயிட்டு கொளுத்திய பிறகு. பெரும்படையாக போலீசார் வந்தனர். கலவரக்காரர்களைப் பிடிப்பதற்குப் பதிலாக கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில், அன்வர் அலி சித்திக், சம்சுல்ஹக் ஆகிய இரு இளைஞர்கள் மாண்டனர். அவர்களைக் கலவரக்காரர்கள் என்று முத்திரை குத்தி போலீசார் குற்றப் பத்திரிகை தயாரித்தனர். ஆனால், அவர்களோ கலவரத்தால் மூண்ட தீயை அணைக்க அரும்பாடுபட்ட இளைஞர்கள்.

போலீசார் இந்து வெறியர்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com

அரணாக, ஆதரவாகச் செயல்படத் தொடங்கியதும் அவர்களது கொட்டம் எல்லை மீறிப் போனது. அச்சம் கிஞ்சித்துமின்றி இந்துவெறி குண்டர்கள் பம்பாய் நகரில் ஆட்சி நடத்தினர். டிசம்பர் 8-ம் தேதியன்று தலைவர்களை விடுதலை செய்யக் கோரி இந்து வெறியர்கள் நடத்திய கடையடைப்புப் போராட்டம் இதற்குச் சாதகமாக அமைந்தது. அடுத்த கட்ட தாக்குதலுக்கான தயாரிப்புகளுடன் அவர்கள் இறங்கினர்.

காட்கோபார் பகுதியிலுள்ள அசல்பா எனுமிடத்தில் ''ஆம்புலன்ஸ்'' எனும் பெயர் பொறித்த வாகனம் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து 15 சிவசேனா குண்டர்கள் இறங்கினர். ஆயுதங்களுடன் வந்த அவர்கள் ஒவ்வொரு வீடாக பெட்ரோலை ஊற்றிய டயர்களை வீசியெறிந்தனர். ''குடிசைகளை விட்டு வெளியே வந்தால் குண்டர்கள் தாக்குவதற்குத் தயாராக இருந்தார்கள். உள்ளே இருந்தால் தீயில் வெந்து மடிய நேரிடும். பெண்களும் குழந்தைகளும் அலறியபடியே அவர்கள் காலில் விழுந்து கெஞ்சிய போதிலும் அவர்கள் கருணை காட்டவில்லை. தப்பியோடிய நாங்கள் போலீசாரிடம் முறையிட்டும் அவர்கள் எந்த உதவியும் செய்யவில்லை'' என்கிறார் முகம்மது இத்ரீஸ்.

அசல்பாவில் 310 முஸ்லிம் குடிசைகள் மட்டும் எரிந்து சாம்பலாகவில்லை. குர்லா பகுதியில் கபூர்கான் எஸ்டேட்டிலுள்ள 150 குடிசைகளும், மஹிம் பகுதியிலுள்ள 300 குடிசைகளும் இந்துவெறிக் குண்டர்களால் தீயிடப்பட்டன. மாஹிம் பகுதியில் நடந்த அட்டூழியங்களுக்கு மிலிந்த்வைத்யா என்ற மாநகராட்சி சிவசேனா உறுப்பினரே தலைமை தாங்கினார். பம்பாய் இந்துவெறி போலீசார் அவர்களுடன் சேர்ந்து கொண்டு முஸ்லிம்களைத் தாக்கினர்.

கலவரம் என்று வந்தால், சேரிப் பகுதியின் கூலி, ஏழைகள்தான் ஈடுபடுவதும், பாதிக்கப்படுவதும் நடக்கும் என இதுவரை கருதப்பட்டு வந்த பிரமை சிதைந்தது. சேரிப் பகுதிகள் மட்டுமல்ல; நடுத்தர - மேட்டுக்குடி மக்கள் வாழும் பகுதிகளிலும் மதவெறி தலைவிரித்தாடியது. அறிவின் இடத்தை மதவெறி ஆக்கிரமித்துக் கொண்டதும் அது ஆண்-பெண்; படித்தவன் - படிக்காதவன்; ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடு பார்ப்பதில்லை. பம்பாய் புறநகரான கிழக்கு பண்டாராவிலுள்ள கேர்வாடி பகுதியில் டிசம்பர் 7-ம் நாளன்று மேட்டுக்குடி இந்துப் பெண்மணிகள், தமது குழந்தைகளுடன் வீதியில் திரண்டு இந்துவெறி நடனமாடினார். பின்னர், குண்டர்களுடன் சேர்ந்து முஸ்லிம் கடைகளைச் சூறையாடி தீயிட்டுக் கொண்டாடினர்.

மியான்மக்தூம் நகரில், 9 மாத கர்ப்பிணியான ஒரு முஸ்லிம் பெண், பொதுக் கழிப்பறைக்குச் சென்றபோது அவரது அண்டை வீட்டைச் சேர்ந்த ஒரு மீனவ இந்துப் பெண் வயிற்றில் கத்தியை வைத்து மிரட்டினார். மூன்று இந்துப் பெண்கள் கர்ப்பிணியை சூழ்ந்து கொண்டு பின்புறத்தில் உதைத்து, கையிலிருந்த வாளியால் தாக்கினர். இதனால் பாதிக்கப்பட்ட அவருக்கு குறைப்பிரசவம் ஏற்பட்டு மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார்.



பம்பாய் தெருக்களில் ரத்த ஆறு: ஊரடங்கு உத்திரவு போடப்பட்டும் இந்துவெறி குண்டர்கள் பட்டப்பகலில் நடத்திய படுகொலை.

•பம்பாயில் பற்றிய மதவெறித் தீ ரகசிய உலக கிரிமினல் பேர்வழிகளுக்குச் சாதகமாகிப் போனது. பம்பாயின் தராவி பகுதியில் பழைய பிளாஸ்டிக் பொருட்களை உருக்கி மறு உருவாக்கம் செய்யும் பட்டறைகளும், தோல் பதனிடும் சிறிய ஆலைகளும் நூற்றுக் கணக்கில் உள்ளன. சட்டபூர்வமாக அல்லாத இத்தகைய பட்டறைகளை தமது பினாமிகள் மூலம் கிரிமினல் பேர்வழிகள் இயக்கி வருகின்றனர். தமது தொழில் எதிரிகளைப் பழிவாங்கவும், ஆதிக்கத்தை நிலைநாட்டவும் இக் கலவரத்தை அவர்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

ஆள்காட்டிகளைக் கொண்டு இந்தப் பட்டறை, அந்தப் பட்டறை என்று இனம் பிரித்து தீ வைத்தனர். இதே நேரத்தில் சிவசேனா குண்டர்கள் பிற மாநிலங்களிலிருந்து பிழைப்புக்காக பம்பாயில் குடியேறிய மக்களை — குறிப்பாக தமிழர்களைத் தாக்கத் தொடங்கினர். பம்பாயில் மராத்தியர்களுக்குத் தவிர வேறு யாருக்கும் இடமில்லை என்று கூச்சலிட்டுக் கொண்டே தமிழர் வாழும் குடிசைப் பகுதிகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

தீக்கு மதம் கிடையாது. தங்கள் கண்ணெதிரே அடுத்தடுத்து இந்து - முஸ்லிம் கடைகளும் குடிசைகளும் எரிந்து சாம்பலானபோது பம்பாய் மக்கள் இதை உணர்ந்தனர். பட்டப் பகலில் அடர்த்தியான தீயும் புகைமூட்டமும் எழுந்து சூரியனையே மறைத்தது.

நகரெங்கும் ஊரடங்கு உத்திரவு போடப்பட்டதால், தீயில் சிக்கியவர்களும், துப்பாக்கிச் சூட்டுக்கும், கத்திக்குத்து, கல்லெறிகளால் காயமுற்றவர்களும் மருத்துவமனைக்குக்கூட போக முடியவில்லை. இதிலே உரிய சிகிச்சையின்றி மாண்டுபோனவர்கள் ஏராளம். போலீசு துப்பாக்கிச் சூட்டில் மாண்டவர்களைப் பற்றி உறவினர்களுக்கு போலீசார் தகவல் தராததால், பிணங்கள் அடையாளம் காணமுடியாதபடி அழுகிப்போயின. ''நாங்கள் எங்கள் வீடு, வாசல் வேண்டுமெனக் கேட்கவில்லை. அரசிடமிருந்து நிவாரணத்தையும் எதிர்பார்க்கவில்லை. மாண்டுபோன எனது மகன் பிணத்தையாவது கொடுங்கள்'' என்று நூற்றுக்கும் மேற்பட்ட தாய்மார்கள் மருத்துவமனைகளின் முன்னே கதறிக் கொண்டிருந்தார்கள். ஆனால், துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களைப் பற்றிய எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுவதற்காக போலீசாரே பிணங்களை எரித்துவிட்ட பிறகு, அவர்களுக்கு எப்படி ஆறுதல் கூற முடியும்?

அயோத்தியில் மசூதியை இடித்துத் தள்ளியபோது 6 கரசேவை குண்டர்கள் தான் மாண்டனர். ஆனால், பம்பாயில், அயோத்தியில் இறந்தவர்களைவிட 40 மடங்கு அதிகமானோர் கொல்லப்பட்டனர். இருப்பினும் இந்து வெறியர்களின் இரத்த வெறி அடங்கிவிடவில்லை. ஜனவரி முதல் வாரத்தில் சற்றே ஓய்ந்திருந்த கலவர நெருப்பு மீண்டும் இரண்டாவது வாரத்தில் பற்றிக் கொண்டது. மீண்டும் தீவைப்பு, சூறையாடல், கத்திக்குத்து, கல்லெறி, துப்பாக்கிச்சூடு என தீவிரமடைந்து 200-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

பம்பாயில் தராவியில் மட்டும் தமிழர்கள் 7 பேர் உயிருடன் எரிக்கப்பட்டனர். பிழைப்புக்காக தென் மாவட்டங்களிலிருந்து பம்பாய்க்குச் சென்ற தமிழர்கள் இன்று வாழ்வை இழந்து ஆயிரக்கணக்கில் அகதிகளாக தமிழகத்துக்கு ஓடிவந்து கொண்டிருக்கிறார்கள்.

தடை செய்யப்பட்ட ஆர்.எஸ்.எஸ். முதலான மதவெறி பயங்கரவாத அமைப்புகளின் தலைவர்களையும், செயல்வீரர்களையும் கைது செய்ய முயற்சித்தால் மீண்

www.padippakam.com



போலீசாராலும் இந்துவெறி குண்டர்களாலும் படுகாயமடைந்தவரை ஊரடங்கு உத்திரவு காரணமாக வண்டியில் வைத்து மருத்துவமனை கொண்டு செல்லும் அவலம்.

டும் பம்பாய் நகரம் பற்றி எரியும் என்பதை எச்சரிக்கவே இந்து வெறியர்கள் இரண்டாவது சுற்று கலவரத்தை நடத்தியுள்ளனர். அதோடு, காங்கிரசு ஆளும் மாநிலங்களில் கலவரம் பற்றி எரிவதாகக் காட்டி, ஆட்சியைக் கலைக்கக் கோருவது; தற்போது இந்து வெறியர்களுக்குச் சாதகமான நிலையில், மீண்டும் இடைத் தேர்தல் நடத்தி ஆட்சியைப் பிடிப்பது என்கிற நோக்கத்துடனேயே தொடர்ச்சியாக மதவெறிக் கலவரங்களை கட்டவிழ்த்து விடுகின்றனர்.

★★★

இந்தியாவின் வடமேற்கு மாநிலமான குஜராத், மதவெறிக் கலவரங்களுக்கு ஏற்கனவே பேர்போன மாநிலம். அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் இந்து வெறியர்கள் நடத்திய வன்முறை வெறியாட்டத்தில் குஜராத் மாநிலமே நிலைகுலைந்து போனது. சிறுபான்மை முஸ்லீம்களைப் பழிதீர்ப்பதும் கொலைவெறியும் மட்டுமே அவர்களின் கொள்கையாக இல்லை; மதக் கலவரங்களில் இதுவரை காணாத காமவெறியும் வக்கிரமும் கொண்ட காட்டுமிராண்டிகளாகவே அவர்கள் மாறிப் போனார்கள். கள்ளச் சாராய மா.ஃபியா குண்டர்களின் தலைமையில் இந்துவெறியர்கள் கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர். போலீசார் வழக்கம் போலவே கைகட்டி வேடிக்கை பார்த்தனர்.

குஜராத்தின் இரண்டாவது பெரிய நகரம் சூரத். டிசம்பர் 8-ம் நாளன்று கிரிமினல்களுடன் திரண்டுவந்த இந்து வெறியர்கள் முஸ்லிம் குடியிருப்புகளைச் சூழ்ந்துக் கொண்டு ஆயுதங்களால் தாக்கினர். குடியிருப்புகள் பெட்ரோல் குண்டு வீசி எரியூட்டப்பட்டது. அலறியபடியே ஓடிவந்தவர்களில் இளம்பெண்களைப் பிடித்து சேலையை உருவி நிர்வாணமாக தெருக்களில் ஓடவிட்டனர். பின்னர் அவர்களது பெற்றோர், உறவினர்களின் முன்னிலையிலே கும்பலாக கற்பழித்தனர். இக் கொடுமையைச் சகிக்க முடியாமல் எதிர்த்த ஆண்களின் மீது பெட்ரோல் ஊற்றி உயிருடன் கொளுத்தினர். கற்பழித்த பின்னர் பெண்களை எரியும் தீயில் வீசியெறிந்து நடனமாடினர். இந்துவெறி குண்டர்களின் வக்கிரமான காமவெறி பயங்கரவாதத்தின் உச்சகட்டமாக இந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் வீடியோ படம் பிடித்தனர்.

சாமானிய மக்கள் மட்டுமல்ல; மேட்டுக்குடி முஸ்லீம்களும், முஸ்லிம் அதிகாரவர்க்கத்தினரும்கூட இத்தகைய "இனத் தூய்மைப் படுத்தும்" காட்டுமிராண்டித்தனத்திற்குப் பலியாகினர். ஒரு முஸ்லிம் உயர் போலீசு அதிகாரியின் சகோதரி, இந்துவெறி குண்டர்களால் கும்பலாக கற்பழிக்கப்பட்டு பின்னர் உயிரோடு கொளுத்தப்பட்டார். கொழுந்துவிட்டு எரிந்த மதவெறித் தீயில் அப்பெண்ணின் எரிந்துபோன எலும்புகூட கிடைக்கவில்லை. உயர் போலீசு அதிகாரிக்கே இந்த கதி என்றால் சாமானிய முஸ்லிம்களுக்கு எத்தகைய கொடூரம் நேர்ந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. சூரத் நகரில் நடந்த முதல் சுற்று வன்முறை வெறியாட்டங்களில் மட்டும் 200-க்கும் மேற்பட்டோர் மாண்டனர்.

மதவெறித் தீ பற்றி எரியும் குஜராத்தை விட்டு தப்பியோட சூரத் ரயில் நிலையத்தில் குவிந்துள்ள மக்கள்




முஸ்லிம்களைத் தாக்கி அழித்த கிரிமினல்களின் வெறியாட்டம், அடுத்தகட்டமாக பிற மாநிலத்தவர் மீது பாய்ந்தது. பிழைப்புக்காக குஜராத்தில் குடியேறி கூலித் தொழிலாளர்களாகப் பணியாற்றும் ஒரிசா, பீகார் மற்றும் தென் மாநிலங்களைச் சேர்ந்த மக்கள், இந்துவெறி கிரிமினல் குண்டர்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர். பல இடங்களில் உயிருடன் எரிக்கப்பட்டனர். உயிருக்கு அஞ்சி குஜராத்தை விட்டே ஓடிவிட ரயில் ஏறிய மக்களையும் இக்கும்பல் விட்டு வைக்க வில்லை.

டிசம்பர் 10-ம் நாளன்று நள்ளிரவில், சூரத்திலிருந்து சென்ற ரயில் புசாவல் அருகே குண்டர்களால் வழிமறித்து நிறுத்தப்பட்டது. முஸ்லிம்களும் பிற மாநிலத்தவரும் இனம் பிரித்து கீழிறக்கப்பட்டனர். ஆண்கள் அனைவரும் வெட்டிக் கொல்லப்பட்டனர். பெண்கள் அனைவரும் கும்பலாக கற்பழிக்கப்பட்டு, உயிரோடு எரிக்கப்பட்டனர். தகவலறிந்து செய்தியாளர்கள் சென்றபோது இருப்புப் பாதை முழுவதும் பிணக்காடாக காட்சியளித்தது. இந்தக் கோரத்தைக் கண்டு அலறிய ஒரு செய்தியாளர் மயங்கி கீழே விழுந்தார்.

இந்தக் கொலைவெறியாட்டத்திலிருந்து எப்படியோ தப்பித்த சிலர், வேறொரு ரயிலில் ஏறி 9 நாட்கள் பட்டினியோடு பம்பாய் வழியாக ஒரிசாவுக்கு வந்தனர். அவர்கள் பேட்டியளித்த பிறகுதான் குஜராத்தில் நடந்த கொடுமை உலகுக்குத் தெரியவந்தது. டிசம்பர் இறுதியில் நடைபெறுவதாக இருந்த உள்ளூராட்சி தேர்தல்களில் இந்து ஓட்டுக்களைக் கைப்பற்றவும், முஸ்லிம்களை அச்சுறுத்தி வைக்கவும் பாரதீய ஜனதா - காங்கிரசுக் கட்சிகளின் உள்ளூர் தலைவர்கள், கள்ளச் சாராய கிரிமினல்களுடன் சேர்ந்து நடத்திய பயங்கரவாத வெறியாட்டம்தான் இது. இந்த உண்மையை பாரதீய ஜனதாவின் பம்பாய் மகளிர் பிரிவு தலைவியான மாலதிபென் நரவ்னே என்பவர் ஒப்புக்கொண்டு, குஜராத் பாரதீய ஜனதா தலைவர்களையும் கண்டித்து பத்திரிகைகளுக்கு பேட்டியளித்துள்ளார்.

டிசம்பர் இறுதியில் குஜராத்தில் சற்றே தணிந்திருந்த வன்முறை வெறியாட்டங்கள், ஜனவரியில் மீண்டும் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது. சூரத் ரயில் நிலையத்தில் மட்டும் நாளொன்றுக்கு 40,000 டிக்கெட்டுகள் விற்பனையாகி, வெளி மாநிலத்

படிப்பகம்

www.padippakam.com

தைச் சேர்ந்தவர்கள் குஜராத்தைவிட்டே தப்பியோடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு குஜராத்தில் சமூக விரோதிகளின் பயங்கரவாதம் தலைவிரித்தாடுகிறது.

★★★

வகுப்புக் கலவர வாடையே இல்லாத மாநிலம் என்று பெருமையாகக் குறிப்பிடப்பட்ட மே.வங்க மாநிலம், அயோத்தி அட்டூழியத்துக்குப் பிறகு இதுவரை காணாத கலவரங்களால் நிலைகுலைந்து போனது. மாநிலப் போலீசை வைத்து கட்டுப்படுத்த முடியாமல், ராணுவத்தைக் கொண்டு வந்து நிறுத்துமளவுக்கு கலவரத் தீ பற்றி எரிந்தது. வங்க தேசத்தை ஒட்டியுள்ள எல்லைப்புற மாவட்டங்களில் முஸ்லிம்களின் ஆதிக்கம் பெருகிவிட்டதாகக்கூறி, இப்பகுதிகளில் காலூன்ற முயற்சிக்கும் பாரதீய ஜனதா திட்டமிட்டே கலவரங்களைக் கட்டவிழ்த்துவிட்டது. மித்னாபூர், பர்துவான், மூர்ஷிதாபாத், மால்டா ஆகிய மாவட்டங்களிலும், கல்கத்தா நகரிலும் முஸ்லிம் குடிசைப் பகுதிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. கடைகள் சூறையாடப்பட்டன.

பம்பாயைப் போலவே கல்கத்தாவிலும் ரியல் எஸ்டேட் மா∴பியாக்களும் கிரிமினல் குண்டர்களும் இந்து வெறியர்களுக்கு ஆதரவாக கலவரங்களைத் தலைமையேற்று நடத்தினர். புறம்போக்கு சேரிப் பகுதிகளில் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, முஸ்லிம்களை வெளியேற்றிவிட்டு அந்நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்வதற்காகவே ரியல் எஸ்டேட் மா∴பியாக்களால் கலவரம் தூண்டிவிடப்பட்டது. டிசம்பர் 7,8 தேதிகளில் வங்கத்தை ஆளும் போலிக் கம்யூனிஸ்டுகள் அறிவித்த 48 மணிநேர பந்த் இதற்குச் சாதகமாக அமைந்தது.

கல்கத்தாவில் ஜூன்னு என்ற கிரிமினல் பேர்வழியின் வீட்டில் குண்டர்கள் ரகசிய கூட்டம் நடத்தி காஷ்யபாரா பகுதியிலுள்ள முஸ்லிம் குடிசைகளை எரிக்கத் திட்டமிட்டனர். தகவலறிந்த வலது கம்யூனிஸ்ட் கட்சியின் உள்ளூர் பிரமுகர்கள் போலீசிடம் பலமுறை முறையிட்டும்கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக, போலீசார் ஆள்காட்டி வேலையைச் செய்தனர். ஆத்திரமடைந்த கிரிமினல் குண்டர்கள் விஸ்வநாத் திவாரி என்ற வலது கம்யூனிஸ்ட் கட்சி ஊழியரை கண்டம் துண்டமாக வெட்டி, எரியும் தீயில் வீசியெறிந்தனர்.

ஏற்கனவே தயார் நிலையில் இருந்த குண்டர்கள், டிசம்பர் 9 அன்று ஊரடங்கு உத்திரவு தளர்த்தப்பட்டதும் மெட்டியாபர்ஸ், கார்டன் ரீச், டாங்ரா முதலான பகுதிகளிலுள்ள முஸ்லிம் குடியிருப்புகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். போலீசாரோ அப்பாவி முஸ்லிம்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி 35 பேரைக் கொன்றனர். கலவரத்தைக் கட்டுப்படுத்த ராணுவத்தைக் குவித்த பின்னரும்கூட கிழக்கு கல்கத்தாவில் கொலை வெறியாட்டமும் தீவைப்பும்

கிழக்கு கல்கத்தாவிலுள்ள முஸ்லிம் சேரிப் பகுதிகளை பாலுக் என்கிற கிரிமினல் பேர்வழி தீயிட்டுக் கொளுத்தியதைப் பத்திரிகைகள் அம்பலப்படுத்திய பின்னரும், ஒரு 'மார்க்சிஸ்டு' மந்திரி அவனுக்கு அடைக்கலம் கொடுத்து கைதாகாமல் தப்பிச்செல்ல உதவினார்.

அடங்கவில்லை.

வங்கத்தை ஆளும் 'மார்க்சிஸ்ட்' கட்சியும், எதிர்க்கட்சியான காங்கிரசும் கிரிமினல்களுடன் கொண்டுள்ள கள்ள உறவு யாவரும் அறிந்ததுதான். கடந்த நகராட்சித் தேர்தலின்போது சம்சுஸ்மான் என்கிற கிரிமினல் பேர்வழி 'மார்க்சிஸ்ட்' கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்டான். நகராட்சி தேர்தலில் 'மார்க்சிஸ்டுகள்' கிரிமினல்களின் துணையோடு வாக்குச் சாவடிகளில் குண்டுவீசி கள்ள ஓட்டுப் போட்டு வெற்றி பெற்றனர்.

கிரிமினல் பேர்வழிகளுடனான போலிக் கம்யூனிஸ்டுகளின் கள்ளக் கூட்டு தேர்தலுடன் நின்று விடவில்லை. இப்போது நடந்த கலவரத்தில் ஈடுபட்ட குண்டர்களை அவர்கள் வர்க்கப் பாசத்தோடு காப்பாற்றவும் செய்தனர். கிழக்கு கல்கத்தாவிலுள்ள முஸ்லிம் சேரிப் பகுதிகளை பாலுக் என்கிற கிரிமினல் பேர்வழி தீயிட்டுக் கொளுத்தியதைப் பத்திரிகைகள் அம்பலப்படுத்திய பின்னரும், ஒரு 'மார்க்சிஸ்டு' மந்திரி அவனுக்கு அடைக்கலம் கொடுத்து,

முஸ்லீம்களுக்கு பாதுகாப்பற்ற நிலையில் கல்கத்தா: ஊரடங்கு தளர்த்தப்பட்டபோது கை உயர்த்திக் கொண்டே தொழுகைக்குச் செல்வோர்.



கைதாகாமல் தப்பிச் செல்ல உதவியுள்ளார். காயமுற்ற குண்டர்களை அரசு மருத்துவமனைகளில் சேர்த்தால் பின்னர் வழக்குப் போட நேரிடும் என்பதால், அவர்களை தனியார் மருத்துவமனைகளில் சேர்த்து ரியல் எஸ்டேட் மா∴பியாக்கள் பராமரித்து வருகின்றனர். இவற்றையெல்லாம் பத்திரிகைகள் அம்பலப்படுத்திய பின்னரும் 'மார்க்சிஸ்டு'கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

1946-ல் நடந்த கல்கத்தா மதவெறிப் படுகொலைகளையே விஞ்சுமளவுக்கு இப்போது அட்டூழியங்கள் நடந்துள்ளன என்று 'இடதுசாரி'க் கூட்டணிக் கட்சிகளே பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளன. போலிக் கம்யூனிஸ்டுகள் நிறுவிய அமைதிக் கமிட்டிகள் வெறும் காகித அறிவிப்பாகவே முடிந்தன. ''எந்தவொரு 'மார்க்சிஸ்டு' தலைவரும் இன்றுவரை எங்களுக்கு ஆறுதல் கூற வரவில்லை'' என்று பாதிக்கப்பட்ட மக்கள் வேதனையோடு கூறுகிறார்கள்.

★★★

ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு பாசிச இந்திராவின் தேர்தல் வெற்றிக்காக, ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் வெட்டிக் கொல்லப்பட்ட ''நெல்லிபடுகொலை''களால் பேர் போன மாநிலம், அசாம். இப்போது மசூதி இடிக்கப்பட்ட மகிழ்ச்சியில் முஸ்லிம்கள் மீதும், மசூதிகள் மீதும் இந்துவெறியர்கள் நடத்திய தாக்குதல், கலவரத் தீயாக பற்றி எரிய ஆரம்பித்தது.

அசாம் மாநிலம் பின்தங்கி இருப்பதற்கும், அசாமியர்களுக்கு வேலைவாய்ப்பில்லாததற்கும் வங்க தேசத்திலிருந்து குடியேறிய முஸ்லிம்களே காரணம் என்று வெறியூட்டப்பட்ட இந்துக்கள், முஸ்லிம்களை வெட்டிக் கொன்று, குடிசைகளுக்குத் தீயிட்டனர். பாரதீய ஜனதா, காங்கிரசுக் கட்சியின் குண்டர்கள் இந்த அட்டூழியங்களுக்குத் தலைமையேற்றனர்.

அதேசமயம் சிறுபான்மை முஸ்லிம்களின் ஓட்டு வங்கியை இழந்துவிடாதிருக்க, காங்கிரசு மந்திரிகளான மஹிபூல் ஹாக், அப்சாருல் ரஹ்மான், ஜலீல் ராஹிபி ஆகியோர் முஸ்லிம்களைத் தூண்டிவிட்டு கலவரத் தீயில் குளிர்காய்ந்தனர். இதன் விளைவாக தூப்ரி, நாகோன், ஹாஜோய், கோல்பாரா, சில்சார் முதலான பகுதிகளில் நடந்த இந்து - முஸ்லீம் மோதல்களில் 120 பேர் மாண்டு போயினர். ஏற்கனவே 62 கம்பெனி துணைராணுவப் படைகள் அசாமில் குவித்து வைக்கப்பட்டிருந்த போதிலும், ஒருவார காலத்திற்கும் மேலாக கலவரம் தொடர்ந்து நீடித்தது.

பம்பாய், குஜராத், கல்கத்தா, அசாம் மட்டுமல்ல; ம.பி.யின் தலைநகர் போபாலிலும், உ.பி.யின் கான்பூரிலும், கர்நாடகத்தின் பெங்களூர், மைசூர், பெல்ஹாம் நகரங்களிலும், ஆந்திராவின் அடிலாபாத் மாவட்டத்திலும், ஏன், தலைநகர் டெல்லியிலும் மதவெறியர்களின், சமூகவிரோதிகளின் வன்முறை வெறியாட்டங்கள் தலைவிரித்தாடின. சூரத்தில் நடந்ததுபோல், போபாலி

www.padippakam.com



அசாமில் இந்து வெறிக் குண்டர்களால் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு வீதிக்கு வந்திருக்கும் மக்கள்; அரசின் நிவாரண உதவிக்காக காத்திருக்கின்றனர்.

லும் கான்பூரிலும் முஸ்லிம் பெண்கள் கும்பலாக கற்பழிக்கப்பட்டு, உயிரோடு கொளுத்தப்பட்டுள்ளனர். இந்த வக்கிரமான காட்டுமிராண்டித்தனத்தை இந்து வெறியர்கள் வீடியோ படமும் எடுத்துள்ளனர்.

1984-ல் பாசிச இந்திராவின் சாவைத் தொடர்ந்து சீக்கிய சமூகத்தினரை நரவேட்டையாடி காங்கிரசுக் கட்சி ஆட்சியைப் பிடித்தது. அதேபோல, நாட்டை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து, சிறுபான்மை முஸ்லீம்களை நரவேட்டையாடி மத்தியில் ஆட்சியைப் பிடிக்க இந்து வெறியர்கள் முயற்சிக்கிறார்கள். அதற்காக பஞ்சமா பாதகங்களைச் செய்யவும் அவர்கள் துணிந்துவிட்டார்கள்.

★★★

நாடெங்கும் நடந்த, தொடர்ந்து நடக்கின்ற வன்முறை வெறியாட்டங்கள் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தினரிடம் நிரந்தரமான ஆறாத வடுவை ஏற்படுத்தியுள்ளன. பல பெண்கள் மனநோய் பிடித்தும், வாழ்விழந்தும் விதவைகளாக நிற்கும் அவலத்திற்கு ஆளாகியுள்ளனர். வசதியானவர்கள் மட்டுமின்றி, ஏழை, எளிய மக்கள்கூட வடமாநிலங்களின் கலவரப் பகுதிகளைவிட்டு தப்பி ஓடுகின்றனர். ''இனி எங்களுக்கு என்ன இருக்கிறது? இந்த நாட்டில் இனி யார்தான் நிம்மதியாக வாழ முடியும்?'' என்று சோகமும் துயரமும் பொங்க அவர்கள் கேட்கிறார்கள். ''அரசியல் கட்சிகளோ, அரசாங்கமோ, போலீசோ, ராணுவமோ எங்களைக் காப்பாற்ற முன்வராதபோது இந்த அவமானத்தைத் தாங்கிக் கொண்டு நாங்கள் இன்னும் எப்படி வாழ்வது?'' என்று குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

மனித உணர்வுள்ள ஒவ்வொருவருக்கும் விடப்பட்டிருக்கும் சவால் இது. இந்து வெறிக் காலிகளால் ஏற்பட்ட இந்த அவமானத்திற்கு நாம் பழிதீர்ப்பது எப்போது?

● குமார்

# திருச்சி பாய்லர் ஆலையில் மதவெறியர்களுடன் 'மார்க்சிஸ்டு'கள் கள்ளக்கூட்டு

ஒவ்வொரு ஆண்டும் திருச்சி பாய்லர் ஆலையில் (BHEL) அக்டோபர் மாதம் போனஸ் தருவது வழக்கம். ஆனால், கடந்த 1992-ம் ஆண்டில் 20% போனஸ் கிடையாது; ரூ. 1,500 மட்டுமே தருவோம் என நிர்வாகம் இழுத்தடித்து வந்தது. இதற்கு தி.மு.க., அ.தி.மு.க., ஜெ.சி.எம்.எல். உடன் தொடர்புள்ள பி.பி.ஈ.யு. (BPEU) மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளின் சி.ஐ.டி.யு. ஆகிய நானகு பங்கு பெறும் சங்கங்களும் மறைமுகமாக ஒத்துப்போயின. இந்துவெறிக் கும்பலான ஆர்.எஸ்.எஸ்.-இன் தொழிற் சங்கமான பி.எம்.எஸ். (BMS) என்ற சங்கம் உட்பட பிற 9 சங்கங்களுடன் கூட்டுச் சேர்ந்து தொழிலாளர்களின் போர்க்குணத்தை மழுங்கடிக்க அனைத்து முயற்சிகளையும் செய்து வந்தன.

ஆனால், தொழிலாளர்களோ, பங்கு பெறும் சங்கங்கள் மற்றும் பார்ப்பன சங்கமான BMS-ன் துரோகங்களை அம்பலப்படுத்தி 15.10.92 அன்று தன்னெழுச்சியான ஆர்ப்பாட்டம் ஒன்றைச் செய்து 20% போனஸை வாங்க நிர்வாகத்தை நிர்பந்தம் செய்து, அதில் வெற்றியும் பெற்றார்கள். திருச்சி பாய்லர் ஆலையில் நடந்த இந்தப் போராட்டம் அகில இந்திய அளவில் 75,000 தொழிலாளர்களுக்கு கூடுதல் போனஸ் பெற உதவி செய்தது.

தங்களது தலைமையை மீறி நடந்ததால் மேற்கண்ட தொழிற்சங்கங்கள் ஆட்டங்கண்டன. முழு போனஸ் வழங்கியபின் தொழிலாளர்களைப் பழிவாங்கும் நடவடிக்கையில் நிர்வாகம் இறங்கியது. ஆனாலும் வேலையில் சி.ஐ.டி.யு.-வும் பி.எம்.எஸ்.-ம் ஒரே மூச்சில் வேலை செய்தன. அதைத் தொடர்ந்து மூன்று தொழிலாளர்களை நிர்வாகம் நிரந்தர வேலைநீக்கம் செய்தது.

போனஸ் கேட்டு தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் அராஜகமானது, வன்முறையானது என்று பிரசுரம் வெளியிட்ட இச்சங்கங்கள், நிர்வாகத்தின் பழிவாங்கும் நடவடிக்கை சரியானதுதான் என்று ஒப்புதல் வாக்குமூலமும் அளித்துள்ளன. மூன்றுபேரைக் காட்டிக் கொடுக்கும் இவர்களின் பழிவாங்கும் வெறி அடங்காமல் தற்போது பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியனைச் (BPWU) சேர்ந்த சேகர், கந்தசாமி ஆகிய தொழிலாளர்களையும் பழிவாங்கியிருக்கிறார்கள். 12.12.92 அன்று இருவரும் நிர்வாகத்தால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இதற்கும் இவ்விரு சங்கங்களுமே காரணம் என்பதை 7.12.92 அன்று சி.ஐ.டி.யு. வெளியிட்ட பிரசுரமும் 9.12.92 அன்று பி.எம்.எஸ். சங்கம் வெளியிட்ட பிரசுரமும் உறுதிப்படுத்தியுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால், பாபர் மசூதியை இடித்து நாடு முழுவதும் கலவரங்களைத் தூண்டிவிட்ட தேசவிரோத இந்து வெறிக் கும்பலின் சங்கமான பி.எம்.எஸ். உடன் புரட்சி பேசும் சி.ஐ.டி.யு. சங்கம் பகிரங்கமாக கூட்டுச் சேர்ந்துள்ளது. பாய்லர் ஆலையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு பல்வேறு சங்கங்கள் போராடும் போது துரோகம், ஆள்காட்டி வேலை, சூழ்ச்சி, சதி முதலான பார்ப்பன தரித்தனத்தில் சி.ஐ.டி.யு.-வும், பி.எம்.எஸ்.-ம் கூட்டாக ஈடுபட்டுள்ளன. பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் ம.க.இ.க.வைச் சேர்ந்தவர்கள் என்றும் ம.க.இ.க. ஒரு நக்சலைட் இயக்கம், வன்முறை இயக்கம் என்று புளித்துப்போன அவதூறுகளை அள்ளிவீசி பிரசுரமும் வெளியிட்டுள்ளன.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், ராவ் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையையும், தனியார்மயமாக்கலையும் வரவேற்கும் பி.எம்.எஸ்.-ஐ தொழிலாளர்களின் எதிரியாக சி.ஐ.டி.யு. கருதவில்லை. மதவெறியூட்டி தொழிற்சங்க இயக்கத்தை சீர்குலைத்துவரும் பி.எம்.எஸ்.-ஐ தொழிலாளர்களின் விரோதியாக சி.ஐ.டி.யு. கருதவில்லை. ஏனெனில் சி.ஐ.டி.யு. மற்றும் பி.எம்.எஸ். இரண்டிலும் தலைமை தாங்குபவர்கள் பார்ப்பனர்கள். அதனால்தான் அவர்கள் பூணூல் பாசத்தோடு கூட்டுச் சேர்ந்துள்ளார்கள்.

தொழிலாளர்கள் மத்தியில் மீண்டும் போராட்டம் எழாமல் தடுப்பது, நடைபெறப் போகும் பங்குபெறும் சங்கத் தேர்தலில் தாங்கள் காணாமல் போய்விடுவோமோ என்ற அச்சம் காரணமாக தங்கள் எதிரியான பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியனை (BPWU) ஒழித்து விட்டால் எதிர்ப்பில்லாமல் உலாவரலாம் என்ற நப்பாசை — ஆகியவைதான் இவ்விரு துரோக சங்கங்களின் நோக்கமாக உள்ளது.

இவ்விரு சங்கங்களின் துரோகத்தனத்தை பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுடன் சேர்ந்து BPWU சங்கம் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகிறது. மதவெறிக் கும்பலுடன் 'மார்க்சிஸ்டு'களின் சங்கம் கூட்டுச் சேர்ந்து நடத்திவரும் துரோகத்தனங்களை கண்கூடாக கவனித்துவரும் பாய்லர் ஆலைத் தொழிலாளர்கள், வெகுவிரைவில் இத்துரோகிகளை விரட்டியடிக்கப் போவது மட்டும் நிச்சயம்.

www.padippakam.com




## ஒடுகாலிகள் பற்றி கருத்து என்ன?

● ஓடுகாலிகளின் ஏடான கேடயம், மன ஓசை, சமீபகாலமாக வெளிவரவில்லையே ஏன்? அந்த அமைப்பு பற்றிய தங்களுடைய தற்போதைய கருத்து என்ன? ஆர். கணேசன், சாத்தூர்.

★ அந்த அமைப்புக்குள் ஏறக்குறைய கடந்த ஓராண்டு காலமாக நடந்த உட்கட்சி விவாதத்திற்காக அந்த ஏடுகள் நிறுத்தி வைக்கப்பட்டதாக அறிந்தோம். இப்போது அந்த அமைப்பு இரண்டாகப் பிளவுபட்டுப் போயுள்ளது என்றும் அறிகிறோம். அதன் தலைமையை எதிர்த்து ஒரு பிரிவினர் தங்களைத் தனி அமைப்பாக நிறுவிக்கொண்டு, ஆனால், பழைய அரசியல் அடிப்படையிலேயே இயங்கப் போவதாக அறிவித்துள்ளனர். இந்தப் பிரிவினர் பழைய தலைமையின் மீது, கருத்துமுதல்வாதத்தையும், திரிபுவாதத்தையும், பொருளாதார வாதத்தையும் முன்வைத்து குட்டி முதலாளித்துவ இனவாதத்தை முன்வைத்து, கட்சிக் கலைப்புவாதத்தைச் செயல்படுத்துகிறவர்கள் என்றும்; பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வர்ண வழிவந்த சாதிகளை எதிர்த்து பிறசாதி (சூத்திர) மக்களை ஒன்றுபடுத்தி வர்ண ஒடுக்குமுறைக்கு எதிராக வர்ண விடுதலை என்ற நிறப்புரட்சிக் கோட்பாட்டை முன்வைக்கிறார்கள் என்றும், இந்திய பார்ப்பன எதிர்ப்பு - தேசியம், உலகப் பார்ப்பன எதிர்ப்பு - சர்வதேசியம் அதாவது வெள்ளையின எதிர்ப்பு - சர்வதேசியம் என்கிற அவர்களது கருத்து வெள்ளை இன எதிர்ப்பு கருப்பின, பூர்வீக (பழங்குடி) இன தேசிய உருவாக்கமே என்றும் விமர்சனங்கள் வைத்துள்ளார்கள்.

அதோடு கடந்த பிளீன முடிவுகளை மீறியதாகவும், அதிகார துஷ்பிரயோகம் - எதேச்சதிகாரம் செய்ததாகவும், கட்சிக்குள் கட்சி கட்டியதாகவும் தனது பெரும்பான்மைக்காக சதி வேலைகளில் ஈடுபட்டதாகவும், அமைப்பு முறைகளை மீறியதாகவும் கட்சியைத் திரிபுவாதப் பாதைக்கு இழுத்துச் செல்ல முயன்றதாகவும் குற்றஞ்சாட்டி பழைய தலைமையை வெளியேற்றிவிட்டதாகவும் இப் பிரிவினர் அறிவித்துள்ளனர். ஆனால், இப்பிரிவினரை, "பார்ப்பனீயத்திற்குப் பலியானவர்கள்," "தூய வர்க்கக் கோட்பாட்டைப் பின்பற்றும் வறட்டுவாதிகள்" என்று பழைய தலைமை முத்திரை குத்துவதாகத் தெரிகிறது. மார்க்சிய - லெனினிய இயக்கத்துக்கு உள்ளிருப்பதாகக் காட்டிக் கொண்டு அதைச் சீர்குலைக்க முயன்ற கேடயம் - மனஓசை கும்பல் பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின் தாமே சீர்குலைந்து விட்டார்கள். ஆனாலும், இவர்கள் இவ்வளவு காலம் நீடித்ததற்கான ஒரு முக்கிய காரணம் ம.யு.; ம.யு.(போ), செங்கொடி போன்ற பிற குழுக்கள் இவர்களுடன் கொண்டிருந்த தோழமை, நட்பு அணுகுமுறைதான். எனினும் இப்போது இவர்கள் உண்மை நிறத்துடன் வெளிவந்ததற்கு ஒரு முக்கிய காரணம் இவர்களுக்கு எதிராக நாம் நடத்திய உறுதியான அரசியல் சித்தாந்தப் போராட்டம்தான் என்றால் அது மிகையாகாது. இந்த அமைப்பு தோன்றிய போதிருந்தே, இதை ஒரு ஜனநாயக சக்தியாகக்கூட கருதமுடியாது; தமது சொந்த அரசியல் - சித்தாந்த நிலைப்பாடுகளுக்கே விசுவாசமான அமைப்பு அல்ல; மார்க்சிய - லெனினியத்துக்கு எதிரான ஒரு சதிகாரக் கும்பல் தான் என்று கூறிவந்தோம். இப்போது, அது நிரூபிக்கப்பட்டுள்ளது. இச்சதிகாரத் தலைமையினர் உருவாக்கிய அதே அரசியல் - சித்தாந்த நிலைப்பாட்டை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் அதிலிருந்து பிரிந்துள்ள குழுவும் அடிப்படையில் மாறிவிடவில்லை. எனவே நமது பழைய அணுகுமுறையே நீடிக்கிறது.

## "புதிய ஜனநாயகத்துக்கு எதிராக ம.ஜ.இ.க.-வினர் அவதூறு"

● ஒரு "பார்ப்பனீய நிறுவனத்துக்கு" சொந்தமானது என்பதற்காக 'சுபமங்களா'வை விமர்சிப்பது எவ்விதத்தில் சரி. கணையாழி, தினமணி, சுபமங்களா போன்ற ஏடுகளை வைத்து புரட்சிகர சக்திகளை சித்தாந்த ரீதியில் பலவீனப்படுத்திவிட இயலும் என எண்ணுகிறீர்களா? இதற்கு ஆதாரம் ஏதும் உண்டா? மேற்படி இனத்தவர் உமது அமைப்பிலும் உள்ளனர். அவர்களின் சாதி தனிமைப்பட்டுவிடக் கூடாது எனத் தொடர்பு கொண்டுள்ளனர் (சுபமங்களாவுடன்) எனக் கூறும் நீர் ஏன் அதே காரணத்திற்காக உமது அமைப்பிலும் தொடர்பு கொண்டிருக்கக் கூடாது?

— சூர்யா, திருவண்ணாமலை.

★ "புதிய ஜனநாயக"த்துக்கு எதிராக அவதூறு பரப்பும் முயற்சிகளில் ஒன்றாக இக்கேள்வி கேட்கப்படுகிறது. குறிப்பாக, ம.ஜ.இ.க. வினர் தொடரும் இம் முயற்சி பலிக்காது. எனினும் எமது பொறுப்பின் காரணமாகப் பதிலளிக்கிறோம்.

ஒரு "பார்ப்பனீய நிறுவனத்துக்கு" சொந்தமானது என்பதால் மட்டும் "சுபமங்களா"வை ஒரு பார்ப்பனப் பத்திரிக்கை என்று விமர்சிக்கவில்லை. "ஸ்ரீராம் சிட்பண்ட்ஸ்" என்கிற பார்ப்பன முதலாளி நிறுவனம் ஒருபுறம் "இடதுசாரி" மறுபுறம், பார்ப்பனீயத்தைப் புதுப்பித்து, பார்ப்பன ஆதிக்கத்தை மீட்கும் பல பண்பாட்டு நிகழ்ச்சிகளையும் நடத்தித் தன்னை அடையாளங்காட்டி வருகிறது; தவிரவும் "சுபமங்களாவே" பார்ப்பனக் கலைஞர்களின் துதிபாடி வருகிறது. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் கணையாழி, தினமணி ஆகிய பார்ப்பன ஏடுகள் கொடுத்த தமிழ் மொழி, தமிழ் இன எதிர்ப்பு ஆய்வுப் பிரச்சாரங்களில் துணைநின்றது. முற்போக்கு, புரட்சி பேசும் அறிவுஜீவிகளுடன் "தோழமை" உறவைப் பேணிக் கொண்டே பார்ப்பனப் "பண்டிதர்களுடன்" கூடி வாழ்கிறது. எமது அமைப்பிலோ, அதிலுள்ள தோழர்களிடமோ இத்தகைய இரட்டை வாழ்வும், நடத்தையும் யாராவது காட்டமுடியுமா? பார்ப்பனீயத்துக்கு எதிராக உறுதியுடன் நின்று போராடுவதில் இந்த அமைப்புக்கு ஈடாக எதையேனும் காட்டமுடியுமா? முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் (1937-40) ஒன்பதாவது சர்வாதிகாரியாக - போராட்டத் தளபதியாக - இருந்தவர் காஞ்சி ராஜகோபாலாச்சாரியார்; அதில் பங்கு கொண்டு இருமுறை சிறைசென்ற வேலூர் துளசி அம்மாள் ஆகியோர் பிறப்பால் பார்ப்பனரே; அதற்காக அவர்களது தமிழ்ப் பற்றை சந்தேகிக்க முடியுமா? ஆகவே அவதூறு பரப்பவே எமது அமைப்பில் உள்ள சில தோழர்கள் மீது சந்தேகம் எழுப்பப்படுகிறது.

மேலும், கணையாழி, தினமணி, சுபமங்களா போன்ற ஏடுகளை வைத்து புரட்சிகர சக்திகளை சித்தாந்த ரீதியாகப் பலவீனப்படுத்திவிட இயலும் என்று நாம் எழுதவும் இல்லை; அதற்கு ஆதாரம் தரவும் தேவை இல்லை. இருந்தாலும் புரட்சிகர அமைப்புகள் எச்சரிக்கையாக இருந்து முறியடிக்காவிட்டால், புரட்சியாளர்களைச் சீரழிப்பதில் இவை கணிசமான வெற்றிபெற்றிடவும் முடியும். இப்படி "நாம் உறுதியாகவும் சித்தாந்தபூர்வமான தெளிவோடும் இருந்தால் யாரும் ஒன்றும் செய்துவிட முடியாது" என்று சவடால் அடித்துக் கொண்டு ஏகாதிபத்தியத் தன்னார்வக் குழுக்களுடன் கூடிக் குலாவிய இந்திய மக்கள் முன்னணி - வினோத் மிஸ்ரா குழுவினர் என்ன ஆனார்கள் என்பது தெரிந்ததுதானே!

படிப்பகம்

www.padippakam.com

# தமிழகம்! இந்துவெறியர்களின் சொர்க்க பூமி! ஜெயா ஆசி!

பார்ப்பனீய நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜெயா கும்பலோடு ஆர்.எஸ்.எஸ் - பி.ஜே.பிக்கு ஏற்கனவே இருந்து வந்த இரகசிய உறவு வலுப்பட்டு இந்து மதவெறி அமைப்புகள் தமிழகத்தை நம்பகமான புகலிடமாக தெரிவு செய்துள்ளன. காங்கிரசுடன் உரசல். பி.ஜே.பி தலைவர்களை ஜெயலலிதா நேரில் சென்று பேசியது, தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சிலில் ஆர்.எஸ்.எஸ்.பரிவாரங்களின் "கரசேவையே" ஆதரித்தது இம்முடிவுக்கு உறுதுணை செய்துள்ளன.

பாபர் மசூதி டிசம்பர் 6 அன்று இடித்துத் தள்ளப்பட்டதை அடுத்து தமிழகத்திலும் பல்வேறு இடங்களில் முஸ்லீம்கள் தாக்கப்பட்டனர். டிசம்பர் 7 அன்று 6 இடங்களில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்ட அளவு நிலைமை இருந்தும் இதற்கு காரணமாக விளங்கிய இந்து மதவெறி அமைப்பினர் ஒருவர் கூட கைதாகவில்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக யாரும் கைதாகவில்லை. டிசம்பர் 10 அன்று ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி.; பஜ்ராங்தளம் ஆகியன தடை செய்யப்படுவதாக மத்திய அரசு அறிவித்தும் மாநில அரசு கையை கட்டிக் கொண்டே இருந்துவந்தது. அதிகார பூர்வமாக தடைபற்றிய ஆணை டிசம்பர் 12-க்கு கிடைத்து, 13 அன்றுதான் மெல்ல நகர ஆரம்பித்தது.

ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் தடை செய்யப்படலாம் என்பது ஏற்கனவே கசிய விடப்பட்டு இருந்ததால் அவ்வமைப்புகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் தலைமறைவாக சென்று இருந்தனர். தமிழக அரசு கண்துடைப்புக்காக தேடுதலை தொடங்கும் போது ஆவணங்கள் அகற்றப்பட்ட காலி அலுவலகங்களையும், பணம் வைக்கப்படாத வங்கிக் கணக்குகளையும் தான் பார்த்தது.

தலைமறைவாகச் சென்ற ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் ஒருவரைக் கூட முதல் 20 நாட்களில் தமிழக அரசு கைது செய்யவில்லை. ஆர்.எஸ்.எஸ்.-ஸின் முக்கிய தலைவரும், தமிழக பி.ஜே.பி.-க்கு பொறுப்பு வகிக்கும் அகில இந்திய பொதுச் செயலருமான கோவிந்தாச்சார்யா சென்னையிலிருந்துதான் செயல்பட்டு வருகிறார். இவரும், ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் தத்தோ பந்த் தேங்டி, எச்.வி. சேஷாத்திரி ஆகியோரும், தடையை அடுத்து சென்னையிலும் மற்றும் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலும் அணிகளை கூட்டிவைத்து பேசியுள்ளனர். இந்து மதவெறியைத் தூண்டும் இவர்கள் கைது செய்யப்படவில்லை.

ஜனவரி 6-ல் தான் முதல் ஒரு வாரத்தில் தமிழக போலீஸ் துறை 133 பேரை கைது செய்ததாக பத்திரிக்கைகளுக்கு செய்தி அளித்தது. இவர்களில் ஆர்.எஸ்.எஸ். 15 பேர், வி.எச்.பி. 27 பேர்; 20 ஆர்.எஸ்.எஸ்., 17 வி.எச்.பி. அலுவலகங்கள் சீல் வைக்கப்பட்டன. வி.எச்.பி.-யின் தமிழக செயலாளர் சம்பத்குமார், தலைவர் ஸ்ரீ ஹரி, அமைப்புச் செயலாளர் மணியன் ஆகியோர் கைது செய்யப்படவில்லை. இவர்களை கைது செய்யும் உத்தேசமும் கூட தமிழக போலீசுக்கு இல்லை. சம்பத்குமார் சென்னை உயர்நீதி மன்றத்தில் முன் ஜாமீனுக்கு விண்ணப்பித்தார். அரசு வக்கீல் இவர் மீது வழக்கு ஏதும் தொடுக்கப்படவில்லை எனக் கூறவே, முன் ஜாமீன் தேவை இல்லை என நீதிமன்றம் கூறிவிட்டது. ஜனவரி 5 வரை நூறு பேரை தமிழக போலீசு துறை கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இந்து முன்னணி மாநில அமைப்பாளர் இராம.கோபாலன், பா.ஜ.க.-வின் அகில இந்திய துணைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி; ஜெயா ஆசியில் தமிழகத்தில் திமிரோடு பேசித் திரியும் இந்துவெறி ஓநாய்கள்.





கள்ளச்சாராயம் விற்போரைப் பிடித்து வந்து அபராதம் போட்டு உடனே அனுப்பி வைப்பது போல போலீசும் நீதிமன்றமும் இந்துமதவெறி அமைப்புகளின் தலைவர்கள் சிலரை நீதிமன்றத்துக்கு கொண்டு வந்த வேகத்திலேயே ஜாமீனில் விடுதலை செய்து அனுப்பி விட்டது. ஆர்.எஸ்.எஸ். குடும்ப அமைப்புகளில் ஒன்றும் தமிழகத்தில் மதக் கலவரங்களைத் தூண்டி வருவதில் முக்கியமானதாகத் திகழும் இந்து முன்னணி தடை செய்யப்படவில்லை. இது 1981-லிருந்து தமிழகத்தில் இயங்கி வருகிறது. விநாயக சதுர்த்தி ஊர்வலங்கள் நடத்தி சென்னை திருவல்லிக்கேணியில் மதக்கலவரங்களைத் தூண்டியுள்ளது. இன்னும் ராமேஸ்வரத்திலும் கன்னியாகுமரி - நாகர்கோவில் பகுதிகளிலும் தஞ்சை - கோவை - வடஆற்காடு மாவட்டங்களிலும் முஸ்லீம்களுக்கு எதிராகவும் கிறிஸ்தவர்களுக்கு எதிராகவும் மோதல்களை உருவாக்கியவர்கள். சிறுபான்மை மதத்தினர் குவிந்துள்ள பகுதிகளைத் திட்டமிட்டுத் தெரிவு செய்து, இந்துக்களிடையே, குறிப்பாக ஏழ்மையான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களிடம் மதவெறியைத் தூண்டி கலவரங்களை அரங்கேற்றும் இந்து முன்னணியை தொடர்ந்து இயங்க அனுமதிப்பது மதக்கலவரங்களுக்கு அச்சாரம் இடுவதுதான். இந்து முன்னணித் தலைவர் இராம.கோபாலன் பாபர் மசூதியை இடித்துத் தள்ளிய "கடப்பாரை சேவகர்களை" வெளிப்படையாகப் புகழ்ந்தும், ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளை தடை செய்வதைக் கண்டித்தும் பேசியுள்ளார். '460 வருட அவமானச் சின்னம் அகன்றது' என்று பூரிப்போடு பிரச்சாரம் செய்து வருகின்றனர் இந்து முன்னணியினர். இந்நிலையில் ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., பஜ்ரங்தள் என்ற மூன்று அமைப்புகள் மட்டுமே தடை செய்யப்பட்டுள்ளன. இன்னும் 26 துணை அமைப்புகள் தடை செய்யப்படவில்லை.

தமிழகத்தில் இந்து முன்னணி, அகில பாரதீய வித்யா பரிசத், விஜில், தாமரைச் சங்கம், இந்து ஆலயப் பாதுகாப்பு கமிட்டி, பாரதீய மஸ்தூர் யூனியன், வனவாசி கல்யாண ஆசிரமம், சேவா பாரதி, வித்யா பாரதி, பாரதீய ஜனதா கட்சி என்றவாறு 10 பிற துணை அமைப்புகளை ஆர்.எஸ்.எஸ். வைத்துள்ளது. வித்யா பாரதி கிட்டதட்ட 120 ஆரம்பப் பள்ளிகளை தமிழகத்தில் நடத்தி வருகிறது. இதுதவிர புதிய புதிய வகையில் புற்றீசல்களாக "ராம பஜனை"க் கமிட்டிகள், சத்சங்கங்கள் என்று வைத்துள்ளது. தமிழ்நாடு பிராமண சங்கமும் ஆர்.எஸ்.எஸ்.-ஸுடன் தொடர்பு கொண்டுள்ள ஒரு நிறுவனமே. வரும் பிப்ரவரியில் சாதுக்களின் மாநாடு ஒன்றை இந்து முன்னணி கோவையிலும், வி.எச்.பி. மாற்றுப் பெயர் ஒன்றில் இராமேஸ்வரத்திலும் நடத்த இருப்பதாக செய்திகள் கசிந்துள்ளன.

தமிழகத்தை இந்து மதவெறி அமைப்புகளின் புகலிடமாக்கி, பல்வேறு மதத்தினரிடையே நிலவும் நல்லிணக்கத்தைச் சீர்கு

படிப்பகம்

www.padippakam.com

லைத்து லட்சக்கணக்கான மக்களின் இரத்த ஆற்றில், பிணவாடையில் தமிழகத்தை சுடுகாடாக்குவதற்குத்தான் ஆளுகின்ற பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலும் அதிகார வர்க்கமும் வழிவகுத்து நிற்கின்றன. தமக்கே உரிய சுயநலத்தோடும், பார்பனீய கண்ணோட்டத்தோடும் பாசிச முறைகளோடும் இந்து மதவெறியர்களுக்கு இடம் கொடுத்து வருகிறது பாசிச் ஜெயா கும்பல்.

அது ராஜீவ் காந்தி கொலையை அடுத்து புலி பீதியூட்டி தமிழகத்தை குலுக்கி எடுத்ததையும் மக்கள் மீது தொடுத்த தாக்குதல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்துமதவெறி அமைப்புகளின் நிழலைக்கூட தொடவில்லை எனலாம். அடக்குமுறை ஏவி விடப்பட்டபோது ஈழ ஆதரவு அமைப்புகள் எதுவுமே தடை செய்யப்பட்டிருக்கவில்லை. கிட்டத்திட 8 மாதங்களுக்குப் பின்பே விடுதலைப்புலிகள் அமைப்பு தடை செய்யப்படுவதாக அதிகார பூர்வ அறிவிப்பு தரப்பட்டது.

விடுதலைப்புலிகள் மீதான அவதூறுப் பிரச்சாரம் மனரீதியிலான யுத்தமாக இருந்தது. சாதாரண மக்கள் கூட இலங்கைத் தமிழர்கள் என்றாலே வெறுப்போடும் பயத்தோடும் ஒதுக்கி விடும்படியான அளவு அது நடத்தப்பட்டது. வானொலி, வானொளி, பார்ப்பன பத்திரிக்கைகள் அனைத்தும் அவதூறு மழை பொழிந்தன. சாதாரண சம்பவங்கள் கூட விடுதலைப் புலிகளின் கைவரிசை என அவதூறாக சித்தரிக்கப்பட்டன. ஒரத்தநாடு அருகே சாதாரணமாக பட்டாசு வெடித்த இருவர், குண்டு வைத்து பாலத்தை தகர்க்க முயன்றவர்கள், விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்கள் என தமிழக உளவுப்படை (கியூ) பிரிவு செய்தி தந்தது. நரிக்குறவர்களின் துப்பாக்கிகள் கூட புலிகளின் ஏகே 47 போன்று சித்தரிக்கப்பட்டன. வெடிகுண்டு கலாச்சாரம், ஆயுதக் கலாச்சாரம் என பயபீதியூட்டி வந்தது தமிழக சிறப்பு புலனாய்வுக்குழு (TNSIT) பார்ப்பன பத்திரிக்கை தினமலர் இதனை விசுவாசமாக கண், காது வைத்து ஊதிப்பெருக்கி செய்தியாக போட்டுவந்தது. லட்சக்கணக்கான மக்கள் சந்தேகத்தின் பேரில் அலசி ஆராயப்பட்டனர். அப்பாவி மக்கள் அடைந்த வேதனை சொல்லொண்ணா தன்மையது.

இலங்கை அகதிகள் தீராத மன உளைச்சல், உடல் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். அவர்களது சிறப்பு முகாம்கள் சித்திரவதைக் கூடாரங்களாக்கப்பட்டன. அவர்கள் அனைவரும் குற்றப் பரம்பரையினர் போல போலீசு நிலையத்தில் பதிவு செய்து கொள்ளவும், நடமாட்டத்தை அவ்வப்போது தெரிவிக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

தமிழின உணர்வு கொண்டோர், இலங்கை அகதிகளை சர்வதேச நியதிகளின்படி நடத்தக் கோரிய புரட்சியாளர்கள், ஜனநாயக வாதிகள் அனைவரும் தேசத் துரோகிகள், சமூக விரோதிகளின் பயங்கர வாதிகளின் ஆதரவாளர்கள், தேச ஒற்றுமையை சீர் குலைப்பவர்கள் என்றெல்லாம் வசைபாடப்பட்டனர். இத்தகையோரின் மாநாடுகள் தடைசெய்யப்பட்டன; பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. புலிகளின் ஆதரவாளர்களென்று எண்ணற்றோர் மீது 'தடா', தேசிய பாதுகாப்புச் சட்டம் முதலிய கொடிய சட்டங்கள் பாய்ந்தன. ஜெயா கும்பலின் அடக்குமுறைகளை கண்டித்த பத்திரிக்கைகள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டன.

தடை செய்யப்படாத போதே தமிழர்கள் மீது இத்தகைய கொடிய அடக்குமுறையை ஏவிவிட்ட பார்ப்பனீய 'ஜெ' கும்பலும் அதிகார வர்க்கமும் தடைசெய்யப்பட்ட இந்து மதவெறியர்களை நெருங்கக் கூடத் தயாராக இல்லை.

உண்மையில் இந்து மதவெறியர்கள் தான் நாட்டை மதரீதியில் துண்டாட முயலும் தேச விரோத சக்திகள்; சிறுபான்மை மதத்தினரின் நியாயவுரிமைகளை காலில் போட்டு மிதித்து அவநம்பிக்கைகளுக்கும் விரக்திக்கும் இறுதியில் தீவிர வாதத்திற்கும் தள்ளிவிடும் ஜனநாயக விரோத சக்திகள். லட்சக்கணக்கான மக்களை மதத்திற்காக பலிகொள்ளத் தயாராகும் நாசகார சக்திகள், இந்திய அரசியலில் இவர்களை மேலோங்க விடாமல் செய்வது மிகவும் அவசர அவசிய கடமையாகும்.

மதவெறியர்களை, குறிப்பாக இந்து மதவெறியர்களை அம்பலப்படுத்தி போர்க் குணமிக்க முறையில் செயல்பட்டு அவர்களை முடக்குவது, கலவரங்களுக்கு வித்திடும் அவர்களது முயற்சிகளை தோல்வியுறச் செய்வது வேண்டும். இதற்காக இந்து மதவெறியர்களை முறியடிக்க தற்காப்பு ரீதியில் ஆயுத பாணியாக்கிக் கொள்வது அவசியமாகும். இந்துக்களில் பெரும்பான்மையாக உள்ள தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோர் இந்து மதவெறியர்களின் தூண்டுதலுக்கு பலியாகாமல் காத்து, இந்து மதத்திலேயே உள்ள ஜனநாயக விரோத தன்மைகளுக்கு எதிராக கிளர்ந்தெழச் செய்ய வேண்டும். தீண்டாமை, சாதி ரீதியில் இழிவுபடுத்துவது, சமத்துவமாக நடத்த மறுப்பது இவற்றுக்கு எதிராக சாதாரண இந்துக்களைத் திரட்ட வேண்டும். புரட்சியாளர்களும் ஜனநாயக சக்திகளும், தமிழகத்தில், இந்து மத வெறியர்களை எதிர்த்து எந்த அளவு துணிவுடனும் விடாமுயற்சியுடனும் செயல்படுகிறோமோ அந்தஅளவு மதவெறிக் கலவரங்கள் தமிழகத்தில் மேலோங்க விடாமல் உத்திரவாதம் செய்வதாக இருக்கும்.

● உதயணன்

## மகிழ்ச்சிக் கடலில் நீந்தும் சன்யாசி!



டிசம்பர் 6-ந்தேதி அயோத்தி - பாபர் மசூதியை இடித்து நாசம் செய்தார்களே இந்துமதவெறி குண்டர்கள்; அதை — மசூதியின் கவிகைகள் இடிந்து விழுவதைக் கண்டு களிக்கிறார்கள். பா.ஜ.க.-வின் சன்யாசி எம்.பி.யான உமாபாரதி, மசூதியின் கவிகைகள் இடிந்து விழுவதைக் கண்டு மகிழ்ச்சி தாழாமல் ஓடிவந்து பா.ஜ.க. தலைவர் முரளி மனோகர் ஜோஷியை இப்படி கட்டிப் பிடித்துக் கொண்டதை கேதார் ஜெயின் எனும் செய்திப் புகைப்படக்காரர் படம் பிடித்துள்ளார். இது பத்திரிகைகளில் வெளிவந்ததும், உமாபாரதி இதை மறுத்தாலும் புகைப்படக்காரர் ஜெயின் உடன் இருந்த மற்ற புகைப்படக்காரர்களைக் கொண்டு உண்மை என்று நிரூபித்துள்ளார். மதவெறி பாசிஸ்டுகளின் குரூர புத்திக்கு சாட்சி.

பா.ஜ.க. பொதுச் செயலாளர் கோவிந்தாச் சார்யா;



படிப்பகம்

www.padippakam.com

# சோமாலியாவை மயானமாக்கிய குற்றவாளிகள் ஏகாதிபத்தியங்களே!

சோமாலியா - உலக மக்களின் பார்வை இன்று இங்குதான் குவிந்திருக்கிறது. குழந்தைகளும் முதியவர்களும் பட்டினிக் கொடுமையால் அன்றாடம் 5,000 பேர் வீதம் செத்துக் கொண்டுள்ளனர். புயல், வெள்ளம், பூகம்பம், விபத்துக்களில் கொத்துக் கொத்தாக இறப்பவர்களை அப்புறப்படுத்தும் பணியைப் போலவே பட்டினியால் மடிபவர்களை அப்புறப்படுத்தும் பணி தினமும் இங்கு நடக்கிறது. பிணங்களை தனித்தனியாக புதைக்க முடியாமல் ஒன்றன்மேல் ஒன்றைப்போட்டு மொத்தமாகப் புதைக்கிறார்கள். சோமாலியாவின் தலைநகரம் மொகதிஷுவில் மட்டும் 15 லட்சம் பேர் பட்டினிச் சாவின் கொடுமையில் நாட்களை எண்ணிக் கொண்டுள்ளனர். இதுவரை 3 லட்சம் பேர் இறந்துள்ளனர்.

சோமாலியாவில் எலும்புக் கூடுகளாகத்தான் மக்களைப் பார்க்கமுடிகிறது. அந்த எலும்பிலும் எழுந்து நடக்க வலு இல்லை. அதற்கு சக்தி கொடுக்கக்கூடிய உணவோ இம்மியும் இல்லை! ஈக்கள் மொய்க்க வாயில் நுரை தள்ளிய நிலையில் குற்றுயிராக - எலும்புக்கூடுகளாக பலர் படுக்கையில் கிடக்கிறார்கள். அந்நிய நாடுகளின் உணவு உதவிக் கழகங்களின் ஒரு கரண்டி உணவுதான் பலரின் எஞ்சிய எலும்பிற்கும் கொஞ்சம் சக்தி கொடுக்கிறது. அதுவும் உணவு வண்டிக்காக காத்துக் கிடப்பதிலும், இருக்கும் குறைந்த உணவை பெற முந்திக் கொள்வதிலும் போய்விடுகிறது. மீண்டும் பசி ... பசி ... என்ற மீளாத் துயரக்கதைதான்! பசிக்கு பாதி உயிர் போய்விட்டது என்றால் மீதியை தின்ன நோய் வந்து விடுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியில்லாமல் பாதிக்கப்பட்டவர்களில் 90 சதவிகிதத்தினர் குடல், ஈரல், எலும்பு சம்பந்தமான நோயில் வீழ்ந்து உயிர்விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



ஏகாதிபத்தியங்கள் விளைவித்த பட்டினிக் கொடுமையால் எலும்புக் கூடுகளாக சோமாலியா குழந்தைகள்; அந்த எலும்பிற்கும் நிற்கவோ நடக்கவோ சக்தி இல்லை!

பஞ்சம் பிழைக்க சோமாலியா மக்கள் கும்பல் கும்பலாக வெளியேறி எத்தியோப்பியா, கென்யா, ஏமன், ஒகேதன் முதலான நாடுகளில் குடியமர்கிறார்கள். எத்தியோப்பியாவில் 4 லட்சம் பேரும், கென்யாவில் 1,50,000 பேரும் அகதிகளாக உள்ளனர். ஒருமுறை ஏமன் சென்ற கப்பல் சோமாலியா அகதிகளின் சுமைதாங்காமல் செங்கடலில் மூழ்கியது. அண்மையில் சோமாலியா அகதிகள் கப்பல் ஒன்றை எந்த நாடும் ஏற்றுக்கொள்ள மறுத்ததால் பல வாரங்கள் கப்பலிலேயே சுற்றி உணவு, நீர் இன்றி பரிதவித்து எண்ணற்றவர்கள் மாண்டனர். இக்கப்பல் என்ன ஆனது என்ற விவரமே தெரியாமல் போனது. ஏகாதிபத்தியங்களும், செய்தி நிறுவனங்களும் இருட்டடிப்பு செய்துவிட்டன.

இதுவன்றி சோமாலியாவில் நடக்கும் உள்நாட்டு சண்டையாலும் ஏராளமானோர் மடிகிறார்கள்; எண்ணற்றோர் அகதிகளாக வெளியேறுகிறார்கள்; விவசாயமும் ஏனைய உற்பத்தி - நிர்வாகமும் முடக்கப்படுகிறது - அழிக்கப்படுகிறது. சோமலியாவில் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த பல்வேறு மரபுவழி இனக்குழுக்கள் உள்ளன. இவ்வினக்குழுக்களுக்கிடையேயும், ஒரே இனக்குழுவிலுள்ள இரு பிரிவினரிடையேயும், அதிகார மோதல்கள் நடக்கின்றன. அமெரிக்கா மற்றும் ஐ.நா. பாதுகாப்புத் துருப்புகளை எதிர்த்த முஸ்லீம் அடிப்படைவாத அமைப்பின் தாக்குதல்களும் நடந்து வருகின்றன. விமான தளங்கள், கப்பல் துறைமுகங்கள், போக்குவரத்து சாலைகள், அரசு அலுவலகங்கள் அனைத்தும் தாக்குதலுக்குள்ளாகி சிதைந்து செயலிழந்து கிடக்கின்றன. இனக்குழுக்கள், மத அடிப்படைவாதிகள், பசியால் பரிதவிக்கும் மக்களுக்குச் செல்லும் உணவு - மருத்துவ உதவிகளை அபகரிக்கவும் அழிக்கவும் செய்கின்றனர்.

எத்தியோப்பியாவை அடுத்து சோமாலியா பட்டினிச் சாவுகளின் அடையாளமாக உயர்ந்து நிற்கிறது. ஜிம்பாப்வே, மொசாம்பிக், அங்கோலா, லைபீரியா, சாட், சூடான் ஆகிய நாடுகளும் வறட்சி - பட்டினிச்சாவின் வரிசையில் சேர்ந்துள்ளன. ஆப்பிரிக்காவின் பெரும்பான்மை நாடுகளின் நிலையும் இதுதான். சகாரா - விளிம்பு ஆப்பிரிக்கா என்றழைக்கப்படும்

www.padippakam.com


பகுதி முழுவதும் வறட்சியின் பிடியில் சிக்கி அந்நிய நாடுகள், ஐ.நா.சபை உதவியிலேயே காலம் தள்ளுகின்றன! ஆறுகளும். அருவிகளும் வறண்டு விவசாயமே அழிந்துவிட்டது! நாட்டின் உணவு - தானிய உற்பத்தி படிப்படியாக சுருங்கி பெயரளவிற்கே நடந்து வருகின்றன. உதாரணத்திற்கு ஒன்று: 4,50,000 டன் சர்க்கரை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்த ஜிம்பாப்வே இந்த வருடமோ வெறும் 12,000 டன் மட்டுமே உற்பத்தி செய்தது. ஜிம்பாப்வேயின் விவசாயிகள் பசிக் கொடுமையால் காட்டு இலை-தழைகளையும், யானை மற்றும் இதர விலங்குகளையும் கொன்று சாப்பிடுகிறார்கள். இதை முதலில் தடுத்த ஜிம்பாப்வே அரசு பிறகு வேறு வழியில்லாமல் வரம்பு விதித்து சட்டபூர்வமாக்கிவிட்டது.

ஆப்பிரிக்கா சோமாலியாவின் வறட்சி - வறுமையும், இனக் குழுச்சண்டையும் ஏதோ தற்செயலாக இயல்பாக நடந்தது - நடப்பதுபோல' ஏகாதிபத்தியங்களும் செய்தி நிறுவனங்களும் பிரச்சாரம் செய்கின்றன. வறட்சிக்கு இனக்குழுச் சண்டையே, அதன் சேதங்களே காரணம் என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய நிவாரண உதவிகளை தடுக்கும் கொரில்லாக்களை ஒடுக்க வேண்டும் என்றும் நிலைமையை பூதாகரமாக்கி தமது துருப்புகளை சோமாலியாவில் இறக்குவதற்கு நியாயம் கற்பித்துக் கொள்கின்றன. ஆனால் சோமாலியாவின் வறட்சிக்கு காரணமும் இனக்குழுச் சண்டையை தூண்டிவிட்டவையும் ஏகாதிபத்தியங்கள்தான் என்ற உண்மையை மூடிமறைக்கவே இப்பெரிய கூச்சல்! இவற்றைப் பற்றியும் "மனிதாபிமான உதவி" என்ற பெயரில் சோமாலியாவில் துருப்புக்களை இறக்கி நாடகமாடும் அமெரிக்காவின் உண்மையான நோக்கத்தைப் பற்றியும் பார்ப்போம்.

ஆமையும் அமீனாவும் புகுந்த வீடு போல் உலகவங்கியும் ஐ.எம்.எப்-பும் புகுந்த நாடும் உருப்படாது என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் ஆப்பிரிக்க நாடுகள்.

1960-ல் உலக வங்கியும் உணவு மற்றும் விவசாய நிறுவனமும் (FAO) எத்தியோப்பியாவில் உள்ள அவாஷ் பள்ளத்தாக்கை முன்னேற்றுவதாகக் கூறி ஓடோடி வந்தன. அப்பகுதியிலிருந்த 2 லட்சம் பழங்குடி மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அவர்களது நிலமும் நீரும் பறிக்கப்பட்டது. நவீனமுறை விவசாயத்தின் மூலம் நாட்டை முன்னேற்றப் போவதாகக் கூறிக்கொண்டு பாரம்பரிய விவசாய உற்பத்தி முறைகளை நாசமாக்கினர். நவீன கூட்டுப் பண்ணை விவசாயத்தின் மூலம் இஸ்ரேல், இத்தாலி, பிரிட்டிஷ், டச்சு நிறுவனங்கள் கொள்ளையடித்தன. இதனால் 12 ஆண்டுகளுக்குள் மண் சாரமிழந்து அப்பகுதியே பாலைவனமாகியது. இதனால்தான் 1972-லிருந்து எத்தியோப்பியாவை வறட்சி பீடித்து லட்சக்கணக்கானோர் மடிந்தனர்.

ஆப்பிரிக்காவிலுள்ள இன்னுமொரு நாடு சூடான். 1983-க்கு முன்பு அது வளமான விவசாய மூலாதாரங்களைக் கொண்டும், பணப்பயிர் ஏற்றுமதியில் முன்னணியிலும் இருந்தது. உலகவங்கியும் உணவு மற்றும் விவசாய நிறுவனமும் உதவ முன்வந்த பின் சூடானின் உணவு - தானிய உற்பத்தி சீர்குலைந்தது. லாபம் கருதி ஏற்றுமதி அடிப்படையிலான பணப்பயிர் உற்பத்திக்கே முக்கியத்துவமளித்து நன்செய் நிலங்களை பாழாக்கியும், நிலத்தடி நீரை எல்லைமீறி உறிஞ்சி எடுத்தும் குறுகிய காலத்திலேயே நாட்டை பஞ்ச பூமியாக்கினர். பல லட்சம் மக்கள் பட்டினியால் மாண்டனர்.



பட்டினிக் கொடுமைக்கு சோமாலியா மக்கள் 90% பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தினம் ஆயிரக்கணக்கானோர் மடிகின்றனர். இதில் குழந்தைகளே அதிகம்.

ஏகாதிபத்தியங்களின் ரசாயனக் கழிவுகளையும் அணுஉலை கழிவுகளையும் கொட்டுவதற்குரிய குப்பைத்தொட்டிகளாகவே ஆப்பிரிக்கா பயன்படுத்தப்படுகிறது. ஆப்பிரிக்க நாடுகளின் வறுமை, அவர்களுக்கிடையிலான மோதல்களைச் சாதகமாக்கிக் கொண்டு அக்கழிவுகளை பூமிக்கடியில் புதைத்து ஏகாதிபத்தியங்கள் ஏராளமாக பணமும் ஆயுதமும் கொடுத்துதவின. கினியா - பிசாவ் எனும் மிகச் சிறிய நாடு இவ்வலையில் விழுந்து பகிரங்கமாகவே ஏகாதிபத்தியங்களின் குப்பைத் தொட்டியாக விளங்குகிறது. இக்கழிவுகளால் நிலத்தடி நீர் நஞ்சாகியும் மண்வளம் குன்றியும் அச்சுற்று வட்டார பகுதியில் புல்பூண்டே முளைக்காமலும் போய்விடுகின்றன.

அண்மையில் சோமாலியாவின் நெருக்கடிகளைப் பயன்படுத்தி "நிவாரணப் பொருட்கள்" என்று நயவஞ்சகமாக ஏகாதிபத்திங்கள் கழிவுகளைக் கொண்டு வந்து சோமாலியா கடற்கரையோரமாக கடலில் புதைத்திருக்கின்றன. இக்கழிவை புதைத்தது அமெரிக்காவா? இத்தாலியா? என்று விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் கேடுகெட்ட ஐ.நா. பாதுகாப்புக் குழுவினர்.

இதுவன்றி சமூக நலக்காடுகள் வளர்ப்புத் திட்டம் என்ற பெயரில் யூக்கலிப்டஸ் மரங்களை நட்டும், என்ணெய் வித்து வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் சூரிய காந்தியை பயிரிட்டும் ஏகாதிபத்தியங்கள் ஆப்பிரிக்காவில் அநேக நாடுகளை கொள்ளையடிக்கின்றன. இவை நிலத்தடி நீரை ஒட்ட உறிஞ்சி விடுவதோடு, காற்றிலுள்ள ஈரப்பதத்தையும் உறிஞ்சி விடுகின்றன.

1983 வரை எந்த ஒரு ஆப்பிரிக்க நாடும் பெரும் கடன்கார நாடாக இருந்ததில்லை. ஆனால் இன்று ஏறத்தாழ விவசாய உற்பத்தியும் பொருளாதாரமும் நிலைகுலைந்து போய் எல்லா நாடுகளும் கோடிக்கணக்கான ரூபாய் கடன் சேற்றில் புதைந்து கிடக்கின்றன. மாலி, செனகல் ஆகிய நாடுகளில் அரிசி உற்பத்தி செய்வதைக் காட்டிலும் தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்வது மலிவானதாகி விட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஏகாதிபத்தியங்களும் உலக வங்கியும் வளர்ச்சித் திட்டம், உதவி என்ற பெயரில் அடித்த கொள்ளையே இவற்றிற்கு முழுக்காரணம். எனவே ஆப்பிரிக்க நாடுகளின் வறட்சி இயற்கையல்ல; ஒருவித செயற்கையே!

இனக்குழுச் சண்டைகளும் ஏகாதிபத்தியங்கள் தமது ஆதாயத்திற்காக பதவி - பொருளாசைக்காட்டி விதைத்த பகைமையின், இன ஒதுக்கலின், சதிகளின் விளை

ஆமையும் அமீனாவும்
புகுந்த வீடுபோல் உலக
வங்கியும், ஐ.எம்.எப்-பும்
புகுந்த நாடும் உருப்படாது
என்பதற்கு
எடுத்துக்காட்டுதான்
ஆப்பிரிக்க நாடுகள்.
எத்தியோப்பியா, சூடான்
வரிசையில் சோமாலியாவும்
இன்று சிறந்த
உதாரணமாகியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



பசி தாழாமல் நிவாரண உதவி உணவை திருட முயற்சித்ததற்காக அமெரிக்கப் படையின் கையில் வதைபடும் சோமாலிய சிறுவன்; காலங்காலமாக சோமாலியா வின் வளத்தைத் திருடியவர்களை என்ன செய்வது?

வேயாகும். ஆப்பிரிக்க நாடுகள் 19-ம் நூற்றாண்டு வரை டச்சு, பிரான்சு, பிரிட்டன், இத்தாலியின் காலனிகளாக இருந்தன. சோமாலியாவின் வடபகுதி பிரிட்டனுக்கும் தென்பகுதி இத்தாலிக்கும் காலனியாக இருந்தது. இரு பகுதிகளிலும் சோமாலியர்கள் சுதந்திரம் கோரி பல போராட்டங்களை நடத்தினர். இரு பகுதி சோமாலியர்களும் இணைந்து போராட எவ்வளவோ முயன்றும் ஏகாதிபத்தியங்களின் சதித்தனங்களால் தோல்வியையே சந்தித்தனர்.

சோமாலியா மக்களின் விடுதலைக்கான போராட்டம் மற்றும் இரண்டாம் உலகப்போருக்குப் பின் உள்ள பின்னடைவு காரணமாக ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் 1960-ல் காலனித்துவத்தை கைவிட்டன. எனினும் இந்தியாவைப் போலவே சோமாலியாவிற்கு கிடைத்ததும் பெயரளவிற்கான சுதந்திரமே! அதன்பின் பல்வேறு ஏகாதிபத்தியங்களின் கொள்ளைக்காடாக மாறிய சோமாலியாவில் மேற்கத்திய பாணியிலான ஆட்சி முறையை அமெரிக்க எடுபிடிகள் நிர்மானித்தனர். இந்த ஆட்சியிலும் லஞ்சம், ஊழல், இன ஒதுக்கல் இருந்ததைக் கண்டு வெறுப்புற்ற மக்கள் மீண்டும் தீவிரமாகப் போராடத் தொடங்கினர். இதன் உச்சக்கட்டமாக 1969, அக்டோபரில் முதல் ஜனாதிபதி கொலை செய்யப்பட்டார்.

இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி ராணுவத் தளபதி சியாட் பேரே என்ற சர்வாதிகாரி ஆட்சியைப் பிடித்தான். சியாட் பேரே ஒரு இனவெறியன், அமெரிக்க விசுவாசியும் சந்தர்ப்பவாதியுமாவான். ஆக்கிரமிப்பு போர் வெறியன். ஹிட்லரின் பேரன் என்றும் கூறலாம்.

சியாட் பேரே ''தாரோட்'' (DAROD) இனக்குழுவைச் சேர்ந்தவன். இவ்வினக்குழுவினர் சோமாலியாவின் மொத்த ஜனத்தொகையில் 28 சதவிகிதம் பேர் - அதாவது சிறுபான்மையினர். வடக்கில் உள்ள ''இசாக்'' (ISSAQ) இனத்தினரும் தெற்கில் ''ஹாவ்விஜே'' (HAWIJE) இனத்தவருமே பெரும்பான்மையினர். பேரே, ''தாரோட்'' இனத்தவர்தான் உயர்ந்த மரபினர் என்றும் இவர்கள்தான் சோமாலியாவை ஆள வேண்டும் என்றும் வெறி கொண்டலைந்தான். தனது குடும்பத்தினர், இனத்தினரையே உயர்ந்த பதவிகளில் அமர்த்தினான். ஏற்கனவே உயர் பதவிகளில் இருந்த ''இசாக்'' ''ஹாவ்விஜே'' இனத்தினர் பாதிக்கப்பட்டனர். இதிலும் ''இசாக்'' இனத்தின் மீதே குறிப்பாக பகைமை கொண்டு பழிவாங்கினான் பேரே. தெற்கில் தலைநகர் மொகதிஷு இருப்பதாலும் ''ஹாவ்விஜே'' இனத்தலைவர்கள் சிலருடன் சமரசம் செய்து கொண்டதாலும் ''இசாக்'' இனத்தினர் எவ்வித சமரசமும் இல்லாமல் எதிர்த்ததாலும்தான் பேரே ''இசாக்'' இனத்தவரை குறிப்பாக பழிவாங்கினான்.

ஜனாதிபதியும் வெளியுறவு அமைச்சரும் ''இசாக்''-காரர்களாக இருந்ததால் பதவி விலக்கப்பட்டனர். அரசு அலுவலகங்கள், கல்வி-பொது நிர்வாகங்களில் எல்லாம் ''இசாக்''-காரக்களை நீக்கினான். வடக்கில் உள்ள வியாபாரிகள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், அலுவலக ஊழியர்கள் பலர் காரணமே இல்லாமல் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர். ஹர்ஜீய்சா, புரோ, சேக், பர்பரா போன்ற வடபகுதிகளில் 60-க்கும் மேற்பட்டவர்கள் சுடப்பட்டனர். பலர் உயிரோடு கிணற்றில் வீசிக் கொல்லப்பட்டனர். இக்கொடுமைகளுக்கு எதிராக பாதிக்கப்பட்ட மக்களும், மாணவர்களும், மருத்துவர்கள், அரசு ஊழியர்கள் முதலான அறிவு-தொழிற்துறையினரும் தமக்குள் சங்கம் அமைத்துக் கிளர்ந்தெழுந்து போராடினர். இவர்களின் சங்கத்தை தடைசெய்ததோடு, தனது உறவினன் கானி என்பவனை வடக்கின் கவர்னராக நியமித்து மேலும் அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டான் பேரே. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

> ''புதிய உலக ஒழுங்கமைப்பின் கீழ்'' உலக நாடுகள் வெற்றிக் கொள்வதில் முனைப்பாக இருக்கும் அமெரிக்கா, சோமாலியாவின் நெருக்கடியான நிலையை சாதகமாக்கிக் கொண்டு ராணுவத்தை இறக்கி தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட எத்தனிக்கிறது.

''இசாக்'' இனத்தினர் லண்டனின் 1981-ல் உருவாக்கப்பட்ட சோமாலி தேசிய இயக்கம் (SNM) என்ற அமைப்பு எத்தியோப்பியா அரசின் தூண்டுதலில் வடக்கு சோமாலியாவில் காலூன்றியது. இதையும் கடுமையாக ஒடுக்கினான். இதனால் இவ்வியக்கம் தலைமறைவாகி கொரில்லாப் போரை தொடர்ந்தது. வடக்கில் உள்ள ''இசா'' ''கோதாபுர்சி'' ''வ்ார் செங்கிலி'' போன்ற இனக்குழுவினரது அமைப்புகளுடன் கூட்டு சேர்ந்து பலமாக வளர்ந்தது. 1977-78-ல் எத்தியோப்பியாவுடன் போர்தொடுத்ததன் விளைவாக ''ஒகேதன்'' என்ற இனக்குழுவினர் அகதிகளாக வந்து வடக்கு சோமாலியா பகுதியில் தங்கினர். இவர்கள் இரத்த உறவில் ''தாரோட்'' இனக்குழு மரபினருடன் தொடர்புடையவர்கள். ஆதலால், இக்குழுவினரை வடக்கில் குடியமர உதவியதோடு பலரை ராணுவத்திற்கும் சேர்த்து தனது கரத்தை பலப்படுத்திக் கொண்டான் பேரே.

1985-ல் நடந்த ஒரு சம்பவமே பேரே ஆட்சியின் அடக்குமுறைக்கு சான்று சொல்லப் போதுமானது. வடக்குப் பகுதியின் ராணுவத் தளபதி பூலே என்பவன் ஹெர்ஜீய்சாவிலுள்ள ஒரு தொடக்கப்பள்ளிக்கு காலையிலேயே சென்று ''இசாக்'' இனத்தினரது பிள்ளைகளை வரிசையாக நிறுத்தி மிகக் கீழ்த்தரமாக நடத்தினான். மோசமாக ஆபாசமாகத் திட்டினான். இதை மூத்த மாணவர்கள் பலர் எதிர்க்கவே, ஆத்திரமடைந்த பூலே, தனது வாகன ஓட்டுனர், உதவியாட்களைக் கொண்டே 7 முதல் 10 வயதுடைய மாணவர்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கியால் தாக்கி காயப்படுத்தினான். இதுபோன்ற காட்டுமிராண்டித் தாக்குதல்கள் ஏராளமாக ஆங்காங்கே நடப்பதைத் தொடர்ந்து பேரே அரசுக்கு எதிரான போர் வடபகுதியில் மட்டுமல்லாது தெற்கிலும் வெடித்துப் பரவியது.

இங்கு இன்னொன்றைக் குறிப்பிட வேண்டும். சோமாலியாவின் வறுமை, பஞ்சம் காரணமாக பிழைப்புத் தேடி லட்சக்கணக்கானோர் அகதிகளாக வெளியேறி எத்தியோப்பியா, கென்யா நாடுகளில் போய் குடியேறினார்கள். இவர்கள் வாழ்ந்த பகுதியையும் சோமாலியாவுடன் இணைத்துவிட வேண்டுமென போர்வெறி பிடித்தலைந்த பேரே அதற்காக முதலில் எத்தியோப்பியாவுடன் போர்தொடுத்தான். உள்நாட்டு போர் தீவிரமாகியதால் இவற்றை ஒடுக்க

படிப்பகம்

www.padippakam.com

கவனம் செலுத்த வேண்டுமானால் எத்தியோப்பியாவுடனான போரை நிறுத்த வேண்டியிருந்தது. 1988-ல் எத்தியோப்பியா அதிபர் மெங்கிஸ்துவுடன் சமரச உடன்பாடு கான விரும்பினான். ஆனால் மெங்கிஸ்து ஒத்துக்கொள்ளாமல் போரை தொடர்ந்ததோடு சோமாலியா தேசிய இயக்கத்தைக் கொண்டு உள்நாட்டிலும் போரைத் தூண்டினான்.

மெங்கிஸ்து, சோமாலியா தேசிய இயக்கத்தை தூண்டிவிட்டு பேரே-வுக்கு நெருக்கடி கொடுத்ததற்கும் ஒரு பின்னணி உண்டு. மெங்கிஸ்துவும், பேரேயும் பொம்மைகள்தான். இவர்களுக்கு சாவிகொடுத்தது அமெரிக்காவும் ரசியாவும்!

பேரே ஆட்சிக்கு வந்ததும் எத்தியோப்பியா, கென்யா பகுதியிலுள்ள சோமாலிய மக்கள் வாழும் பகுதியை இணைப்பதற்காக அவ்வகதிகளில் ஆயுதப் பிரிவினரை உருவாக்கி அவ்வரசுகளுக்கு எதிராக தனிநாடு கேட்டு போரிடத் தூண்டிவிட்டான். குறிப்பாக எத்தியோப்பியாவில் அப்பொழுதிருந்த அமெரிக்க எடுபிடி ஹெய்லே செலாஸ்ஸி அரசுக்கு எதிராக கலகத்தை தூண்டிவிட்டான். இதற்காக உதவிகளைப் பெறுவதற்காக ரஷ்யாவிடம் கையேந்தினான். அமெரிக்காவிற்கு போட்டியாக ராணுவத் தளங்களை உலகம் முழுவதும் நிறுவிக் கொண்டிருந்த ரஷ்யாவிற்கு ஆப்பிரிக்காவிலும் ஒரு பகுதி தேவைப்பட்டது. ஏதன் நாட்டு வளைகுடாப் பகுதியில் போர்க்கப்பல், போர் விமானத் தளங்களை அமைத்துக் கொண்டு பேரேவுக்கு ஆயுத உதவி செய்தது ரஷ்யா - ஆனால் எத்தியோப்பியாவில் 1974-ல் போலி சோசலிசவாதி மெங்கிஸ்து ஆட்சியைப் பிடித்ததும் ரஷ்யா, பேரேயைக் கைவிட்டு மெங்கிஸ்துவை ஆதரித்தது. இதனால் எத்தியோப்பிய படைகள் சோமாலியா துருப்புகளைத் தீவிரமாகத் தாக்கி பெருஞ்சேதம் விளைவித்தன. உடனே அமெரிக்க உதவியை நாடி ஓடினான் பேரே.

1979-ல் அமெரிக்க அடிவருடியான ஈரானின் ஷா அரசு வீழ்ந்ததால் அப்பிராந்தியங்களில் மாற்று வழி தேடிக் கொண்டிருந்தது அமெரிக்கா. எனவே அருகில் உள்ள எண்ணெய் வளமிக்க அரேபிய நாடுகளை மையமாக வைத்து தனது போர்த்தந்திரத்திற்கு சோமாலியாவை செயல்பாட்டுத் தளமாக பயன்படுத்த முனைந்தது. ருஷ்யா துருப்புகளை திரும்பப் பெறுவதற்கு நிர்ப்பந்திக்க - தாக்குதல் தொடுக்க சோமாலியாவை ஒரு களமாகவும் பயன்படுத்தும் நோக்கத்திலும் அமெரிக்கா பேரேவை வளைத்துப்போட்டது. 1980-ம் வருடத்தில் மட்டும் 700 மில்லியன் டாலர் பெறுமான ராணுவ - ஆயுத பொருட்களைக் கொடுத்து தவியது. பெர்பெரா என்ற இடத்தில் ராணுவ கப்பல் தளத்தை அமைத்தது அமெரிக்கா.

இப்பின்னணியின் தூண்டுதலினாலேயே மெங்கிஸ்துவும் பேரேவும் எதிரிக்கு எதிரி நண்பன் என்கிற முறையில் இனக்குழுக்களைத் தூண்டிவிட்டு ஆதாயமடைந்தனர். ஆனால் பேரேவால் வெகுநாட்கள் தாக்குப்பிடிக்க முடியவில்லை. மூன்று பெரிய இனக்குழுக்கள் ஒன்றிணைந்து தாக்குதல் தொடுக்கவே பேரேயின் அரசு நிலைகுலைந்தது. 1990-ல் பேரே அரசு மரணப் படுக்கையில் வீழ்ந்ததால் அமெரிக்கா பேரேவுக்கு கொடுத்துவந்த ஆதரவை மெல்ல பின்வாங்கி அதற்குப் பதிலாக போராடும் இனக்குழுக்களில் தெற்கில் உள்ள பெரிய குழுவான ''ஹாவ்விஜே''-யை ஆதிரிக்கத் தொடங்கியது. அவர்களின் அமைப்பான ''ஐக்கிய சோமாலி காங்கிரஸ்'' (USC) உடன் பேச்சு வார்த்தை நடத்தி உடன்படிக்கை செய்துகொள்ள முயன்றது. உடன்பாட்டிற்கு வராததால் அதன் முக்கியத் தலைவர்களான முகம்மது பாராஹ் எய்தித். அலி மஹ்தி முகம்மது ஆகியோர் ''ஹாவ்விஜே'' இனத்திலேயே இரு துணைக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பயன்படுத்தி அலி மஹ்தி முகம்மதுவிற்கு பதவி ஆசைக்காட்டி ''ஐக்கிய சோமாலி காங்கிரசையே'' இரண்டாக உடைத்தது. 1991 ஜனவரியில் பேரேவை விரட்டிவிட்டு இடைக்கால ஜனாதிபதியாக அலி மஹ்தி முகம்மதுவை நியமித்தது. இந் நியமனத்தை எதிர்த்து மொகாதிஷுவில் செல்வாக்காக உள்ள எய்தித்து குழுவினர் தீவிரமாக தாக்குதல் தொடுத்து வருகின்றனர். இவையனைத்தையும் தமது கைப்பாவையான ஐ.நா. சபையை வைத்து ''உதவி - நிவாரணம்'' என்ற பெயரிலேயே நயவஞ்சமாக அரங்கேற்றியது அமெரிக்கா.



தற்போது எய்தித்து குழுவினர் 11 துணை இனக்குழுவினருடன் சேர்ந்து கூட்டமைப்பு ஒன்று உருவாக்கிக் கொண்டு போர்தொடுத்து வருகின்றனர். எனவே எய்தித்து குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தி ஆசைகாட்டி பணியவைக்க முயன்று வருகிறது. அமெரிக்கா. இன்னொருபுறம் பேரேயின் அமைச்சரவையில் பதவியிழந்தவர்களைக் கொண்டும் போராடும் இனத் தலைவர்களைக் கொண்டும் ''இடைக்கால அரசாங்கம்'' அமைக்கவும் நாடி பிடித்து பார்த்து வருகிறது.

வடக்கில் போராடிய சோமாலி தேசிய இயக்கத்தினர் வடபகுதியை ''சுய சார்பு குடியரசாக'' (சோமாலி லேண்ட்) அறிவித்துவிட்டு பிரிட்டன், அமெரிக்கா உதவியுடன் சர்வதேச அங்கீகாரத்திற்காக காத்து நிற்கிறார்கள். தனிநாடு அங்கீகாரத்தை மறுத்தால் அவர்களும் போராட தொடங்கிவிட்டால் பிரச்சினை பூதாகரமாகும் என்பதால் தற்போதைக்கு எதுவும் கூறாமல் தெற்கில் எப்படியாவது அமைதியைக் கொண்டுவந்து தமது யுத்தத் தந்திரத்திற்கு அடித்தளம் இடமுனைகிறது, அமெரிக்கா. இதுவன்றி சோமாலியாவின் வடபகுதியில் ''இட்டிகாட்'' (இஸ்லாமிக் யூனியன் பார்ட்டி) என்கிற மத அடிப்படைவாத அமைப்பும் செல்வாக்குடன் உள்ளது. பேரேயின் போலி சோசலிசக் கொள்கை, அமெரிக்க சார்பு முதலானவற்றால் முஸ்லீம்களின் மரபுகள் பாழாகுவதாகக் கூறும் ''இட்டிகாட்'', முஸ்லீம் மதவாத ஆட்சியை (சோமாலியாவை ஒருங்கிணைத்து) நிறுவுவதற்காக முயல்கிறது. பேரே காலத்திலிருந்து காலூன்றி வளரும் இவ்வமைப்பு சௌதி அரேபியா, ஈரான், பாக்கிஸ்தான், சூடான் முதலான நாடுகளின் மத அடிப்படைவாத அமைப்பு உதவியுடன் செயல்படுகிறது. சோமாலியாவில் அந்நிய தலையீட்டை எதிர்த்து ஐ.நா.படை - அமெரிக்கப் படையினரைத் தாக்கியும், மேற்கத்திய அதிகாரிகள் - வெள்ளையினக் குடும்பங்களை தாக்கியும் நிவாரண உதவிகளை தடுத்தும் வருகிறது, ''இட்டிகாட்''.

சோமாலியாவின் உள்நாட்டு போர் - இனக்குழுச் சண்டை இவ்வாறு ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்காகத் தூண்டிவிடப்பட்டு இன்று அவைகளுக்கு ஒரு தலைவலியாகி நிற்கிறது. சோமாலியாவின் ஒடுக்குமுறைக்கு எதிராக தோன்றிய பல்வேறு தேசிய - இன அமைப்புகளும் முஸ்லீம் மத அடிப்படைவாதிகளும், ரஷ்யா, அமெரிக்கா, பிரிட்டனின் சதிக்குள்ளாகி கைப்பாவையாகவே செயல்படுகின்றன.

மேலுள்ளவற்றிலிருந்து ''உதவி - நிவாரணம்'' என்ற பெயரில் சோமாலியா மீது இரக்கப்படும் அமெரிக்காவின் நோக்கத்தையும் புரிந்து கொள்ள முடியும். தனது ''புதிய உலக ஒழுங்கமைப்பின் கீழ்'' உலக நாடுகளை வெற்றிக் கொள்வதில் முனைப்பாக இருக்கும் அமெரிக்கா, சோமாலியாவின் நெருக்கடியான நிலையை சாதகமாக்

படிப்பகம்

www.padippakam.com



பசியோடு காத்திருந்த சோமாலியா சிறுவர்களுக்கு உணவு கிடைக்கவில்லை. இப்படி உதைதான் கிடைக்கிறது. அமைதியை நிலைநாட்டுகிறோம் என்ற பெயரில் அப்பாவிகளைத் தாக்கி ஆட்டம் போடும் சிப்பாய்.

கிக் கொண்டு தனது மேலாதிக்கத்தை நிலைநாட்ட எத்தனிக்கிறது. மேலும் ஆப்பிரிக்க நாடுகளில் தொழில் உற்பத்தியே ஏறக்குறைய இல்லாமல் சர்வதேச உழைப்பு பிரிவினையிலிருந்து தனிமைப்பட்டிருப்பதாலும் இன்று அமெரிக்காவின் குவிமையமாக ஐரோப்பிய சமூக நாடுகள் இருப்பதாலும் சோமாலியா போன்ற ஆப்பிரிக்க நாடுகளை குப்பைத் தொட்டிகளாகவும், ராணுவக் கிடங்குகளாகவும், ஆயுதப் பரிசோதனைக் களங்களாகவும் மட்டும் பயன்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கமாக உள்ளது.

தற்போது 30,000 துருப்புகளை இறக்கியதோடு, மேலும் துருப்புகளையும் போர் விமானங்களையும் இறக்குவதற்காக சோமாலியாவின் போக்குவரத்தையும் விமான - கப்பல் தளங்களையும் செப்பனிடுவதில் முக்கிய கவனம் செலுத்துவதிலிருந்தே அமெரிக்காவின் நோக்கம் நன்கு புலப்படுகிறது. அண்மையில் சோமாலியா சென்ற புஷ் முக்கியமாக போர் விமான - கப்பல் தளங்களை பார்வையிட்டுச் சென்றார். நிவாரண உதவி என்பதெல்லாம் உலக மக்களை ஏய்ப்பதற்கான கண்துடைப்பே! சோமாலிய இனக்குழுக்களை ஒடுக்கி அமைதியைக் கொண்டுவர குறிப்பாக முனைவதும்கூட, பிரச்சினைகளின்றி விரைவில் சோமாலியாவை தமது நோக்கத்திற்கேற்ப மாற்றும் உள்நோக்கித்தில்தான்! சோமாலியாவின் பட்டினிச் சாவுகளை தடுப்பதற்கு காட்டும் ஆர்வத்தைவிட யூகோஸ்லாவியா - போஸ்னியாவில் உள்நாட்டு போரை ஒடுக்குவதற்கு பல கோடிகளைக் கொட்டி அமெரிக்கா அக்கறை செலுத்துவதிலிருந்து அதன் ''உதவி - நிவாரண'' மோசடி வெளிப்படையே!

அமெரிக்கப்படை இறங்கியதும் சோமாலியா மக்கள் நம்பிக்கை கொண்டதாகவும் தைரியமடைந்ததாகவும் உற்சாகமடைந்ததாகவும் இன்று பூதாகரமாகப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஆனால் அங்கோலா, மொசாம்பிக், ஸைரே, பனாமா முதலான நாடுகளில் புகுந்து அமைதியை நிலைநாட்டிய யோக்கியதையும் தற்போது போஸ்னியாவில் அமைதியை நிலைநாட்டும் லட்சணமும் நமக்குத் தெரியும்! எரிகிற நெருப்பில் புடுங்குகிறவனும் எண்ணெய் ஊற்றி குளிர்காய்பவனுமல்லவா அமெரிக்கா?! சோமாலியாவில் நிவாரண உதவியில் ஈடுபடும் வெளிநாட்டு ஊழியர்களே, ''அமெரிக்கத் துருப்புகள் இறக்குமதியால் நிலைமை தீவிரமடையவே செய்யும்'' எனக் கூறுகிறார்கள்.

என்ன கொடுமை? அமெரிக்கா நினைத்தால் ஒரு நாட்டையே பாலைவனமாக்குகிறது; சுடுகாடாக்குகிறது; குப்பைத் தொட்டியாக்குகிறது; அந்நாட்டு மக்களையே பட்டினிக் கொடுமைக்குத் தள்ளி பிணங்களாக்க முடிகிறது! உலகின் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு எவனோ ஒருவன் போடும் திட்டம் ஒரு நாட்டு மக்களையே பரதேசிகளாக்குகிறது - எலும்புக் கூடுகளாக்குகிறது! பசியோடு காத்திருக்கும் சோமாலியா மக்களை ''போராளிகள், தீவிரவாதிகள், கடத்தல்காரர்கள்'' எனக் கூறி சுட்டு பிணங்களாக்கி அப்பிணக் குவியல்மீது அமெரிக்க கொடியை நட்டு வாஷிங்டன் கோமான்கள் கண்டு களிக்கப் போவதை நாம் பார்க்கத்தான் வேண்டுமா? இன்று சோமாலியா! நாளை இந்தியா அல்லவா? பிணந்திண்ணி கழுகுக்கு எதிராக குரல் கொடுப்போம்!

● பழநி

# 355, 356: மாநில அரசுகளின் கழுத்துக்கு கயிறு

பாரதீய ஜனதாக் கட்சி ஆண்ட நான்கு மாநிலங்களிலும் ஆட்சிக் கலைப்பு; தமிழகத்தில் பாசிச ஜெயா ஆட்சி கலைக்கப்படும் என்கிற மிரட்டல் - வதந்தி, பீதி; இவற்றை ஒட்டி அரசியல் சட்டப் பிரிவு 356 மீதான காரசாரமான விவாதம் அரசியல் பண்டிதர்கள், அரசியல் கட்சிகளிடையே சூடுபிடித்துள்ளது.

மத்திய அரசு தான் விரும்பும் போதெல்லாம் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறியோ, கூறாமலோகூட மாநில ஆட்சிகளைக் கலைத்துவிட்டு, அரசுத் தலைவரின் பெயரால் தானே மாநில நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கான எல்லையற்ற அதிகாரத்தைத் தருவதுதான் இந்த 356!

பீற்றிக் கொள்ளப்படும் நாடாளுமன்ற ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி அமைப்பு ஆகியவற்றை வெறும் கேலிக் கூத்தாக்கிவிடுகிறது இந்த 356! மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் மாநில அரசு, பெரும்பான்மை பலம் பெற்றிருந்தபோதும் அதைக் கலைத்து மத்திய அரசு நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாம்; சட்டம் - ஒழுங்கு, மாநில மக்கள் நல்வாழ்வு ஆகியவற்றுக்கான சட்டம் இயற்றி மாநிலத்தை நிர்வகித்துக் கொள்ளும் சுயதிகாரம் உடைய மாநிலங்களின் கூட்டமைப்பு முறையைத் தகர்த்துவிடும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு — இதுதான் 356!

இந்த 356 மட்டுமல்ல; அரசியல் சட்டப் பிரிவு 355 மாநில ஆட்சியைக் கலைக்காமலேயே அதன் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்கான முழு அதிகாரத்தையும் மத்திய அரசுக்குத் தருகிறது.

''அந்நிய ஆக்கிரமிப்பு மற்றும் உள்நாட்டு கலவரங்கள் ஆகியவற்றில் இருந்து ஒவ்வொரு மாநிலத்தையும் காக்க வேண்டியது மத்திய அரசின் பொறுப்பாகும்; அரசியல் நிர்ணயச் சட்டத்துக்கு ஏற்ப ஒவ்வொரு மாநில அரசாங்கமும் நடந்து கொள்ளுவதை உத்திரவாதப்படுத்துவதும் மத்திய அரசின் பொறுப்பாகும்'' என்கிறது 355! இதன்படியே கூட மாநிலங்களுக்குள் தனது போலீசு, உளவுப்படை, இராணுவம், அதிகார வர்க்கத்தை ஏவி மத்திய அரசு அதிகாரம் செலுத்த முடியும்.

இது போதாதென்று மாநில நிர்வாகத்தை எந்த அளவு வேண்டுமானாலும் மத்திய அரசு கைப்பற்றிக் கொள்ளும் அதிகா

படிப்பகம்

www.padippakam.com

ரத்தை 356 வழங்குகிறது.

''அரசியல் சட்டத்தின்படி மாநில அரசாங்கத்தை நடத்திச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டதாக மாநில ஆளுநரிடம் இருந்து அறிக்கை பெற்றோ, வேறு வகையிலோ அரசுத் தலைவர் மன நிறைவடைவாரேயானால் மாநில நிர்வாக அதிகாரங்களைத் தாமே (மத்திய அரசே) மேற்கொள்வதாகப் பிரகடனப் படுத்தலாம்'' என்கிறது 356!

அரசியல் சட்டத்தின் இந்த 355, 356 ஆகிய பிரிவுகள் மத்திய அரசுகளினால் முறைகேடாகப் பயன்படுத்தப்படும், கூட்டமைப்பு மற்றும் ஜனநாயகத்துக்கு விரோதமானவை என்று அரசியல் நிர்ணய சபையில் இருந்த எச்.வி.காமத், சிப்பான்லால் சக்சேனா, நசுருதீன் அகமது, எச்.என் குன்ஸ்ரூ ஆகியோரால் கடுமையாக எச்சரித்து எதிர்க்கப்பட்டது.

நேரு - பட்டேல் ஆகிய எதேச்சதிகாரிகளின் அமைச்சரவையில் சட்ட மந்திரியாக இருந்த பி.ஆர். அம்பேத்கார்தான் இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தின் தந்தை என்று போற்றப்படுகிறார். அவர் இந்த 355, 356 உட்பட பல ஜனநாயக, குடியுரிமை விரோத சட்டங்களும் முறைகேடாகப் பயன்படுத்தப்படும் என்பதை முழுமையாக ஏற்றுக் கொண்டார். ஆனால், அப்படி அவை பயன்படுத்தக்கூடாது என்பதற்கான அறிவுரையும் விளக்கங்களும் மட்டுமே அளித்தார். அதேசமயம் இத்தகைய சட்டங்களை விலக்கிக் கொள்ளவோ, திருத்தவோ, இவற்றை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வேறு மாற்றங்களோ எதுவும் கொண்டு வருவதை ஏற்காது, நிராகரித்தார். ஆகவே, அம்பேத்கார், நேரு உட்பட இந்திய 'தேசிய' 'ஜனநாயக'வாதிகள் அனைவரும் இந்த 355, 356 ஆகிய சட்டப் பிரிவுகள் கேடாகப் பயன்படுத்தப்படும் என்பதை அறிந்தே கொண்டுவந்தனர்.

இதுவரை 100 தடவைக்கு மேலாக மாநில ஆட்சிகள் கலைக்கப்பட்டு மத்திய அரசின் ஆட்சி விதிக்கப்பட்டிருக்கிறது. நாட்டில் உள்ள மாநிலங்கள் அனைத்தும் ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேலாக அரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இவை ஒட்டுமொத்தமாக 50 ஆண்டுகளுக்கு மேலாக இப்படி இருந்துள்ளன. அதாவது, நாட்டு மக்கள் அனைவருக்குமே தாங்கள் தேர்ந்தெடுக்கும் ஆட்சி அமைத்துக் கொள்ளும் ''ஜனநாயக உரிமை'' மறுக்கப்பட்டுள்ளது.

இன்றியமையாத, விதிவிலக்கான நிலைமைகளில் மட்டுமே பயன்படுத்தப்படும் என்று அரசியல் சட்டப் பிதாமகன்களால் வாக்குறுதியளித்துக் கொண்டு வரப்பட்ட இந்த எதேச்சதிகாரச் சட்டப் பிரிவு வேண்டிய போதெல்லாம் அவசியமின்றி, அராஜகமாக ஏவிவிடப்பட்டது.

இப்போதும் இந்த ஆட்சி அமைப்பின் கீழ் அதிகாரத்தைச் சுவைத்துவிட்ட அரசியல் கட்சிகளில் இந்த ஆட்சிக் கலைப்புச் சட்டப் பிரிவுகளை ஆதரிக்காதவையே கிடையாது; அதேசமயம் இப்பிரிவுகளைப்



பிரயோகிப்பதை எதிர்க்காத கட்சிகளும் கிடையாது. ஆம். இந்தக் கட்சிகள் அனைத்துமே விதிவிலக்கின்றி இந்த ஆட்சிக் கலைப்புச் சட்டப் பிரிவுகளை முறைகேடாகப் பயன்படுத்தியவை அல்லது துணைநின்றவைதாம். அதேசமயம் தமக்கு எதிராகப் பிரயோகிக்கப்படும்போது எதிர்ப்பவைதாம். கடந்த 40 ஆண்டு அரசியல் நிகழ்ச்சிகளே இதற்குச் சான்றாகும்.

உச்சநீதிமன்ற நீதிபதி சர்க்காரியா தலைமையில் மத்திய — மாநில உறவுகளை மறுபரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்ட கமிசன் 1988-ல் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. அதை ஏற்பதாகக் கூறிய மத்திய அரசுகள் எதுவும் அமுலாக்கவில்லை. இந்த சர்க்காரியா, ஆளும் காங்கிரசின் விசுவாசி என்பது ஊரறிந்த உண்மை. இவரே இந்த ஆட்சிக் கலைப்பு சட்டப் பிரிவு - 356, மத்திய அரசினால் மூன்றில் இரண்டு தடவை முறைகேடாக, அரசியல் சுயநலத்துக்காகப் பயன்படுத்தப் பட்டதாக ஒப்புக்கொள்கிறார். இம்மாதிரி நடப்பதைத் தவிர்ப்பதற்கு சர்க்காரியா கமிசன் மேலெழுந்தவாரியான சில சீர்திருத்தங்களைச் சொல்லுகிறது; ஆனால், அவற்றையும் ஆளும் கட்சிகள் உதட்டளவில் மட்டுமே ஏற்றுக்கொண்டு கிடப்பில் போட்டுவிட்டன.

அரசியல் கட்சிகளுக்கிடையேயும், அரசியல் கட்சிகளுக்குள்ளேயும் நடக்கும் பதவிச் சண்டையின் காரணமாகத்தான் இந்த ஆட்சிக் கலைப்புச் சட்டப் பிரிவு இதுவரை பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டது. என்றாலும் மிக அதிக ஆண்டுகளாகவும், மிக அதிகத் தடவைகளாகவும் இது பஞ்சாப், காஷ்மீர் மாநிலங்களில்தான் பிரயோகிக்கப்பட்டுள்ளது; இது இச்சட்டப் பிரிவின் உண்மையான நோக்கத்தை நிரூபிப்பதாக உள்ளது.

ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தினால் பலாத்காரமாக உருவாக்கப்பட்ட இந்திய ஒன்றியத்தை கட்டிக்காப்பதற்காக, பல்வேறு தேசிய இன ஆளும் வர்க்கப் பிரிவுகளிடையே அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளவும்; பல்வேறு தேசிய இனங்களும் ஜனநாயக முறைப்படி சுயாதிபத்திய ஆளும் உரிமை பெற்றுள்ளதாக ஒரு மாயையை உருவாக்கி ஏய்க்கவும் ஓர் அரசியல் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், அதையே மதியாது இந்திய ஒன்றியத்தின் பேரால் இன உணர்வுகளை, உரிமைப் போராட்டங்களை ஒடுக்குவதற்கான எல்லையற்ற அதிகாரத்தை வழங்குவதுதான் இந்த 355, 356 ஆகிய சட்டப் பிரிவுகள் என்பது காஷ்மீர், பஞ்சாப் விவகாரங்களில் தெளிவாகத் தெரிகிறது.

ஆகவே 355 மற்றும் 356 ஆகிய தலையீடு, ஆட்சிக் கலைப்பு சட்டங்களுக்கு எவ்வளவு திருத்தங்கள் கொண்டுவந்தாலும் போதாது; அவற்றை அடியோடு நீக்கினால் மட்டும்போதாது. ஒவ்வொரு தேசிய இனமும் சுயநிர்ணய உரிமை பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் இந்திய ஒன்றியத்தின் ஒடுக்குமுறை சகிக்க முடியாது போய் விட்டது என எண்ணும் தேசிய இனங்கள் பிரிந்து போகவும், தமது ஆட்சியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையுடனும், நம்பிக்கையுடனும் வாழமுடியும்.

● மணி

படிப்பகம்

www.padippakam.com

# தெருமுனையெங்கும் ராமனுக்கு தீ!
# பார்ப்பன - இந்துமத ஆதிக்கத்திற்கு அடி!

சூத்திரனான சம்புகனைக் கொன்ற கொலைகாரன் ராமன். வாலியை மறைந்திருந்து அம்பெய்திக் கொன்ற கோழை ராமன். சீதையை நெருப்பிலிட்டு கொளுத்திய ஆணாதிக்க வெறியன் ராமன். திராவிடர்களை - பழங்குடிகளை நரவேட்டையாடிய காட்டுமிராண்டி ராமன். பார்ப்பன - சனாதன தர்மத்தை, நால்வருண ஆதிக்கத்தை நிலைநாட்டிய ஆரிய வெறியன் ராமன். இப்படிப்பட்ட ராமனைத்தான் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. கும்பல் தேசிய நாயகனாக சித்தரித்து அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து ராமனுக்கு கோயில் கட்டுவதாக நாடு முழுவதும் மதக்கலவரங்களை நடத்தி வருகிறது. எனவே தேசிய வில்லன் ராமனுக்கு மூட்டும் தீ, பார்ப்பன ஆதிக்கத்திற்கு மூட்டும் தீ! இந்து மதவெறிக்கு மூட்டும் தீ! ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. கும்பலுக்கு மூட்டும் தீ! — என பிரச்சாரம் செய்து மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் தமிழகமெங்கும் இயக்கம் மேற்கொண்டனர்.

திராவிடர்களை இழிவுபடுத்தி ராவணன் உருவப் பொம்மையைக் கொளுத்தி ''ராமலீலா'' என ஆண்டுதோறும் ஆட்டம் போடுகிறது பார்ப்பன - பனியா கும்பல். இதற்கு பதிலடிக் கொடுப்பதற்காக ராமனைக் கொளுத்தி ''ராவணலீலா'' கொண்டாடப் போவதாக அறிவித்தது, தி.க. ஆனால், பாபர் மசூதி இடிப்புக்குப்பின் ''நிலைமை சரியில்லை'' என சாக்குக் கூறி 'அம்மாவின் வேண்டுகோளுக்கிணங்க' கி.வீரமணியார் அந்நிகழ்ச்சியை காலவரையறையின்றி ஒத்திப்போட்டு விட்டார். ராமனைக் கொளுத்துவதாக அறிவித்த போது இந்து முன்னணி தலைவர் இராம.கோபாலன் பதிலுக்கு பெரியாரைக் கொளுத்துவதாகக் கூறியும் வீரமணியாருக்கு ரோசம் வரவில்லை; கோழைத்தனம்தான் வெளி வந்தது: அம்மாவின் கோபக் கண்களால் சொத்து பயம்தான் வந்தது!

ஆனால், ''ராமனைக் கொளுத்துவோம்! பெரியாரைக் கொளுத்துவதாகக் கூறிய இராம.கோபாலனையும் கொளுத்துவோம்!'' என்று பரவலாகப் பிரச்சாரம் செய்து எதிர்ப்பு தெரிவித்தன, ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள். மதுரையில் சுவர்களில் பெரிதாக எழுதப்பட்ட இவ்வாசகங்களைக் கண்டு பொறுக்க முடியாத 'தினமலர்' ஆள்காட்டி ஏடு, தீவிரவாதிகள் பெருகிவிட்டதாக கூச்சல் போட்டு தனது அரிப்புக்கு சொறிந்து கொண்டது. பூணூல்களின் ஆள்காட்டி வேலை, மிரட்டல், போலீசின் அடக்குமுறை, பொதுக்கூட்டத் தடைகளை மீறி இவ்வமைப்புகள் இயக்கத்தை எடுத்துச் சென்றன. தெருமுனைகளில் ராமன் படம் தமிழகமெங்கும் கொளுத்தப்பட்டன.

மதுரையில் 17.12.92 அன்று அயோத்தி - பாபர் மசூதி இடிப்பைக் கண்டித்து செல்லூர் 50 அடி ரோட்டில் பொதுக்கூட்டம்நடத்தம.க.இ.க.-வும்பு.மா.இ.மு.-வும் இணைந்து முடிவுசெய்தன. உயர்மட்ட போலீசு வரை அணுகியும் பொதுக்கூட்ட அனுமதி மறுக்கப்பட்டதால் இதை அம்பலப்படுத்தி தட்டி, தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாகப் பிரச்சாரம் செய்தன. தெருமுனைப் பிரச்சாரத்திற்குப் பின் தடையை மீறி ஒலிபெருக்கி இல்லாமல் பொதுக்கூட்டம் நடத்தினர். பு.மா.இ.மு.-வைச் சேர்ந்த முருகேசன், ம.க.இ.க.-வைச் சேர்ந்த கதிரவன் ஆகியோர் இந்துமத வெறியர்களை அம்பலப்படுத்திப் பேசினர். மழையின் காரணமாக பொதுக்கூட்டம் பாதியிலேயே தடைபட்டது.

ராமர் பட எரிப்பு தொடர்பான சுவரெழுத்துக்களை இந்துவெறியர்கள் அழித்தும், சுவரொட்டிகளை கிழித்தும் ஆட்டம் போட்டனர். ஆனால், திரும்ப எழுதி பிரச்சாரம் மேற்கொண்டு மதவெறியர்களின் முகத்தில் கரியைப் பூசினர். ராமன் பட எரிப்பு அறிவிக்கப்பட்டதும் 'கியூ' பிரிவு போலீசு பு.மா.இ.மு.-வினரை தேடிச் சென்று மிரட்டிவிட்டுப் போனது. ஆனால், திட்டமிட்டபடி 4.1.93 அன்று பெரியார் பேருந்து நிலையம் முன்பாக ராமன் படம் கொளுத்தப்பட்டது. ம.க.இ.க., பு.மா.இ.மு. மற்றும் பார்வையாளராக நின்ற பிற அமைப்பினர் சிலரும் சேர்த்து 11 பேர் கைது செய்யப்பட்டு அன்று மாலை விடுவிக்கப்பட்டனர். இச்செய்தியை வெளியிட்ட தினமலர், தான் முன்பே சுவரெழுத்தை படம்பிடித்துப் போட்டு எச்சரித்தும் போலீசு கண்டு கொள்ளாமலே இருந்தது என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி உசுப்பிவிட்டது.


படிப்பகம்

திருச்சி, திரு.வி.க. நகரில் பார்ப்பன ஆதிக்க சின்னம் ராமன் படத்தைக் கொளுத்தும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர்.

திருச்சியில் 25.12.92 அன்று திரு.வி.க. நகர், புத்தூர் - வண்டி ஸ்டாண்டு ஆகிய இடங்களில் பு.மா.இ.மு.-வினரும் 6.1.93 அன்று உறையூர் — நாச்சியார் கோயில் சாலை, திருச்சி பேருந்து நிலையத்தில், திருச்சி வெல்லமண்டி சாலை ஆகிய இடங்களில் ம.க.இ.க.-வினரும் ராமன் படத்தை பலத்த கோஷங்களுக்கிடையே சாம்பலாக்கினர். கூடவே அத்வானி, ஜோஷி, வாஜ்பாய், சங்கராச்சாரி படங்களையும் கொளுத்தினர். பு.மா.இ.மு.-வினர் மூன்றாவது இடத்தில் எரிக்கச் சென்ற போது மோப்பம் பிடித்துவந்த போலீசு சுற்றி வளைத்து கைது செய்தது. 6 பேர் கைதாகி அன்று மாலை விடுவிக்கப்பட்டனர்.

தஞ்சையில் ராமன் பட எரிப்பு சுவரொட்டியைக் கண்டதும் காலையிலே ரகசிய போலீசார் ம.க.இ.க.-வினரைப் பிடித்துச் செல்ல அலைந்தனர். இருவர் மட்டுமே பிடிபட்டனர். மாலையில் குறிப்பிட்ட நேரத்தில் பட எரிப்புக்காக குவிந்து எரித்தபோது அவர்களைக் கைது செய்து 151-வது பிரிவின்கீழ் வழக்கு போட்டது, போலீசு.

போலீசின் தேடுதல் வேட்டைக்கு மத்தியில் கைதாகாத வண்ணம் கரூரில் 22.12.92 அன்று இரு இடங்களில் ராமனோடு அத்வானி, ஜோஷி, வாஜ்பாய், சங்கராச்சாரி படங்களும் சேர்த்துக் கொளுத்தப்பட்டன. இதேபோல் சென்னையில் 4-1-93 அன்று சைதை சந்தை, தி.நகர் சந்தை, உயர்நீதிமன்றம் எதிரில் ஆகிய 3 இடங்களிலும் ராமன் சாம்பலானான். தர்மபுரி, சேலம், திண்டுக்கல் என்று தமிழ்நாடு முழுவதும் தெருமுனையெங்கும் ராமன் பட எரிப்பு வெற்றிகரமாக நடந்தது. பல்வேறு இடங்களில் ராமன் பட எரிப்பு பிரச்சாரத்தின் போது வம்புக்கு வந்த ''அவாள்'' கோஷ்டியினர் வாங்கிக் கட்டிக் கொண்டு போனார்கள்.

இதுவன்றி பாபர்மசூதி இடிக்கப்பட்ட உடன் அதைக் கண்டித்து பல வடிவங்களில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு போலீசாரால் தடுக்கப்பட்டது. கோவையில் 17-12-92 அன்று பொதுக்கூட்டம் நடத்த ம.க.இ.க.-வினர் முறைப்படி அனுமதி கேட்டும் பொய்சாக்கு கூறி கடைசி நேரத்தில் அடாவடித்தனமாக போலீசாரால் அனுமதி மறுக்கப்பட்டது. சென்னை - சைதாப்பேட்டையில் பு.மா.இ.மு. சார்பாக தூக்கிவிடப்பட்ட அத்வானி பொம்மையை போலீசு திருடிச் சென்றது. உத்தமபாளை

www.padippakam.com

யம் விவசாயிகள் விடுதலை முன்னணியினர். தேவாரம் நடுத்தெருவில் அத்வானி பொம்மையை செறுப்புமாலை போட்டு தூக்கில் தொங்கவிட்டனர். இந்து மத வெறியர்களின் தூண்டுதலால் போலீசு பொம்மையைக் கழட்டிச் சென்றதோடு தேடுதல் வேட்டை நடத்தி 10-12-92 அன்று வி.வி.மு. ஆதரவாளர் பாக்கியராஜ் என்பவரைக் கைது செய்தது. ''153 ஏ'' பிரிவின் கீழ் பொய்வழக்கு தொடுத்து மதுரை மத்திய சிறையிலடைத்தது.

மேற்கண்ட போலிசின் அடக்குமுறையின் மூலம் பார்ப்பன ஜெயா ஆட்சி இந்து மத வெறியர்களின் பக்கம்தான் என்பது நிருபணமாகியுள்ளது. மசூதியை இடித்த வானரக் கூட்டங்களுக்கு தமிழகத்தை ''சொர்க்க பூமி''யாக ஜெயலலிதா கதவு திறந்துவிட்டு இருக்கையில் இந்த அடக்குமுறையும் எதிர்பார்த்த ஒன்றே! ராமனுக்குத் தெருமுனையெங்கும் வைக்கப்படும் தீ பரவும்! இந்துவெறி கும்பலும் - பார்ப்பன 'ஜெ' கும்பலும் ஓடும்வரை பிரச்சாரத் தீ-யும் பரவும்!

## கூலி உயர்வு கொடு! விவசாயிகள் எழுச்சி!

மதுரை மாவட்டம், போடி நாயக்கனூரில் பல்லாயிரக்கணக்கான கூலி விவசாயிகள் அற்பக் கூலியைப் பெற்று ஏறிவரும் விலைவாசிக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவதியுறுகின்றனர். வறுமையின் பிடியில் அன்றாடம் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும் கூலி விவசாயிகள் இனியும் குனிந்து கொண்டே இருக்க முடியாது என நிமிர்ந்து போராடத் தொடங்கியுள்ளனர். கடந்த ஒரு மாதகாலமாக இப்பகுதியிலுள்ள விவசாயிகள் விடுதலை முன்னணியினர் துண்டுப் பிரசுரம், வீடுவீடாகப் பிரச்சாரம், நாடகம் போன்ற வடிவங்களில் தமது அரசியல் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்ததன் விளைவாக கூலி விவசாயிகள் சங்கம் ஒன்று உதித்தெழுந்தது. இதன் அமைப்பாளர் திரு. இ.இருளப்பன் தலைமையில் திரு கருப்பணக்கவுண்டர், திரு. இராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் 8-1-93 அன்று கூலி விவசாயிகள் கோரிக்கைப் பேரணி ஒன்று நடத்தினர்.

☆ விவசாய வேலைகளுக்கு தினக்கூலி ஆணுக்கு ரூ.40/-ம், பெண்ணுக்கு ரூ.20/-ம் வழங்கு!

☆ ஏர் மாட்டுடன் உழவுக்கு தினக்கூலி ரூ.100/- வழங்கு!

—— முதலிய கோரிக்கைகளை முழங்கிய விவசாயிகளின் ஊர்வலம், அறிவித்தபடி வ.ஊ.சி. சிலையிலிருந்து பறை முழக்கத்துடன் தொடங்கப்பட்டது. ஊர்வலத்திற்கு முன்னால் போடப்பட்ட ''வெண்மணி'' நாடகம் மக்களின் வரவேற்பை பெற்றது. வி.வி.மு.-வைச் சேர்ந்த மாசானம், மோகன் மற்றும் திரு. ராமகிருஷ்ணன் உரையாற்றிய பின் தொடங்கிய ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியே சென்று போடி - தேவர் சிலையில் முடிவடைந்தது. விவசாயிகளின் உரமேறிய கரங்களனைத்தும் உயருமானால் ஆண்டைகள் அடிபணிவது உறுதி!



# சவடாலும் சவுக்கடியும்

எனக்கும் பிரதமருக்கும் தலைமுறை இடைவெளி உள்ளது.

—— தினமணியில் ஜெயலலிதா

தற்போயை தமிழக அரசியல் நிலவரத்துக்கு காங்கிரசு காரணமல்ல; அ.தி.மு.க. தலைவர்களிடம் அரசியல் முதிர்ச்சி இல்லாததே காரணம்.

—— மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம்

தலைமுறை இடைவெளி பார்த்தாலும் அரசியல் முதிர்ச்சி பார்த்தாலும் தான்தான் பொருத்தமான முதல்வர் என நெடுஞ்செழியனை கனவு காண வைத்து விட்டார்களே!

வெளிநாடுகளில் பணி புரிவதற்காக் ரஷ்யாவை விட்டு வெளியேறத் திட்டமிட்ட ஏவுகணைத் தொழில்நுட்ப விஞ்ஞானிகள் 64 பேரை ராணுவம் பிடித்துள்ளது.

—— ரஷ்ய ராணுவ அதிகாரி அலெக்ஸி காண்டரோவ்

முந்திரிக்கொட்டைகள்! ரஷ்யாவைத்தான் அமெரிக்கா போலவே 'சொர்க்கபூமி'யாக்கப் போகிறார்களே, அதற்குள் என்ன அவசரம்?

ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா, இந்தியாவிலுள்ள அந்நிய வங்கிகளை கட்டுப்படுத்தவில்லை; அந்நிய வங்கிகள்தான் ரிசர்வ் பேங்கை கட்டுப்படுத்துகின்றன.

—— பங்குபத்திர ஊழல் மன்னன் ஹர்ஷத் மேத்தா.

ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியாவிற்கு பதிலாக மன்மோகன் சிங்கையும் அந்நிய வங்கிக்குப் பதிலாக ஹர்ஷத் மேத்தாவையும் பொருத்திப் பாருங்கள்; இன்னொரு உண்மையும் கிடைக்கும்

நான் இறுக்கமாக இருந்த அங்கியைத் தளர்த்தத்தான் செய்தேன். ஆனால், இந்த (நரசிம்ம ராவ்) அரசாங்கம் அங்கியையே கழட்டி தூக்கியெறிந்துவிட்டது

—— சுதந்திரப் பொருளாதாரம் பற்றி வி.பி.சிங்.

துகிலுரிக்கும் துரியோதனச் செயலிலும் சதவிகிதக் கணக்கா?

''அவருக்குப் பதில் அவரது கட்சியின் மூத்த தலைவர்கள் (தமிழர்கள்) யாரேனும் முதல்வர் பதவியில் அமர்வது வரவேற்கத்தக்கதே''

''நான் முன்பு ஒரு வார இதழில் இந்த அ.தி.மு.க. அரசு ஐந்தாண்டு தன் பதவியில் இருக்க வேண்டும். கலைத்துவிடக் கூடாது. அந்த ஐந்தாண்டில் மக்களின் வெறுப்பை முழுமையாகப் பெறவேண்டும் என்று கூறியிருந்தேன். ஆனால் இப்போது சனியன் ஒழிந்தால் தேவலை என்றாகிவிட்டது''

—— அரசியல் வாரப் பத்திரிக்கைகளில் பா.ம.க. தலைவர் ராமதாஸ்

பா.கல்யாணி மற்றும் 'இடதுசாரி சிந்தனையாளர்'களெல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? தூங்குகிறார்களா? ராமதாஸ் சரியான முடிவெடுக்க இந்நேரம் இத்தலைப்பில் ஒரு வகுப்பு எடுத்திருக்க வேண்டாமா?

போலந்தில் கேத்தலிக் சர்ச்சும் கம்யூனிஸ்டுகளும் கூட்டாக சேர்ந்து ஆட்சியை பகிர்ந்து கொண்டிருக்கும் பொழுது, ஏன் இந்தியாவில் பொதுவான குறைந்த திட்டங்களின் அடிப்படையில் பி.ஜே.பி.யும் கம்யூனிஸ்டுகளும் ஒன்றிணைந்து செயல்பட முடியாது?

—— வாஜ்பாய்

சபாஷ், சரியானப் போட்டி!

ஆணாக, பெண்ணாக பிறப்பது என்பதல்ல; நான் தமிழனாகப் பிறந்ததுதான் எனக்குள்ள பலவீனம் என்று நான் கருதுகிறேன்

—— நீங்கள் ஆணாகப் பிறந்தது அரசியலில் பலமா பலவீனமா என்ற கேள்விக்கு இளைய சூரியனில் கருணாநிதி பதில்

'தமிழின'த் தலைவரின் தம்பிகளே! நீங்கள் சொல்லுங்கள் கருணாநிதியை தலைவராகப் பெற்றது உங்களுக்கு பலமா, பலவீனமா?

எம்.ஜி.ஆர். இன்று உயிருடன் இருந்தால் என்னை ஏன் அரசியலுக்கு கொண்டு வந்தீர்கள் என்று அவரிடம் முறையிடுவேன்.

—— முதல்வர் ஜெயலலிதா

பாமர மக்களுக்காகவும் தாய்க்குலத்திற்காகவும் கண்ணீர் விடுவதெல்லாம் நடிப்பே என்று ஒத்துக்கொண்ட ஜெயலலிதாவிற்கு நன்றி!

படிப்பகம்

www.padippakam.com

# போலிக் கம்யூனிஸ்டுகள்: காங்கிரசை தூக்கி நிறுத்தும் முட்டுக்கட்டைகள்!

எப்போதெல்லாம் 'காங்கிரசுக் கட்சிக்கு நெருக்கடி ஏற்படுகிறதோ, அப்போதெல்லாம் அதை நாட்டுக்கு ஏற்பட்ட நெருக்கடியாகக் காட்டி, அதற்கு முட்டுக் கொடுத்து ஆதரிப்பதென்பது போலிக் கம்யூனிஸ்டுகளின் பாரம்பரிய சந்தர்ப்பவாதக் கொள்கை. இப்போது அயோத்தி விவகாரத்தையொட்டி, காங்கிரசுக் கட்சி தனது துரோகத்தனத்தால் நாட்டு மக்களிடம் அம்பலப்பட்டு தனிமைப்படத் தொடங்கியதும், போலிகள் விழுந்தடித்துக் கொண்டு காங்கிரசை ஆதரிக்கக் கிளம்பி விட்டார்கள். கடந்த டிசம்பர் மாதத் துவக்கத்தில், அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்புவரை காங்கிரசை எதிர்த்து சவடால் அடித்து வந்த போலிகள், ஒரே மாதத்திற்குள் தமது நிலைப்பாடுகளை பச்சோந்தித்தனமாக மாற்றிக் கொண்டு காங்கிரசை ஆதரித்து சதிராடத் தொடங்கிவிட்டார்கள்.

### ''ராவ் பதவி விலக வேண்டும்'' -'இடது' வலதுகளின் சவடால்

டிசம்பர் 6-ம் நாளன்று இந்து வெறியர்கள் அயோத்தியிலுள்ள மசூதியை இடித்துத் தரைமட்டம் ஆக்கியதும், அடுத்த நாளே தமது கட்சியின் பொலிட்பீரோ கூட்டத்தை நடத்திய 'மார்க்சிஸ்டுகள்,' மசூதி இடிப்புக்குக் கண்டனம் தெரிவித்ததோடு பிரதமர் நரசிம்மராவ் தார்மீக பொறுப்பேற்று பதவி விலக வேண்டுமென்றனர். டிசம்பர் 8-ம் நாளன்று நாடாளுமன்றத்தில் 'இடது', வலது போலிக்கம்யூனிஸ்டுகள், தேசிய முன்னணிக் கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து மத்திய அரசை எதிர்த்தும், பிரதமரைப் பதவி விலகக் கோரியும் பெருங்கூச்சல் போட்டு, தர்ணா போராட்டத்தை நடத்தின. இந்து வெறியர்களுடன் கள்ளக்கூட்டு சேர்ந்துள்ள காங்கிரசின் அயோக்கியத்தனம் அம்பலப்பட்டதைச் சாதகமாக்கிக் கொண்டு எதிர்க் கட்சிகளுடன் சேர்ந்து போலிகள் எகிறிக் குதித்தனர்.

அத்தனையும் அடுத்த சில நாட்களில் புஸ்வாணமாகியது. காங்கிரசுக் கட்சிக்குள்ளேயே நெருக்கடி முற்றி அதிருப்தி கோஷ்டிகள், நரசிம்மராவை அச்சுறுத்தத் தொடங்கியதும் போலிக் கம்யூனிஸ்டுகள் பதறிப் போனார்கள். அதே நேரத்தில் காங்கிரசுக் கட்சியின் செயற்குழு கூடி ''நாடு ஒரு நெருக்கடியில் சிக்கியுள்ளது'' என்று 'இடது' சாரிக் கட்சிகளின் ஆதரவைக் கோரியது. இதுதான் சமயம் என்று போலிக் கம்யூனிஸ்டுகள், தட்டைத் திருப்பிக் கொண்டு காங்கிரசு ஆதரவு தாளம் போடத் தொடங்கினர்.

''வகுப்புவாதத்தை எதிர்த்து நரசிம்மராவ் அரசு போராடுமானால், நாங்கள் பிரதமரை ஆதரிப்போம்'' என்றார் 'மார்க்சிஸ்டு' பொதுச் செயலாளர் ஹரிகிருஷ்ணசிங் சுர்ஜித். முன்பு தேசிய முன்னணிக் கட்சிகளுடன் சேர்ந்து பிரதமர் பதவி விலக வேண்டும் என்று வாதிட்ட நீங்கள் இப்போது பிரதமரை ஆதரிப்பதாகக் கூறுவது முரண்பாடாக இல்லையா என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது, ''இதில் முரண்பாடு ஏதுமில்லை; தேசிய முன்னணியின் விருப்பத்துக்கு நாங்கள் கட்டுப்பட்டவர்கள் அல்ல'' என்றார் சுர்ஜித்.

### நேற்று - 356-ஐ எதிர்ப்போம் இன்று - 356-ஐ ஆதரிப்போம்

போலிக் கம்யூனிஸ்டுகள் அளித்த ஆதரவைக் கொண்டு நரசிம்மராவ் அரசு, பாரதீய ஜனதாவின் உ.பி. மாநில அரசுடன் இதர மூன்று மாநில அரசுகளையும் 356-வது சட்டப் பிரிவின்படி கலைத்தது. மாநில அரசுகளைக் கலைக்கும் எதேச்சதிகார 356-வது சட்டப் பிரிவையும் பாரதீய ஜனதாவின் மூன்று மாநில அரசுகள் கலைக்கப்பட்டதையும் தேசிய முன்னணிக் கட்சிகள் கடுமையாக எதிர்த்தபோது, போலிகள் மத்திய அரசின் சர்வாதிகார சட்டத்துக்கு வக்காலத்து வாங்கி ஆதரித்தனர். இதே போல ஆந்திராவில் பாரதீய ஜனதா எம்.எல்.ஏ.க்களை சட்டப் பேரவையிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டதையும் ஆதரித்தனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் அயோத்தியில் மசூதி இடிக்கப்படுவதற்கு முன்புவரை, போலிகள் 356-வது சட்டப் பிரிவை கடுமையாக எதிர்த்து வந்தனர். பாரதீய ஜனதா அரசுகளை கலைக்கக் கூடாது என்றும் வாதிட்டு வந்தனர். ஆனால், இப்போது, ''356-வது சட்டப் பிரிவை நாங்கள் தொடர்ந்து எதிர்ப்போம். அதேசமயம் வகுப்புவாத அபாயம் சூழ்ந்துள்ள இன்றைய நிலையில் பாரதீய ஜனதா அரசுகளைக் கலைத்தது நியாயமானதுதான்'' என்று முன்னுக்குப் பின் முரணாக விளக்கமளிக்கின்றனர்.

> காங்கிரசின் அயோக்கியத்தனம் அம்பலப்பட்ட பின்னரும் அதற்கு முட்டுக் கொடுத்து ஆதரிக்க போலிக் கம்யூனிஸ்டுகள் கிளம்பியிருக்கிறார்கள். காங்கிரசின் ஐந்தாம் படையாகச் செயல்படுவதன் மூலம் டாங்கேயின் நேர்மையான வாரிசுகள் என்பதை நிரூபித்து வருகிறார்கள்.

### சூழ்நிலை சரியில்லை ராவை விட்டால் வேறு ஆள் இல்லை.

அதன்பிறகு பாரதீய ஜனதா கட்சி காங்கிரசு அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது தேசிய முன்னணி கட்சிகள் ஓட்டெடுப்பில் பங்கேற்காமல் வெளிநடப்பு செய்தன. ஆனால், போலிகளோ காங்கிரசுடன் கைகோர்த்துக் கொண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தோல்வியுறச் செய்தனர். இத்தீர்மானம் நாடாளுமன்றத்தில் ஓட்டெடுப்புக்கு வரு முன்னர் டிசம்பர் 20-ம் நாளன்று மே.வங்க 'மார்க்சிஸ்ட்' முதல்வரான ஜோதிபாசு, ''பாரதீய ஜனதாவின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முறியடிக்க வேண்டும். ஏனெனில் தற்போது பிரதமர் ராவ் வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக சரியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இப்போது மீண்டும் ஒரு தேர்தலை நடத்தும் சூழ்நிலையில் நாடு இல்லை. வகுப்புவாதத்தை எதிர்ப்பதும் தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பதுமே இன்றைய முக்கிய கடமையாக உள்ளது'' என்று மே.வங்க 'மார்க்சிஸ்டு' கட்சி நாளேடான ஜனசக்தியில் பேட்டியளித்தார்.

போலிகளின் கூற்றுப்படி நரசிம்மராவ வகுப்புவாதத்துக்கு எதிராக எடுத்த நடவடிக்கை என்ன தெரியுமா? ஆர்.எஸ்.எஸ். முதலான அமைப்புகளை சட்டப்படி தடை செய்ததும், மத நல்லிணக்கத்துக்காக கருத்தரங்குகளும், ரத்ததான முகாம்கள் நடத்தியதும்தான்! போதாக்குறைக்கு, நாடே ரத்த வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் போது சந்தடி சாக்கில் அன்னிய முதலீடுகளையும், ஐ.எம்.எப்.-பின் கடனாதிக்கத்தையும் அதிகரித்திருப்பதுதான்! நரசிம்மராவ் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையையும் தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டுவதையும் எதிர்த்து கடந்த நவம்பர் மாதத்தில் மாபெரும் தொழிலாளர் பேரணியை நடத்திய போலிகள், இப்போது நரசிம்மராவ் அரசைக் காப்பாற்றக் கிளம்பியிருக்கிறார்கள்.

### ராவ் அரசின் நரித்தனம்.

ராவ் அரசோ, இந்து வெறியர்கள் எதை எதிர்பார்க்கிறார்களோ அதை கட்டம் கட்டமாக நிறைவேற்றி முழு ஒத்துழைப்பு அளித்து வருகிறது. டிசம்பர் 6-ம் நாளன்று மசூதி இடிக்கப்பட்டதும் அதே இடத்தில் மீண்டும் மசூதியைக் கட்டித் தருவோம் என்று சவடால் அடித்தார் பிரதமர். பின்னர் ராமர் கோயிலும் கட்டித் தருவோம் என்றார். இப்போது மசூதியை எப்போது கட்டுவோம் என்று உறுதியாகச் சொல்ல முடியாது என்கிறார்.

மசூதி இடிக்கப்பட்டது பற்றி இருநாட்களில் அரசின் வெள்ளை அறிக்கையை சமர்ப்பிப்பதாக, டிசம்பர் 8-ந் தேதியன்று நாடாளுமன்றத்தில் வாக்களித்த பிரதமர் இன்று வரை அதை நிறைவேற்றவில்லை. அயோத்தியில் கஞ்சா சாமியார்களும்

படிப்பகம்

www.padippakam.com

டெல்லியில் பாரதீய ஜனதா தலைவர்களில்
ஒருவரான வாஜ்பாயும் உண்ணாவிரதமி
ருந்து மிரட்டத் தொடங்கியதும், அயோத்தி
யில் இந்து வெறியர்கள் மசூதியை இடித்த
இடத்தில் நிறுவியுள்ள ராமன் கோயிலில்
வழிபாடு நடத்த ராவ் அரசு அனுமதி அளித்
துள்ளது. மறுபுறம் முஸ்லீம்கள் தமது வழி
பாட்டு உரிமைக்காக டெல்லி இமாம் தலை
மையில் அயோத்தியில் ஊர்வலமாகச்
சென்றபோது ராவ் அரசு தடியடி நடத்தி
கைது செய்துள்ளது.

இவ்வளவுக்குப் பிறகும், மசூதி இடிக்
கப்பட்ட இடத்தில் ஏற்கனவே ராமர்
கோயில் இருந்ததா என்பதற்கான அகழ்வா
ராய்ச்சி ஆதாரங்களை வைத்து தீர்ப்பளிக்
குமாறு உச்சநீதி மன்றத்திடம் ராவ் அரசு
கோரியுள்ளது. இதன் மூலம் பிரச்சினையை
மீண்டும் இழுத்தடித்து, இந்து வெறியர்க
ளின் நோக்கத்திற்கு உடந்தையாகச் செயல்
படுவதிலேயே ராவ் அரசு குறியாக உள்
ளது. மேலும், ராவ் அரசு இந்துவெறி
அமைப்புகளைத் தடைசெய்தபோதிலும்,
அது பெயரளவிலேயே உள்ளது; நடவ
டிக்கை ஏதுமில்லை என்பதும் இப்போது
நிருபணமாகியுள்ளது.

ஆனாலும் ராவ் அரசுக்கு வகுப்புவாத
எதிர்ப்பு — முற்போக்கு முகமூடி மாட்டி
தமது ஆதரவை நியாயப்படுத்தி வருகிறார்
கள் போலிக் கம்யூனிஸ்டுகள். "நரசிம்ம
ராவ் அரசை வீழ்த்தும் முயற்சியில் நாங்கள்
ஈடுபடவில்லை. நெருக்கடியான சூழ்நிலை
யில் ராவ் பதவி விலக வேண்டுமென்று
நிர்பந்திப்பது சரியல்ல" என்று டிசம்பர்
14-ந் தேதியன்று பேட்டியளித்துள்ளார்
'மார்க்சிஸ்டு' பொதுச் செயலாளர் சுர்ஜித்.
வலது கம்யூனிஸ்ட் தலைவர் இந்திரஜித்
குப்தா இன்னும் ஒருபடி மேலேபோய், "நர
சிம்மராவுக்கு மாற்றுத் தலைவராக காங்கிர
சுக்கு உள்ளேயோ, வெளியேயோ யாரு
மில்லை" என்றார்.

ராவ் அரசை ஆதரித்தது போதாது
என்று காங்கிரசின் கொள்கையையே இப்
போது போலிகள் தமது கொள்கையாக்கிக்
கொண்டுள்ளனர். இதுநாள் வரை இந்து
வெறியர்களின் அகழ்வாராய்ச்சி மோசடிக
ளைப் பற்றி தமது பத்திரிகைகளில் அம்ப
லப்படுத்தி வந்த போலிகள், இப்போது
அயோத்தியிலுள்ள வழிபாட்டுத்தலம் மசூ
திதான். அது முஸ்லிம்களுக்கே சொந்தமா
னது' என்று பகிரங்கமாகப் பிரகடனம் செய்
யவில்லை. இடிக்கப்பட்ட மசூதியை மீண்
டும் கட்டித்தர வேண்டும் என்றும் வலியுறுத்
தவில்லை. அயோத்தி பிரச்சினை பற்றிய
அனைத்தையும் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்
புக்கு விட்டுவிட வேண்டும் என்றே கூறு
கின்றனர். வேடிக்கை என்னவென்றால்
இதையேதான் காங்கிரசும் கூறுகிறது. பிரச்
சினையைத் தீர்ப்பதற்குப் பதில் அதிலி
ருந்து நழுவிக் கொள்ளும் சந்தர்ப்பவாதக்
கொள்கைதான் இது.

### பிறவியிலே ஊனமாகிய மதச் சார்பற்ற முன்னணி

இப்படி காங்கிரசுக்கு ஆதரவு தெரி
வித்து, அதனுடன் சேர்ந்து வகுப்புவா
தத்தை எதிர்க்க போலிக் கம்யூனிஸ்டுகள்
அமைத்த மதச்சார்பற்ற முன்னணியும் பிற
வியிலேயே ஊனமாகிவிட்டது. போலிக
ளுடன் கூட்டுச் சேரமுடியாது என்று கேரள,
மே.வங்க, திரிபுரா மாநில காங்கிரசுத்
தலைமை எதிர்ப்பு தெரிவிக்கிறது. தேசிய
முன்னணிக் கட்சிகளோ காங்கிரசுடன் கூட்
டுச் சேருவதை துவக்கத்திலிருந்தே
எதிர்த்து வருகின்றன. போதாக் குறைக்கு
'இடது'சாரிக் கூட்டணிக்குள்ளேயே இந்த
விவகாரத்தில் முரண்பாடுகள்
நீடிக்கின்றன.

'மார்க்சிஸ்டு'களோ காங்கிரசுடன்
கூட்டுச்சேர வேண்டுமென்கின்றனர். வலது
களும், பார்வர்டு பிளாக், புரட்சி சோசலிஸ்
டுக் கட்சியினரும் காங்கிரசுடன் கூட்டுச்
சேருவது மதச் சார்பற்ற முன்னணியின் லட்
சியத்துக்கே எதிரானது என்கின்றனர். கடை
சியில் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து இயக்
கம் நடத்துவதல்ல; தனித்தனியே பிரச்சா
ரம் செய்வோம் என்று சமரசம் செய்து
கொண்டுள்ளனர். அதிலும்கூட "காங்கிர
சைத் தாக்குவது எமது நோக்கமல்ல; அதன்
கையாலாகாத்தனத்தை மக்களிடம் விளக்கு
வதோடு நிறுத்திக் கொள்வோம். வகுப்பு
வாத சக்திகளை எதிர்ப்பதே எங்கள் முக்
கிய பணியாக இருக்கும்" என்று 'இடது',
வலதுகள் விளக்கமளித்தனர்.

வகுப்புவாதத்துக்கு எதிராக போலி
கள் நடத்தும் இந்த இயக்கம்கூட ரத்ததானம்
செய்வது, தட்டி கட்டுவது, பாதயாத்திரை,
கருத்தரங்கு, பொதுக்கூட்டம் நடத்துவது
என்று வழக்கமான நீர்த்துப்போன முறையி
லேயே நடத்தப்படுகிறது. வகுப்புக் கலவ
ரங்களால் நாடே பற்றி எரிந்த போது, சர்வ
கட்சி எம்.எல்.ஏ., எம்.பி.-க்களைக்
கொண்ட அமைதிக் கமிட்டிகளை நிறுவி
சகோதரத்துவத்தை நிலைநாட்ட வேண்டு
மென்று போலிக் கம்யூனிஸ்டுகள் அறைகூ



வல் விடுத்தனர். ஆனால், தாங்கள் ஆளும்
மே.வங்கத்தில் இத்தகைய அமைதிக்
கமிட்டி ஒன்றைக்கூட அவர்களால் கட்டிய
மைக்க முடியவில்லை.

"மே.வங்கத்தைப் பார்! மதக் கலவரம்
ஏதுமற்ற முற்போக்கு ஆட்சியைப் பார்!"
என்று போலிகளால் பெருமையாக பீற்றிக்
கொள்ளப்பட்ட மே.வங்கம் தற்போதைய
மதக் கலவரங்களால் நார்நாராய் கிழிந்து
தொங்கியது. மாநிலப் போலீசை வைத்து
சமாளிக்க முடியாமல், இராணுவத்தைக்
கொண்டுவந்து ஊரடங்கு உத்திரவு
போட்டு கலவரத்தைக் கட்டுப்படுத்த
வேண்டியதாயிற்று. சுருக்கமாகச் சொன்
னால் போலிகள் முன்வைத்த தீர்வு, அவர்
கள் கண்ணெதிரே தோல்வியில் போய்
முடிந்தது. போலிகளின் சமரசத் தீர்வுகளால்
வகுப்புவாத சக்திகளை இம்மியளவும் முறி
யடிக்க முடியாது என்பதையே மே.வங்கக்
கலவரம் நிருபித்துள்ளது. காங்கிரசுக்கு
முட்டுக் கொடுக்க போலிகள் கட்டிய மதச்
சார்பற்ற முன்னணியும் இப்போது செயலி
ழந்து போய்விட்டது.

காங்கிரசு ஆட்சிக்கு நெருக்கடி வந்
தால் போலிக் கம்யூனிஸ்டுகள் பதைபதைத்
துப் போவதும், அதை நாட்டுக்கு ஏற்பட்ட
நெருக்கடியாகக் காட்டி காங்கிரசை ஆதரிப்
பதும் இன்று திடீரென ஏற்பட்டதல்ல. வர
லாற்றைப் புரட்டினால் போலிகளின் பாரம்
பரியக் கொள்கையே இதுதான் என்ற
உண்மை தெளிவாகும். இதை உணர்ந்து
தான் "நாங்களும் காங்கிரசும் இரட்டைக்
குழல் துப்பாக்கியாகச் செயல்பட்டு வருகி
றோம்" என்றார் மாண்டுபோன போலிக்
கம்யூனிசத் தலைவர் டாங்கே. எதிர்க்கட்சி
கூட்டணிக்குள்ளேயே காங்கிரசின் ஐந்தாம்
படையாகச் செயல்படுவதன் மூலம் டாங்
கேயின் வாரிசுகள் இதை நேர்மையாக நிரு
பித்து வருகின்றனர்.

● மனோகரன்

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்


சூத்திரன் வேதத்தை கேட்டாலே, காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊத்த வேண்டும் என்கிறது மனுதர்மம். ஆனால், சென்னை உயர்நீதி மன்றமோ, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் தனது வாழ்த்து மடலில் காயத்ரி மந்திரத்தையும், 'ஓம்' என்ற குறியீட்டையும் அச்சடித்து வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்பட்டதை எதிர்த்து, 'அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதசார்பின்மை'யை மீறுவது இது எனத் தி.க.வீரமணி தொடுத்திருந்த வழக்கை தள்ளுபடி செய்து, ''காயத்ரி மந்திரம் பிராமணர்களுக்கு மட்டுமே உரியது எனக் கருதுவது தவறு; வேத அறிவின் மூலமான இம்மந்திரம் சாதி, மத, இனவேறுபாடின்றி உலக முழுவதிலுமுள்ள மனித இனம் முழுவதற்கும் உரித்தானது'' என தீர்ப்புக்கூறி, முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயற்சிக்கிறது.

தமிழ்நாடு அரசு ஜனவரி 4-ந் தேதி முதல் ஒரு வாரத்திற்கு 'சாலை பாதுகாப்பு வாரம்' சென்னையில் நடத்தியது. இதற்காக ஆகும் செலவை, தனது நிதியிலிருந்து ஒதுக்காமல், பகுதிகளுக்கு ஏற்றவாறு ரூ.20,000 முதல் ரூ.50,000 வரை பெரிய தொழிலதிபர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களிடமிருந்து வசூலிக்க ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. விழாவன்று தேவையான குளிர்பானங்கள், இசை நிகழ்ச்சி, விளம்பரம் முதலிய பொறுப்புகளையும் தேர்ந்தெடுத்த தொழில் நிறுவனங்களிடம் ஒப்படைத்து, இதை ஏற்பாடு செய்ய ஆறு உதவி கமிஷனர்களை நியமித்துள்ளது. சாலை விதிகளை மீறியதின் அடிப்படையில் இப்புரவலர்களை இனி போலீசார் பிடித்தால், நாங்கள் அன்றே 'ஆயுள் சந்தா' கட்டிவிட்டோமே எனக் கூறிக் கொள்ளலாம்!

விஜய் மல்லையா - மக்களைப் பொருத்தவரையில் மிகப் பெரிய சாராய வியாபாரி; ஓட்டு கட்சி அரசியல் வாதிகளுக்கு கடைஏழு வள்ளல்களுக்கு இணையானவர். திருப்பதியில் கொலுவீற்றிருக்கும் வெங்கடேசப் பெருமாள் எனக்கும் அவர் வள்ளல்தான் என்கிறார். சமீபத்தில், அக்கோயிலுக்கு இவர் தானமாக கொடுத்தது கிட்டத்தட்ட 2 கோடி — இதில் 63 லட்சம் பெறுமான நாகாபரணம்; பழைய ஆபரணம் 300 வருடங்களுக்கு முன் அரச பரம்பரையினரால் கொடுக்கப்பட்டதாம்; இதனைத் தவிர்த்து, 'கருட ஆழ்வார் மண்டபத்தை' தங்க தகடால் அழகுபடுத்த ரூ.50 லட்சம், புதிய ஓய்வு விடுதி கட்ட ரூ. 80 லட்சம் என வாரிக் கொடுத்துள்ளார். ஆண்டவனின் குழந்தைகளாகிய மக்களை சாராயத்தால் சீரழித்து சொத்து சேர்த்தாலும், பெருமாளின் கருணையால் சொர்க்கத்தில் நிச்சயம் அவருக்கு ஓர் இடமுண்டு.

கர்நாடக மாநில விவசாயிகள் சங்கம் (KRRS) தங்களது தலைவரின் மறைவையொட்டி, அண்மையில் பெங்களூரில் இரங்கல் ஊர்வலம் சென்றபொழுது, வழியிலிருந்த அமெரிக்காவைச் சேர்ந்த பன்னாட்டு விதைக் கம்பெனியின் அலுவலகத்தை சூழ்ந்து கொண்டு, அலுவலகத்தின் அனைத்து கோப்புகளையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். அதனுடன், 'தாவரங்களின் மற்றும் உயிரினங்கள் மீது அமெரிக்கா கொண்டு வரவிருக்கும் ''டங்கல்'' தீர்மானத்தின்படியான காப்புரிமையை (Patent right) எதிர்த்து, ஆவேசங் கொண்டு விண்ணதிர முழக்கங்கள் எழுப்பியுள்ளதுடன், போலீசாரும் தீயணைப்பு படையினரும் அலுவலக கட்டிடத்தை நெருங்காத வண்ணம் சாலையின் இருபுறமும் தடைகளை ஏற்படுத்தியுள்ளனர். நாடெங்கும் குமுறிக் கொண்டிருக்கும் விவசாயிகளின் மனவெழுச்சிகளுக்கு கர்நாடக விவசாயிகள் ஒரு செயல்வடிவம் தந்து, முன்னுரை எழுதியுள்ளனர்.

பத்து வருடங்களுக்கு முன்பு, பாராளுமன்ற சகதியில் காலை வைக்க ஆரம்பித்தார்கள்; இன்று ஆளே தெரியாதபடி மூழ்கிப் போயுள்ளது. விநோத் மிஸ்ரா குழுவினரின் சி.பி.ஐ. (மா-லெ) கட்சி, தனது 5-வது கட்சி காங்கிரசை வெளிப்படையாக கல்கத்தாவில் நடத்தியுள்ளதுடன், கடந்தகால தவறுகளிலிருந்து தங்களை முற்றிலும் விலக்கிக் கொண்டுவிட்டதாகவும் அறிவித்துள்ளனர். சி.பி.எம்-ஐப் போலவே இடதுசாரி கூட்டணி, ஜனநாயகக் கூட்டணி எல்லாம் அமைக்கப்போவதாக அறிவித்துள்ளார், பல ஆண்டுகளாக தலைமறைவாக இருந்து வெளிவந்திருக்கும் விநோத் மிஸ்ரா. ஆடுகள் பாதை மட்டும் தவறவில்லை; புதிய மேய்ப்பரின் கொட்டிலில் ஏற்கச் சொல்லியும் கத்துகின்றன. மேய்ப்பவனுக்கு மகிழ்ச்சிதான்; கறுப்பு ஆடுகளாக தங்களை தோலுரித்துக் காட்டிக் கொண்டதில், நமக்கும் சந்தோஷம் தான்.





மேலே காஷ்மீரைச் சேர்ந்த வான்சூ. கீழே விநோத் மிஸ்ரா குழுவின் சி.பி.ஐ. (எம்.எல்)-ன் மாநாடு. நடுவில் வி.மிஸ்ரா.

வான்சூ — காஷ்மீர் மக்களிடையே பிரபலமான மனித உரிமைகள் பாதுகாப்பு செயல்வீரரும், தொழிற்சங்க வாதியுமாவார். இவர் கடந்த டிசம்பரில் நடு ரோட்டில் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மனித உரிமையினை மீறியதற்காக அரசினை எதிர்த்து இவர் நூற்றுக்கும் அதிகமான வழக்குகளைத் தொடுத்துள்ளதுடன், சர்வதேச மனித உரிமைகள் சங்கத்தாரிடம் சிறைச்சாலைகளில் இளைஞர்கள் மீது ஏவி விடப்படும் கொடூர தாக்குதல்களைப் பற்றி ஓர் அறிக்கையினையும் அளித்துள்ளார்; இதனுடன் பண்டிட்டுகள் — பார்ப்பனர்கள் காஷ்மீரை விட்டு வெளியேறுவதை ஊக்குவித்ததே முன்னாள் கவர்னர் ஜக்மோகன் தான் எனவும் குற்றஞ்சாட்டியுள்ள அவர், இந்து சமூகத்தைச் சேர்ந்தவர். இதன்காரணமாகவே, இப்படுகொலையின் பின்னே அரசின் கொடுங்கரம் உள்ளதென தாங்கள் நம்புவதாக போராளி குழுக்களும், மக்களும் கூறுகின்றனர்.

பெண் குழந்தைகள் - முதலாளித்துவ உலகின் கொடிய சுரண்டலுக்கும் மட்டுமல்லாது, அதனின் பாலியல் தாக்குதலுக்கும் இலக்காகின்றனர். 1990-ல் நாடு முழுவதும் பதிவான 10,000 கற்பழிப்பு வழக்குகளில், 25 சதவீதம் பாதிப்புக்குள்ளானவர்களின் வயது 16-க்கும் கீழ்; இதில் ஐந்தில் ஒரு பகுதி 10 வயதுக்கும் கீழான குழந்தைகள். மேலும், டெல்லியில் நான்கு நாட்களுக்கு ஒரு பெண் குழந்தை கற்பழிக்கப்படுவதாக அறிக்கைகள் கூறு கின்றன. பராமரிப்புக் குறைவான ஏழை பெண் குழந்தைகளும், வேலைக்குச் செல் லும் பெண்களின் குழந்தைகளும் தாக்குத லின் முதல் இலக்காகின்றனர். பெண்கள் ஆண்டையும், குழந்தைகள் தினவிழாவை யும் ஆடம்பரமாகக் கொண்டாடும் அரசு, நீலிக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறு என்ன செய்துவிடும்?

தெற்கு குஜராத்தைச் சேர்ந்த பாஸ் கர் ஸாவே எனும் விவசாயி 'இயற்கை முறையில்' இரண்டு கோடிக்கும் அதிகமான மண்புழுக்களைக் கொண்டு விவசாயம் செய்து, தனது 14 ஏக்கர் நிலத்தி லிருந்து 400 சதவீத லாபம் பெறுகிறார். மண்புழுக்களின் கழிவே சிறந்த உரமாக இருப்பதால், வேறு எந்தவிதமான இரசா யன உரத்தையும் பயன்படுத்துவதில்லை யாம்; இரசாயன உரங்களைப் பயன்படுத்தி வந்தபொழுது தேவையாயிருந்த நீரில் 1[illegible] சதவீதமே தற்சமயம் பயன்படுத்துகிற ராம். தனது அந்நிய செலாவணியை சேமிக்கவும், பற்றாக்குறையை குறைக் கவும், மான்யத்தைக் குறைத்து விவசாயிக ளின் வயிற்றிலடிக்கும் அரசுக்கு, இது போன்ற மாற்றுவழிகள் எங்கே கண்ணில் படப் போகிறது?

படிப்பகம்

www.padippakam.com

# விமானிகளின் போராட்டமும்! அரசின் ஒடுக்குமுறையும்!

டெல்லி பாலம் விமான நிலையத்தில் TU 154 ரக விமானம் தரையிறங்கும் போது விபத்துக்குள்ளானதற்கு, மோசமான வானிலையைச் சமாளிப்பதற்கான மேம்பட்ட தொழில்நுட்ப அம்சங்கள் இல்லாததே என்பதனை ஏர்லைன்ஸ் நிர்வாகம் தவிர மற்ற அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்கின்றனர். இது போன்ற தொழில்நுட்ப குறைபாடுகள் நிலவுவதை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள விமானிகள் சுட்டிக் காட்டியிருப்பதுடன், குறிப்பாக TU 154 ரக விமானங்கள் தரங்குறைந்தவை என்றும், அவ்வூழியர்களுக்கு நமது வான்வழிகள் பரிச்சயமில்லாதவை என்பதையும் நிர்வாகத்திடம் எடுத்துச் சொல்லியிருந்தனர். ஆனால், நிர்வாகமோ யார் சொல்வதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல், 'வேலை நிறுத்தத்தை உடைப்பது', 'விமானிகளை அவதூறு செய்வது' என்ற நோக்கங்களுடனேயே இந்தரக விமானத்தை வாடகைக்கு அமர்த்தியது. எனவே, 'எதிர்பாராது நடந்துவிட்டது', 'சரியான காரணங்களை இனிமேல் தான் ஆராய வேண்டும்' என நிர்வாகம் கூறுவதை ஏற்றுக் கொள்ள இயலாது. அதனுடன், வேலை நிறுத்தமும் விபத்து நடந்ததற்கு ஒரு காரணம் என்பது நிர்வாகத்தின் புத்திசாலித்தனத்தையல்ல, பழிவாங்கும் நோக்கத்தைத் தான் காட்டுகின்றது.

"நாடே கொந்தளிக்கும் கடலின் நடுவே சிக்கிக் கொண்டு, பற்றிக் கொள்ள எந்தவொரு சிறு துடுப்பும் கிடைக்காது தத்தளித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இவர்கள் போராட்டத்தில் இறங்கியிருக்கக் கூடாது" என விமானிகளை குற்றஞ்சாட்டுகிறது, இந்தியன் ஏர்லைன்ஸ் (IA) நிர்வாகம். பத்திரிகைகளும், விமான பயணிகள் சங்கமும் (APAI) நிர்வாகத்தின் கருத்தை அப்படியே கிளிப்பிள்ளை போல் திரும்பச் சொல்லுகின்றன. மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சகம், இது 'இந்தியன் ஏர்லைன்ஸின்' சொந்த பிரச்னை எனக்கூறி ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறது.

கடந்த அக்டோபரிலிருந்தே, ஏர்லைன்ஸ் நிர்வாகத்திற்கும், இந்திய வர்த்தக விமானிகள் சங்கத்திற்கும் (ICPA) இடையே, 'பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் ஊதிய உயர்வு' சம்பந்தமாக உரசல்கள் இருந்து வந்துள்ளன. டில்லியைச் சேர்ந்த மூன்று விமானிகளை, - அவர்கள் பாதுகாப்பு பலவீனங்கள் காரணமாக, ஸ்ரீநகருக்கு விமானங்களை ஓட்டிச் செல்ல மறுத்ததன் விளைவாக நிர்நாகம் பணிநீக்கம் செய்த பின்னும், தனது கோரிக்கைகளை முத்தரப்புக் கமிட்டியின் மூலம் பேசி தீர்த்துக் கொள்ளவும் என விமானிகள் சங்கம் அறிவித்திருந்தது. ஆனால், நிர்வாகம் எதற்கும் அசைந்து கொடுக்க மறுக்கவே, ஏர்லைன்ஸ் விமானிகள் வேலை நிறுத்தத்தை டிச.10-ல் தொடங்கி நடத்தி வருகின்றனர்.

"பல்வேறு விமான நிலையங்களில், ஓடுபாதையின் நீளம் சர்வதேச அங்கீகாரத்திற்கும் குறைவாக இருப்பதுடன் விமானம் கீழே இறங்குவதற்கும் உயரே எழுவதற்கும் மற்றும் கடற்பரப்பின் மீது பறந்து செல்வதற்கும் அத்தியாவசியமான, நவீன பாதுகாப்புக் கருவிகள் கிடையாது" எனச் சுட்டிக்காட்டும் விமானிகள் சங்கம், "பஞ்சாப், காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த 12 விமான நிலையங்களில் பாதுகாப்பு அம்சங்கள் பலவீனமாகவே உள்ளன" என்றும் கூறுகின்றன. "ஊதிய உயர்வினைத் தவிர்த்து, எங்களது மூன்று அம்சக் கோரிக்கைகளை — தற்காலிக பணிநீக்க உத்தரவை ரத்து செய்வது, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப அம்சங்களை மேம்படுத்துவது, பத்திரிகைகளின் வாயிலாக அவதூறு பரப்புவதை நிர்வாகம் கைவிடுவது — ஏற்றுக் கொண்டால் போதுமானது; நாங்கள் பணியில் சேரத் தயாராக உள்ளோம்" என்ற உத்தரவாதத்தையும் நிர்வாகத்திற்கு அளித்துள்ளனர் விமானிகள்.

நொறுங்கிய TU 154 விமானத்தை பார்வையிடும் பிரதமர்; நிர்வாகத்தின் அலட்சியப் போக்கிற்கு சாட்சி.



ஆனால், நிர்வாகம் நிபந்தனையின்றி வேலை நிறுத்தத்தை கைவிட வேண்டும் எனக் கூரி வருவதுடன், 'தற்காலிக பயண பட்டியலை' (Contingent Schedule) தயாரித்து, தலைமை விமானிகளைக் (Executive pilots) கொண்டு விமானங்களை இயக்க முடிவெடுத்தது. ஆனால், அவர்களும் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் வேலை நேர நீட்டிப்பைக் (FDTL) காரணம் காட்டி, வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதன் விளைவாக, உள்நாட்டு விமான போக்குவரத்து நிலைகுலைந்து போயுள்ளது.

பிரச்சினைகளை, விமானிகள் சங்கமே இணங்கியுள்ளபடியே, முத்தரப்புக் கமிட்டியின் மூலம் பேசி தீர்த்துக் கொள்வதற்குப் பதில், விமானிகளின் குற்றசாட்டுகளுக்கு விளக்கமளித்தும், நாளும் புதிய நடைமுறைகளைப் புகுத்தியும் பத்திரிகைகளின் வாயிலாக விமானிகளுக்கு எதிராக யுத்தம் நடத்தி வருகிறது நிர்வாகம். மறுபுறம், நெருக்கடியை சமாளிக்க அதிக செலவு பிடிக்கும் உஸ்பெஸ்கிஸ்தான் விமானங்கள் மூன்றினை அதனின் பணியாளர்களுடன் சேர்த்து வாடகைக்கு அமர்த்திக் கொண்டுள்ளது. மேலும், தனது நிர்வாக அலுவலகங்களில் உள்ள விமானிகளைக் கொண்டும், ஓய்வு பெற்ற விமானிகள் மற்றும் விமானப்படை விமானிகளைக் கொண்டும் விமானங்களை இயக்க முடிவெடுத்துள்ளது. மேலும் 'கதவடைப்பு' செய்யவும் நிர்வாகம் திட்டம் தீட்டி வருகிறது. இதனுடன், தனியார் விமான நிறுவனங்களுக்கு விமானிகள் செல்வதைத் தடுக்கும் நோக்கத்துடன், 'ஆட்சேபனையின்மை' சான்று பெற்ற பின்னரே விமானிகள் பணியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்ற புதிய நிர்வாக நடைமுறையையும் தற்சமயம் கொண்டு வந்துள்ளது.

"ஏர்லைன்ஸ் நிறுவனம் நட்டத்தில் விழுந்ததற்குக் காரணம் உயர் நிர்வாகிகளின் ஊழலும், திறமையின்மையும்தான்" எனக்கூறும் விமானிகள் பங்குச் சந்தை ஊழலில் நிர்வாகம் சிக்கியிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். 'ஆட்சேபனையின்மை' சான்று பெறுவதை, விமானிகள் மட்டுமல்லாது, தனியார் விமான நிறுவனங்களும், 'நாங்கள் விமானிகளுக்கு வேறு எங்கும் செல்ல முடியாது' எனக் கூறி எதிர்க்கின்றன.

தனக்குக் கீழ் ஆறு நிறுவனங்கள் இயங்குவதைக் காரணம் காட்டி, சிவில் விமான அமைச்சகம் இப் பிரச்சினையில் தலையி

www.padippakam.com

டாதது போல காட்டிக் கொண்டாலும், நிர்வாகத்தின் நடவடிக்கைகளைத்தான் ஆதரித்து வருகிறது. மாதவராவ் சிந்தியா வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள விமானிகளை சந்திக்கவே மறுக்கிறார். எதிர்க் கட்சிகள், ''மத்திய அரசு, போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர முயற்சி செய்யாது தள்ளிப் போடுவதன் மூலம், விமான போக்குவரத்தை தனியார்மயமாக்கும் தனது கொள்கைக்கான சூழலை உருவாக்க விரும்புகிறது. இதற்காக, விமானிகளை பலிகடா ஆக்குகிறது'' எனக் குற்றஞ்சாட்டுகின்றனர். 1953-ம் வருடத்திய சட்டத்தை நீக்காமலேயே, 'ஏர்-டாக்ஸி' என்ற பெயரில் தனியார் விமான நிறுவனங்கள் செயல்படுவதை அனுமதித்துள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றனர்.

மற்ற பொதுத்துறை நிறுவனங்களைப் போலல்லாது, ஆளும் வர்க்கங்களுக்கும், அதிகாரிகளுக்கும் கேந்திரமான துறையாக இருந்தும், தனது ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாததற்கு நட்டத்தில் இயங்குவதை ஒரு காரணமாக கூறிவருகிறது. மூன்று வாரங்களுக்கு மேலாக நடந்துவரும் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர, எவ்வித நடவடிக்கையும் எடுக்காது நிர்வாகமும், அமைச்சகமும் குறிப்பாக விமான பயணிகள் மத்தியில் தனியார் துறையின் தேவைக்கான அடித்தளத்தையே மறைமுகமாக உருவாக்குகின்றன. இதற்கேற்ப, 1953-ம் வருடத்திய தடை சட்டத்தை நீக்குவதற்கான பிரேரணையை நடைபெறும் பாராளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரிலேயே கொண்டுவர அரசு திட்டமிட்டுள்ளது.

இதனை உறுதி செய்யும் முகமாக, இந்திய விமான பயணிகள் சங்கம் (APAI) விமான போக்குவரத்து துறையில் தனியார் நிறுவனங்கள் செயல்படுவதைத் தடுக்கும் சட்டத்தை எதிர்த்து வழக்கு தொடரப் போவதாக கருத்து தெரிவித்திருப்பதுடன், நடந்துவரும் வேலை நிறுத்தத்தை தொழில் தகராறு சட்டம் 10 (3)-ன்படி உடன் தடை செய்ய வேண்டும் எனக் கோரி, சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கீது ஒன்றை தொடுத்துள்ளது. நீதிமன்றமும் இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு விட்டது.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வராமல், இழுத்தடிப்பதன் மூலம், இலாப மீட்டக்கூடிய நிறுவனத்தை நட்டமடைய வைப்பது, சின்னாபின்னாபடுத்துவது; போராடுபவர்களுக்கு எதிராக அவதூறுகளை பத்திரிகைகளின் வாயிலாக பரப்பி மக்கள் மத்தியில் அதிருப்தியை உண்டாக்குவது என்ற விதமாக செயல்படுகிறது அரசு. அரசின் செல்லப் பிள்ளைகளான இம் மேல்தட்டு ஊழியர்களின் நிலையே இதுவென்றால், பிற பொதுத்துறை ஊழியர்கள் தனியார் மயமாக்கலை எதிர்த்து தங்களின் உரிமைகளுக்காக போராடும்போது இதைவிட இழிந்த தாக்குதலையே அரசிடமிருந்து எதிர்நோக்க வேண்டியிருக்கும்!

● செல்வம்

# சாமி-மாமி மோதல் ஆபாச அரசியல்

ஜனவரி 31, நெருங்க நெருங்க பீதியடைந்த ஜெயா, சு.சாமி கும்பல் மீதான தாக்குதல் மூலம் அதை வெளிக்காட்டிக் கொண்டுள்ளார். சு.சாமிக்கு எதிராக கறுப்புக்கொடி, போஸ்டர் யுத்தம், காங்கிரசிடம் முறையீடு, அவதூறு வழக்குகள், மிரட்டல்கள் எதுவும் செல்லுபடியாகாததால் அடிதடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவமாட்டான் என்று முடிவெடுத்து விட்டார், ஜெயலலிதா. மதுசூதனன், இந்திரகுமாரி முதலான 'பாடிகாடு'கள் தலைமையில் ஆபாச - வன்முறைத் தாக்குதல்களை ஏவியுள்ளார். தமிழகப் போலீசுக்கும் பின்னாடி கையை கட்டிக் கொள்ளச் சொல்லி ரகசிய சமிக்ஞை அனுப்பப்பட்டும் விட்டது. டிசம்பர் மாதம் முதலே தமிழக 'நல்லாட்சி' இயக்கத் தலைவர்கள் தாக்கப்பட்டு வருகிறார்கள்.

டிசம்-9-ந் தேதியன்று முன்னாள் அமைச்சர் ராஜாராமின் வீடும் காரும் தாக்கப்பட்டன. 20 நாட்கள் கழித்து அவரது

சாமி கும்பலுக்கு எதிராக உண்ணும் விரதம் என்ற பெயரில் அ.தி.மு.க. மகளிர் அணி அடித்த கூத்து; சாமி போல் வேடமிட்டவருக்கு செருப்புமாலை.




வீட்டு வேலைக்காரனையே குற்றவாளியாக நிறுத்தி ஏற்கவைத்தது, போலீசு. இதற்குரிய நீதிமன்ற அபராதத் தொகையை போலீசே கட்டியது. 'நல்லாட்சி' இயக்கத்தின் பிரச்சாரக்குழுத் தலைவர் ராஜ்குமார் டிசம் 11 அன்று அரிவாளால் வெட்டப்பட்டார். இதற்கு போலீசு நடவடிக்கை எதுவுமில்லை. ஜனதா கட்சித் துணைத்தலைவர் ஸ்ரீதரன் டிசம்-15 காலையில் அவரது வீட்டில் மூன்று பேர்களால் உருட்டுக்கட்டையால் பலமாகத் தாக்கப்பட்டார். பாதுகாப்பு தந்த போலீசு அப்போது அங்கு இல்லை. வேலூரில் ஜனதா கட்சி அலுவலகத்தில் முன்னாள் துணைத் தலைவர் வரதராஜன் மற்றும் சில கட்சிக்காரர்கள் தாக்கப்பட்டனர். இதில் இருவர் பிடிபட்டனர். இருவரையும் போட்டு பூட்டிவைத்த அலுவலகத்திற்கு குண்டுவைத்து கதவுகளைத் தகர்த்து குற்றவாளிகள் தப்புவிக்கப்பட்டனர். இச்சம்பவத்திலும் ஜனதா கட்சியினர் 5 பேர் காயமடைந்தனர்.

டிசம்பர் 14 அன்று ஜெயலலிதாவின் அவதூறு வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்கு வந்த சு.சாமியைத் தாக்கவும் முயற்சி நடந்தது. நீதிமன்ற வளாகத்தில் குழுமியிருந்த அ.தி.மு.க. தொண்டர்கள், மகளிர் அணி என்ற பெயரிலான குண்டர்கள் சாமிக்கு எதிராக கோஷமிட்டனர். சாமி விசாரணை முடிந்து திரும்பும்வரை இவர்களின் அட்டகாசம் ஓயவில்லை. திரும்பிய சாமி மீது கற்கள், சைக்கிள் செயின், கத்தி-கபடா சகிதமாக பெண்கள் உட்பட தாக்குதல் தொடுத்தனர். இருவர் காயமடைந்தனர். சாமி கோஷ்டியினர் பின்னர் நீதிபதியிடம் முறையிட்டு போலீசு பாதுகாப்பு பெற்றே வீடு திரும்ப முடிந்தது. ஆனால், பாவம், சாமிக்கு பாதுகாப்பு கொடுத்த போலீசு அதிகாரி பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டார்!

இத்தாக்குதலின் உச்சகட்டமாக டிசம்பர் -19 அன்று நடந்ததைக் குறிப்பிடலாம். சென்னை சேப்பாக்கத்தில் 'நல்லாட்சி' இயக்கத்தினர், தங்கள் அமைப்பினர் மீது நடக்கும் தாக்குதலைக் கண்டித்து உண்ணாவிரதம் இருந்தனர். இதை முறியடிப்பதற்காக அ.தி.மு.க. மகளிர் அணியினர் உண்ணும் விரதம் என அருகிலேயே பந்தல் போட்டு அமர்ந்தனர். குடிசை மாற்று வாரியத் தலைவி வளர்மதி தலைமையில் மகளிர் அணியினர் அடித்த ஆபாச கூத்துக்கு அளவே இல்லை. எல்லோரும் சிலுக்கு சுமிதா, டிஸ்கோ சாந்திகளாகி ஆபாச சேட்டைகளோடு சாமியை கிண்டலடித்து ஆடிப் பாடியது காணசகிக்க முடியாதது! இதில் புலர் போதையேற்றி இறக்கப்பட்ட 'அம்மா'க்கள்! சாமி போல் ஒருபெண்ணை வேடம் போட்டு பாடையில் போட்டு ஒப்பாரியும்

படிப்பகம்

www.padippakam.com

த்தனர். இக்கூத்துக்கள் முடிந்ததும் இப் ன் குண்டர்களுக்கு பாதுகாப்பு என்ற பரில் வந்திருந்த ஆண் குண்டர்கள் பு கைவரிசையைக் காட்டினர். சோடா டில், கத்தி, கற்கள், ஆசிட் பாட்டில்கள் லாம் உண்ணாவிரதப் பந்தலை நோக் பறந்தன. நல்லாட்சி இயக்கத்தைச் ந்தவர்களும் அவர்களது கூடாரமும், காலியும் நொறுக்கப்பட்டன. உத்தர படி இவற்றை வேடிக்கைப் பார்த்த லீசு, அ.தி.மு.க. குண்டர்களுக்கே சேத லாமல் பாதுகாப்புக் கொடுத்தது.

நிலைமையை அறிந்த சாமி உண்ணா கத்திற்கு வருவதாக இருந்ததை ரத்து பது தப்பித்து பிழைத்தார். ஆனாலும், ழகத்தில் இருப்பதற்கே உத்திரவாதமில் நிலை ஏற்படவே டிசம். 19 அன்றே லிக்கு விமானத்தில் பறந்தார். சாமியின் ானத்தில் குண்டு உள்ளதாகப் புரளி ப்பி விமானத்தை தரையிறக்கி சாமியை க முனைந்தது. அ.தி.மு.க. கும்பல். னால், சில அதிகார வர்க்க விசுவாசிக உதவியோடு உயிர் தப்பி மீண்டும் லிக்குப் பறந்தார்.

அதிகார வர்க்கம், பார்ப்பனக் கும்பல், ப்பன பத்திரிகைகள் மற்றும் நரசிம்மரா மறைமுக ஆதரவுடன் பாசிச ஜெயா பலை ஆட்சிக் கலைப்பு பீதிக்கு பலி க்குவதில் சாமி வெற்றி பெற்றதைப் ாலவே, குண்டர் படைத் தாக்குதல்கள் ம் சாமியை கதிகலங்கச் செய்ததில் யலலிதா வெற்றி பெற்றுள்ளார். தற் ாது நல்லாட்சி இயக்கக் கூடாரமே ர்ந்து அஞ்சி அடங்கி கிடக்கிறது என ம்.

அதிகார வர்க்கம் மற்றும் பார்ப்பனக் பலின் இரு பிரிவுகளின் பிரதிநிதிகளாக ாதிக்கொள்ளும் ஜெயாவும், சாமியும் ர்ந்து தமிழக மக்களின் கண்ணில் மண் ணத் தூவுகிறார்கள் என்பதுதான் ன்மை. தங்களது அதிகார - பங்காளிச் ாடைக்கு தமிழக மக்களை பலிகடாக க்க முனைகிறார்கள். ஜெயலலிதா தமி அரசியலில் ஒண்டவந்த பிடாரி என் ல் சு.சாமி கழிசடை அரசியலுக்கே ஒட் ண்ணி! சாமியை தமிழக மக்களுக்கு ருக்கும் தெரியாது; தெரிந்தவர்களுக் அவரின் அயோக்கியத்தனம் நன்கு ரியும்; கைவிரல் விட்டு எண்ணக்கூடிய ர்ப்பன, சேவைக் கும்பலைத் தவிர சாமி சிக்கு தமிழகத்தில் ஆளில்லை; ஏன் ன்று கேட்க நாதியுமில்லை! இப்படி பரும் விழுதும் இல்லாத சு.சாமி தமிழகம் த்திறங்கி ஜெயலலிதாவின் ''உதிர்ந்த ாமங்களையெல்லாம்'' பொறுக்கிச் ர்த்து ''தமிழக நல்லாட்சி இயக்கம்'' ன்ற ''சவுரிமுடி'' கட்டி தமிழக அரசிய லயே தன்னை நோக்கி சுழல வைத்து பற்றிபெற்றுள்ளார். இதில் தமிழக கிசுகிசு திரிகைகளுக்கும், ஒட்டாண்டி அரசியல் சிகளுக்கும் பங்குண்டு.

ஜெயலலிதாவின் ஊழலையும், அத்து லையும், அராஜகத்தையும், அடக்குமு றையையும், மக்கள் விரோதக் கொள்கை - டங்களையும் தி.மு.க., பா.ம.க., சி.பி



உண்ணாவிரதமிருந்த ''தமிழக நல்லாட்சி இயக்கத்தினரின்'' கூடாரத்தை அடித்து நொறுக்கும் அ.தி.மு.க. குண்டர்கள்.

எம். போன்ற கட்சிகள் எதிர்த்து இயக்கம் எடுத்து வந்தன. இதையே சு.சாமி வந்து கையிலெடுத்துக் கொண்டு 'ஜெ'யை எதிர்க்க ஆரம்பித்தவுடனே அக்கட்சிகள் மக்கள் போராட்டங்களை 'ஜெ'க்கு எதிராக கட்டியமைப்பதை கைவிட்டன. மூன்றாந் தர, நான்காந்தரப் பிரச்சினைகளை வைத்து இயக்கம் எடுக்கத் தொடங்கி விட்டன. அவர்களுக்குள்ளாகவே (ஜெ.சாமி) அடித் துக் கொண்டு முடிவுக்கு வரட்டும் என்று வேடிக்கைப் பார்த்தன.

ஆனால், அக்கும்பல் இதை வசதியாக் கிக் கொண்டு மக்கள் பிரச்சினைகளையெல் லாம் கிடப்பில் போட்டுவிட்டு தங்களுக்கி டையே நடக்கும் மோதல்தான் மிகப்பெரிய பிரச்சினை என ஆக்கி ஜனவரி 31-ஐ நோக்கி எல்லோரையும் ஏங்கவைத்து, பேச வைத்து, கிசுகிசுக்க வைத்துள்ளார்கள். தமி ழகத்தில் சட்டம்-ஒழுங்கு மோசமாகி சாதா ரண மக்கள் பாதிப்புக்குள்ளாவது அன்றா டம் அதிகரித்து வருவது இருட்டடிப்பு செய் யப்பட்டு, (பொன்னூரில் போலீசின் வெறி யாட்டம் எல்லாம் பின்னுக்குத் தள்ளப் பட்டு) தங்கள் மீதான தாக்குதலாலேயே

**ஜெயாவும் சாமியும் தங்களது அதிகார - பங்காளிச் சண்டைக்குத் தமிழக மக்களை பலியாடுகளாக ஆக்க முனைகிறார்கள். ஜெயலலிதா தமிழக அரசியலில் ஒண்டவந்த பிடாரி என்றால், சு.சாமி கழிசடை அரசியலுக்கே ஒட்டுண்ணி!**

சட்டம்-ஒழுங்கு போய்விட்டதாக முன்னி றுத்தி கூச்சல் போட்டது சாமி கும்பல். இதற்கு 'மார்க்சிஸ்டுகள்' முதற்கொண்டு ''கோவிந்தா'' போட்டார்கள்.

சாமியும், மாமியும் காய் நகர்த்தியா டும் சதுராட்டத்தை, ''கிரிக்கெட் கமெண்ட் ரி'' போல் வர்ணித்தும் யூகங்களை, கிசுகி சுக்களை சுவாரசியம் மிக்கதாக எழுதியும் காசாக்கின, தமிழகப் பத்திரிகைகள். சாமி கும்பலின் கால்களிலேயே விழுந்து ஒட்டுக் கேட்டு வெட்டி - ஒட்டி எழுதி ஜனவரி 31-ல் ஆட்சி கலைக்கப்படுமா என வாசகர் களை மட்டுமல்லாமல், சாதாரண மக்களை யும் கேட்கவைத்து வெற்றிபெற்றுள்ளன. சகுனி சுப்ரமணியசாமியும் பாபர் மசூதியை இடிக்கச் சென்ற அ.தி.மு.க.-வினர் புலிகளி டம் பயிற்சி பெற்றதாகவும், தமிழ்நாட்டில் தயாரித்த வெடிகுண்டை கொண்டுபோய் வெடிக்கச் செய்ததாகவும், மசூதியை இடிக் கும்போது அ.தி.மு.க.-வினர் ''புரட்சித் தலைவி வாழ்க'' என்று கோஷம் போட்ட தாகவும் தற்போது கூறுவதுபோலவே தொடக்கத்திலிருந்தே பேட்டி கொடுத்து கிசுகிசு பத்திரிகைகளுக்குத் தீனிபோட்டார். டான்சி விவகாரத்திலிருந்து அயோத்தி விவகாரம் வரை வலுவான டேப், ஆவ ணங்கள் போன்ற ஆதாரங்கள் கைவசம் இருப்பதாகக் கூறியே பத்திரிகைக்காரர் களை நாயாக தன்னை சுத்தவைத்து 'போக்கு காட்டி' வருகிறார், சகுனி.

நாடாளுமன்ற முறையின் இழிவான 'குதிரை வியாபாரத்திற்கு' முகாந்திரமிடுவ தற்குத்தான், ஜெயாவைக் கழட்டிவிட்டு அ.தி.மு.க. தேரை காங்கிரஸ் ஒட்டுவதற் குத்தான் சகுனி சாமி தமிழக அரசியலில் தலையை நுழைத்தார். அதை ஈடேற்றவிடா மல் செய்தால்தான் ஜெயா கும்பலுக்கும் வாழ்வு என்றாகிவிட்டது. பொறுக்கி - கழி சடை அரசியலின் உச்சநிலை உதாரணங்க ளாக நிற்கிறார்கள் இருவரும்! இவர்கள் தமிழகத்தைப் பிடித்த சனியன்கள்! இரண்டு கும்பலையும் மக்கள் அடித்து விரட்டினால் தான் தமிழகத்திற்கு விடிவு! ● சுப்பு

படிப்பகம்

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

இவர்கள், பம்பாயில் நடைபெற்றுவரும் கலவரத்திலிருந்து தப்பி வந்த தமிழர் குடும்பங்களில் ஒரு பகுதியினர். கர்நாடகத்தில், கலவரங்கள் நடந்து முடிந்து ஒரு வருடமே ஆகியுள்ள நிலையில் நடந்துவரும் அடுத்த தாக்குதல் இது. சேரி நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்கத்துடன் நடத்தப்படும் இக்கலவரங்களின் பின்னணியாகச் செயல்படுவது சிவசேனா எனும் மதவெறி கும்பல். ''தமிழன் என்றால் தெற்கே ஓடு, முஸ்லிம் என்றால் பாகிஸ்தானுக்கு ஓடு'' எனச் சொல்லி, சொல்லி தாக்கப்படுகின்றனர். வயிற்றுப்பாட்டுக்காக தாங்கள் நடத்தி வந்த சிறு தொழில் நிலையங்களையும், கடைகளையும், பார்த்துவந்த உதிரி வேலை வாய்ப்புகளையும் இழந்தும், குருவிபோல் சேமித்து வந்த சிறு, சிறு உடமைகளைப் பறிகொடுத்தும், 'உயிர் இருந்தால் போதும், எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம்' என எண்ணி, பிறந்த இடம் தேடி ஓடிவந்துள்ளனர்.

இது, நியாயவிலைக் கடையில் கால்கடுக்க காத்து நின்றதற்காக, சென்னைவாசிப் பெண்களுக்கு தமிழக போலீசு தரும் பரிசு. பழைய குடும்ப அட்டைகளைப் புதுப்பிக்கவும், புதிய அட்டைகள் வழங்கவும் அரசு முறையாக திட்டமிட்டுக் கொள்ளாததுடன், அறிவித்திருந்த மாற்று ஏற்பாட்டின் ஆணையை நியாயவிலை கடைகளுக்கு அனுப்புவதில் தாமதித்தும் உள்ளது. இதன்

காரணமாக, அட்டைகளைப் பெறவு
பொருட்கள் வாங்கவும் நீண்ட நேரம் கா
ருந்த பெண்களுடன் முரண்பட்டு தகர
செய்துள்ளனர் அதிகாரிகள். இதனா
கொதிப்படைந்த பெண்கள், ஆத்திர
டன் பொருட்களையும், அட்டைகளை
வழங்கக் கோரி அதிகாரிகளுடன் சண்
யிட்டுள்ளனர். போலீசார், எதனை
விசாரிக்காது, கூச்சலிடுவதாகக் காரண
கூறி, பெண்கள் மீது தடியடி நடத்தி
இது, மேலும் பெண்களை ஆத்திரமடை
செய்யவே, அவர்கள் சாலை மறியலில்
பட்டுள்ளனர். அதிகாரிகளின் சமரசப் பே
சுகளுக்கு இணங்காது, தொடர்ச்சியாக
யலில் ஈடுபட்டிருக்கவே, சிறப்பு கா
படையினரை வரவழைத்து, மீண்டும் த
டிப் பிரயோகம் நடத்தியிருப்பதுட
விடாப்பிடியாக சாலையில் அமர்ந்திரு
பெண்களை, முடியைப் பிடித்து தற
வென்று இழுத்துச் சென்று அப்புறப்படு
யுள்ளனர்.

'சிறுபான்மையினர்' என்ற காரண
னால், பிழைப்பு தேடிச் சென்ற தமி
களை, ஓட, ஓடவிரட்டுகிறது மதவெறி
பல். உயிருக்கு உத்திரவாதம் தேடி தாய
திரும்பும் இம் மக்களுக்கு இங்குமட்டு
ஏது நிம்மதி? தமிழகத்திலோ சாதாரண
கள் விலங்கினும் கீழாக குடும்ப அட்டை
காக வரிசையில் வதைபடுவதோடு போ
சின் குண்டாந்தடிக்கும் உதைபடுகிறார்க
அங்கு மதவெறி குண்டர்கள், சமூக வி
திகள்! இங்கு பாசிச ஜெயாவின் போ
குண்டர்கள்! கர்நாடகத்து வெறியர்களிட
ருந்து தப்பி வந்த தமிழக அகதிகள் ''இ
ருந்து அவதிப்படுவதைவிட கர்நாடக கா
களிடமே கொலையுண்டிருக்கலாம்'' எ
வெறுத்துக் கூறும்படி புறக்கணித்தது இ
தமிழக அரசுதானே?! இன, மதவெறி கு
டர்களோடு பாசிச, தமிழின விரே
ஜெயா ஆட்சியை முறியடிக்க அணிதி
வதற்கு இன்னும் என்ன தயக்கம்?



படிப்பகம்